பாலர் கல்வி

தொகுதி 5	1940 ஹூ அக்டோபர் மீ விக்கிரம ஹூ ஐப்பசி மீ	பகுதி 7

இயற்கைப் பாடம் போதித்தல்

By **M. K. Ramamurthy,** B.A., L.T.
T. T. V. High School, Madras.

நாம் எல்லோரும் நாகரீக வாழ்க்கையில் ஈடுபட்டவர்கள். நம்மைச் சுற்றிலும் இருக்கும் சிருஷ்டியின் குணாதிசயங்களைக் கண்டறியாதிருந்தால் அது நமது வாழ்க்கைக்கே ஒரு குறையாகும். ஒருவனைப் படித்தவன் என்பதற்கு எண்ணும் எழுத்தும் மாத்திரம் கற்றுக்கொண்டால் போதுமா? அவன் சுற்றுப்புறத்திலிருக்கும் இயற்கை விசேஷங்களை நன்கு அறிந்துகொள்ளாவிடில் நாம் அவனைக் கற்றவனாகக் கருத முடியாது. இயற்கைப் பாடங்களில் கற்ற விஷயங்களை அடிப்படையாகக் கொண்டு பிற்கால ஜீவிய சாஸ்திர விஷயங்களையும் மற்ற சாஸ்திர விஷயங்களையும் கற்றறியலாம். தவிரவும் தோட்டவேலை, சுகாதார விஷயம் முதலியவற்றை நன்கு அறிவதற்கு இயற்கைப்பாடம் அஸ்திவாரமாகும்; குழந்தைகள் இயற்கைப் பாடம் கற்கும்பொழுது திறந்த வெளியில் உலாவி அதனால் ஏற்படும் ஆனந்தத்தை அனுபவிப்பார்கள்; இயற்கையிலுள்ள அழகையும், வாசனைகளையும், நிறங்களையும், இயற்கைப் பொருள்களின் வாழ்க்கையின் விசித்திரங்களையும் கண்டு மகிழ்ந்து உற்சாகம் பெறுவார்கள். இதுவே இயற்கைப் பாடம் போதித்தலின் முக்கிய நோக்கம். பிள்ளைகள் தங்களுடைய சுற்றுப்புறத்தில் உள்ளதை நேரில் கண்டு சொந்த அனுபவத்தினால் அறிந்துகொள்ளுதலே சிறந்தமுறை.

கற்பிக்கும் முறை:—இயற்கைப் பாடமும் மற்றப் பாடங்களைப் போல் ஒரு பாடமாகும். மற்றப் பாடங்கள் கற்றறிவதுபோல் ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன், கவனத்துடனும், பொறுமையுடனும், தொடர்ச்சியாகவும் விஷயங்களைக் கற்றறிதல் அவசியமாகும். ஆகவே இப் பாடத்தைக் கற்பவரும், போதிப்பவரும், சில குறிப்பிட்ட விஷயங்

களை எடுத்துக்கொண்டு குறிப்பிட்ட நோக்கத்துடன் பரிசீலனை செய்தல் அவசியம். செய்த ஆராய்ச்சியின் பலனாகக் கண்டறிந்த விஷயங்களைக் குறித்துக்கொண்டு அவைகள் எல்லாவற்றையும் ஒருமிக்கச் சேர்க்க வேண்டும். பொருள்களைப் பார்த்து அதன் உண்மைகளைத் தெரிந்து கொள்ளும்பொழுது மேற்போக்காகக் கவனித்தல் போதாது. ஆகையி னால் இப்பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியரும், கற்கும் பிள்ளைகளும் உண்மை கண்டறியும் மனோபாவத்துடன் விஷயங்களைத் தீவிரமாக் சர்ச்சை செய்து சாராம்சத்தை அறியவேண்டும். அரைகுறையாய் அறிந்துகொள்ளுதலும், கவனித்தலும், விஷயங்களைக் குறித்துக் கொள் ளுதலும் அரைகுறையான தீர்மானத்திற்கு வருதலும் இயற்கைப் பாடம் கற்பிப்பதற்குச் சரியான முறை ஆகாது. அவசரமாக கற்பிப்பதனால் பயனும் விளையாது. அது மாத்திரமல்ல, எந்த நோக்கத்தை முன்னிட்டு இப் பாடங்களைக் கற்பிக்க ஆசைப்படுகிறோமோ அந்நோக்கத்திற்கு அது இடையூறாக முடியும்.

இயற்கைப் பாடம் கற்பிப்பதில் முக்கியமான விஷயம் பிள்ளைகள் நேரில் அவர்கள் கற்கும் விஷயங்களைக் கண்டு அறியும்படிச் செய்வதே யாகும். அவர்கள் பார்த்தறியவேண்டிய தாவரங்களையும், பிராணிகளை யும் தனியாகப் பிரித்துக் காண்பிக்காமல் இயற்கையில் எவ்விதம் காணப் படுகின்றனவோ அவ்விதமே காணச் செய்யவேண்டும். தோட்டங்களிலும் மற்ற வெளிப்புறங்களிலும் அவர்களை அழைத்துச் சென்று அவர்கள் கற்கவேண்டிய விஷயங்களைக் காண்பித்து அவர்களைக் கவனிக்க செய்தல் அவசியம். மேலும் நன்றாகக் கவனித்து அவர்கள் முக்கியமான விஷயங் களைக் குறித்துக்கொள்வதற்காக அப் பிராணிகளையும், தாவரங்களையும் பள்ளிக்கூட அறையில் கொண்டுவந்து காட்டவேண்டும். பிறகு அவர்கள் கண்டறிந்த விஷயங்களை ஒருமிக்கச்சேர்த்து அதன்முக்கிய அம்சங்களைப் பொறுக்கி அவர்கள் பதார்த்த விஷயங்களிலிருந்து ஏற்படும் தீர்மானங் களை அறியச் செய்தல் வேண்டும். மேலும் என்ன விஷயங்களைக் கவ னிக்கவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லவேண்டும்.

பாட திட்டம்:—சுற்றுப் புறத்தில் இயற்கையில் காணப்படும் விஷயங்கள் எல்லா இடங்களிலும் ஒரேவிதமாயிராது. ஆகையால் இயற்கைப் பாட திட்டம் ஒன்றாக இருத்தல் இயலாது. ஓர் ஊரில் சில வித மரங்களும், செடிகளும், பிராணிகளும் அதிகமாகக் காணப்படும். மற்றோர் ஊரில் அவைகள் எல்லாவற்றையும் காணுதல் அரிதாகும். பிள்ளைகள் இருக்கும் ஊரில் சாதாரணமாகக் காணப்படும் இயற்கைப் பொருள்களைப்பற்றிக் கவனித்தலே இயற்கைப் பாடமாகும். சுற்றுப் புறத்தில் காணக் கிடைக்காத விஷயங்களைப் புத்தகங்கள் வாயிலாகவோ அல்லது சித்திரங்கள் மூலமாகவோ கற்பித்தல் பொருட் பாடம் ஆகுமே ஒழிய இயற்கைப் பாடமாகாது. இத்தகைய பொருட் பாடம் கற்பதில்

பிள்ளைகளுக்கு இயற்கைப் பாடங்களைக் கற்பிக்க விருக்கும் ஊக்கமும் விருப்பமும் இரா. தஞ்சை ஜில்லாவிலுள்ள ஒரு மாணவன் பருத்திச் செடியைப்பற்றிக் கற்பது இயற்கைப் பாடமாகாது. இனி, இயற்கைப் பாடத் திட்டத்தை உபாத்தியாயர்கள் தாங்கள் கற்பிக்கவேண்டிய விஷயங்களைச் சுற்றுப்புறத்திலுள்ள காலநிலைக்குத் தக்கபடி அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். ஏனெனில், இயற்கையில் காணப்படும் விஷயங்களைப் பிள்ளைகள் கற்றறிவதென்றால், அப்பாடங்களைப் பள்ளிக்கூடத்தில் கற்கும் மாதங்களில் அவர்கள் கற்கும் விஷயங்களின் சம்மந்தமான பொருள்களின் காட்சிகளை இயற்கையில் காணக்கூடிய மாதங்களாக இருத்தல் அவசியம். உதாரணமாக ஒரு செடியின் பூக்களைப் பற்றிய பாடத்தை அச்செடி புஷ்பிக்காத சமயத்தில் சொல்லிக் கொடுத்தல் நல்ல முறையாகுமா? காலநிலைக்குத் தக்கபடி விஷயங்களைக் கற்பித்தால் பிள்ளைகள் வெளியே போகும்போது கண்டு வந்து வகுப்பு அறைகளில் அவைகளை விவரித்துப் பேசி அப்பாட சம்பந்தமான விஷயத்தை மேலும் உபாத்தியாயர்களிடமிருந்து தெரிந்துகொள்ளலாம். பள்ளிக்கூடம் இருக்கும் பிரதேசத்தின் பருவத்தை ஒட்டிப் பாடங்களை கற்றல், பாட திட்டத்தின் விஷயங்களை பருவ காலத்திற்கு ஏற்றபடி வரிசை கிரமமாக அமைத்தல், பிள்ளைகள் விஷயங்களைக் கவனிப்பதற்கு அனுகூலமாயிருக்கும்.

இயற்கைப் பாடம் போதித்தலுக்கு மிகவும் அவசியமானது பள்ளிக்கூடத் தோட்டம். இதிலுள்ள செடிகள், பிராணிகள் இயற்கைப் பாடங்களிலுள்ள விஷயங்களேயாகும். இதிலுள்ள செடிகளின் வளர்ச்சியும், செடிகளின் வாழ்க்கையும் இங்கு வரும் பிராணிகளின் வாழ்க்கையும் தோட்டச் செடிகளின் வளர்ச்சிக்கு இடையூறாக இருக்கும் பூச்சிகளைப்பற்றியும் அவைகளின் வாழ்க்கையைப்பற்றியும் இப்பூச்சிகளுக்கு விரோதிகளான பறவைகளைப்பற்றியும் மற்ற பிராணிகளைப்பற்றியும் தெரிந்துகொள்ளுவதற்குத் தோட்டம் மிகவும் உபயோகமாகும். தோட்ட வேலையால் பிள்ளைகளுக்கு ஏற்படும் சாதகங்களைப்பற்றிப் பின்னால் விபரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தோட்டத்தினால் நாம் பெறும் சாதகங்கள் பல இருக்கின்றன. ஆனால் இங்கு அது இயற்கைப் பாடம் கற்பிப்பதற்கு அத்யா அவசியம் என்னும் ஒரு விஷயத்தை மாத்திரம் இவ்விடத்தில் கூறினால் போதுமானது. ஒரு சிறு தோட்டமாவது போடுவதற்கு இடமில்லாத பள்ளிக்கூடங்களில் சிறு தொட்டிகளைக்கொண்டு சில முக்கியமான செடிகளையாவது வளர்த்து அவைகளையாவது பிள்ளைகளுக்குக்காட்டி இயற்கைப்பாட விஷயங்களைப் போதித்தால் பிள்ளைகளுக்குப் பயன்படும்.

பிள்ளைகள் எல்லோருக்கும் பொருள்களைச் சேகரிப்பது இயற்கைக் குணம். இந்தக்குணத்தை நல்வழியில் செலுத்தி விருத்தி பண்ணு

வது உபாத்தியாயர்களின் கடமையாகும். இயற்கைப்பாடம் கற்பிப்பதற்கு வேண்டிய பொருட்காட்சிசாலை தயாரிப்பதற்கும் அதில் பல பொருள்களைச் சேகரிப்பதற்கும், பிள்ளைகளிடம் காணப்படும் இக்குணம் மிகவும் உதவியாகும். பட்சிகளின் இறகுகள், உலர்ந்த பழங்கள், பலவித இலைகள், மரங்களின் கொட்டைகள் இவைகளைச் சேகரித்து அடுக்கிப் பாடசாலையில் வைக்கவேண்டும். இப்பொருள்களைச் சேகரிப்பதைக் காட்டிலும் ஒழுங்குபடுத்தல் சிரமமானதென்று அநேகர் அனுபவத்தில் கண்டிருக்கலாம். இவைகளை ஒழுங்காகவைப்பதற்கு பல பள்ளிக்கூடங்களில் தனியாக இடம் கிடைப்பதில்லை. திறந்த இடங்களில் வைத்தால் இவை ஜாக்கிறதையாக இருப்பதில்லையென்று சிலர் குறை கூறுவதுண்டு. பள்ளிக்கூடங்களில் குறைகள் இருக்கத்தான் இருக்கின்றன. ஆயினும், ஊக்கத்துடனும், சிரத்தையுடனும் ஒரு ஆசிரியன் இவைகளைக் கவனமாகக் கவனித்து வந்தால் இக்குறைகளுக்கு அதிக இடமிராது. மேற்கூறியவைகளைத் தவிர பிள்ளைகள் எழுதிய படங்களையும் அல்லது மற்றப் படங்களையும் மண்ணால்செய்த பொம்மைகள், பஞ்சடைத்த பட்சிகள் முதலியவைகளையும் இக்காட்சிசாலையில் சேகரித்துக் கொள்ளலாம். ஒவ்வொரு பொருளின்கீழ் அதன் பெயரையும், அதைக் கொடுத்தவன் பெயரையும் ஒருதுண்டு கடிதத்தில் எழுதி ஒட்டவேண்டும். பாட விஷயங்களுக்குச் சம்மந்தமான பொருள்களையாவது சேகரித்தல் அவசியம். இவைகளை ஒழுங்காகவும் பார்ப்பதற்கு அழகாகவும் அமைக்க வேண்டும். ஒவ்வொரு பாட சம்மந்தமாக காட்சிசாலையிலுள்ள எந்தப் பொருள்களைக் காட்டலாமென்று உபாத்தியாயர்கள் தீர்மானித்து தங்களது குறிப்புப் புஸ்தகங்களில் குறித்துக்கொள்ள வேண்டும். காட்சிசாலையில் சேகரிக்கவேண்டிய படங்களில் இயற்கை காலெண்டர் ஒன்று அவசியமாகும். இதில் தினந்தோறும் இயற்கையில் காணப்படும் மாறுபாடுகளைக் குறித்தல் அவசியம். தாவர வாழ்கை பிராணிகளின் வாழ்க்கை இவைகளின் விஷயங்கள் தவிர காற்றின்போக்கு, அதுவீசும் திசை, மேகங்களின் நிலைமை, சூரிய உதயத்தின்நேரம், சூரிய அஸ்தமனத்தின் நேரம், இவைகளை எல்லாம் குறித்து அவ்விஷயங்கள் குறித்துள்ள கடிதங்களை ஒன்ருகச்சேர்த்து ஒரு புத்தமாக வைத்துக்கொள்ளலாம். இம்மாதிரி இயற்கைக்காலண்டர் தயாரிப்பதைத் தவிர பாடசாலைகளின் அறைகளில் ஒரு சுருக்கமான இயற்கைக்காலண்டர் தயாரித்தல் அவசியம். அதில் ஒரு பெரியவட்டம் வரைந்து அதைப் பன்னிரண்டு சம அங்கங்களாகப் (Sections) பங்கிட்டுக்கொண்டால் ஒவ்வொரு அங்கம் ஒரு மாதத்தைக்குறிக்கும். பெரிய வட்டத்தின் மையப்புள்ளியை மையமாகக்கொண்டு மற்றும் இரண்டு வட்டங்களை பெரிய வட்டத்திற்குள் இருக்குமாறு வரைந்துகொண்டால் இந்தப்படத்தில் 12 அங்கங்கள் காணப்படுவது தவிர ஒவ்வொரு அங்கத்திலும் மூன்று உப அங்கங்கள் இருக்கும். வெளிப்புறத்தில் இருக்கும் முதல் உப அங்கத்தில் ஒவ்

வொரு மாதத்தில் காணப்படும் பூக்கள் காய்கள் கனிகள் முதலியவற்றின் படங்களை வரைந்து கொள்ளலாம்.

இரண்டாவது உபஅங்கத்தில் அந்தந்த மாதங்களில் காணப்படும் பிராணிகளின் வாழ்க்கை விசேஷங்களைப்பற்றிக் குறிக்கலாம். உள்புறமிருக்கும் மூன்றாவது உப அங்கத்தில் காலநிலை (**Atmosphrics**) களைக் குறிக்கலாம்.

உல்லாசப் பிரயாணங்கள் :—பள்ளிக்கூடத்தின் பக்கங்களிலுள்ள தோட்டங்களுக்கும், வயல்களுக்கும் மற்ற வெளிப்புறங்களுக்கும் பிள்ளைகளை அடிக்கடி அழைத்துச் செல்வதனால், பிள்ளைகளுக்கு உற்சாகம் ஏற்படுவதைத்தவிர இயற்கைப்பாட புத்தகங்களை அறிவதற்கு அவர்களுக்கு ஒரு ஆர்வமும், அவைகளை அறிந்துகொள்ளவேண்டிய அறிவும், ஏற்படுகின்றன. உல்லாசப் பிரயாணங்கள் நடத்தும்பொழுது கவனிக்கவேண்டிய சில முக்கியமான விஷயங்கள் உள. முதலாவது, போய்ப்பார்க்க வேண்டிய இடத்திற்கு உபாத்தியாயரே முன்பாகப்போய் அங்குப்பிள்ளைகள் கவனிக்கக்கூடிய விஷயங்களை அறிந்துகொண்டு வரவேண்டும். இம்மாதிரிப் பிரயாணம் செல்லவேண்டிய இடங்கள் பள்ளிக்கூடத்திலிருந்து வெகு தூரமாய் இருக்கக்கூடாது. அவ்விதம் இருக்குமாயின், உபாத்தியாயர்கள் அவ்விடங்களுக்கு அழைத்துச் செல்லவேண்டிய வண்டிச் சாதனங்களை ஒழுங்காக ஏற்பாடு செய்யவேண்டும். ஒவ்வொரு உபாத்தியாயரும் சுமார் இருபது பிள்ளைகளுக்குமேல் அழைத்துக் செல்லுவது சிரமமான காரியம். ஒரு வகுப்பிற் 30 அல்லது 40 பிள்ளைகள் இருப்பார்களாயின் ஒரு தடவைக்கு 15 அல்லது 20 பிள்ளைகள் வீதம் அழைத்துச் செல்லுவது நல்லது. உல்லாசப் பிரயாணம் புறப்படுவதற்குமுன் பிள்ளைகள் எந்த விஷயத்தைப்பற்றிக் கவனிக்கவேண்டுமென்று தீர்மானித்து அந்த விஷயம் சம்மந்தமான குறிப்புகளை பிள்ளைகள் குறித்துக்கொள்ள வேண்டும். இம்மாதிரி செய்வதால் பிள்ளைகள் குறிப்பிட்ட விஷயங்களைப் பற்றிக் கவனமாக உற்று நோக்கி அதன் சம்மந்தமான விஷயங்களை நன்கு அறிவார்கள். ஒரே இடத்திற்குப் பலதடவை பிள்ளைகளை அழைத்துச்சென்று அவ்விடத்தில் கண்டறியக்கூடிய பல விஷயங்களைக் கண்டு அறிந்துகொள்ளலாம். உதாரணமாக ஒரு கிராமத்திலுள்ள ஒரு தோப்புக்குப்பிள்ளைகளை அழைத்துக்கொண்டுபோய் அதில் வளரும் மரங்களைப் பற்றியும் இலைகளைப்பற்றியும் ஒரு நாள் காண்பிக்கலாம். மற்றொரு தினத்தில் அதே தோப்பிலுள்ள வேறு விஷயங்களைக் கவனிப்பதற்கு மற்றொரு தரமும் செல்லலாம். சென்னையிலுள்ள உயிர்க்காலேஜுக்கு பிள்ளைகளை அழைத்து ஒருநாள் அதிலுள்ள பலவகை பறவைகளைப் பற்றிப் பிள்ளைகளைக் கவனிக்குமாறு சொல்லலாம். மற்றொரு தினம் வேறு சில பிராணிகளைக் கவனிக்குமாறு சொல்லலாம். இம்மாதிரியே எழும்பூரிலிருக்கும் மியூஸியத் (**Museum**) திற்கும், பார்க்கு (**Park**) களுக்கும் பலதடவைகள் அழைத்துச் செல்லவேண்டியதா யிருக்கும்

ஆரம்பப்பாடசாலையிலுள்ள பிள்ளைகளைச் சனி ஞாயிறு ஆகிய இரண்டு நாட்களிலும் இம்மாதிரி உல்லாசப் பிரயாணத்துக்கு அழைத்துச் செல்லலாம். ஆனால், அந்த உல்லாசப் பிரயாணம் சுமார் 4 அல்லது 5 மணி நேரத்துக்குள் முடியக்கூடியதாக இருத்தல்வேண்டும். உல்லாசப் பிரயாணம் முடிந்தவுடன் பிள்ளைகள் பார்த்த விஷயத்தைப்பற்றிப் பிள்ளைகளையே தாராளமாகப் பேசச்சொல்லி அவர்கள் ஏற்கெனவே குறித்துக்கொள்ளாத சில முக்கியமான விஷயங்களைக் குறித்துக்கொள்ளச் செய்யலாம்.

எல்லாவற்றையும் உல்லாசப் பிரயாணம் செய்து தெரிந்துகொள்ளுதல் சிரமமாகையால் பள்ளிக்கூடங்களிலேயே சில பிராணிகளை வளர்ப்பதற்கு வேண்டிய சாதனங்கள் அமைப்பதுண்டு. பல்லி, ஓணான் முதலியவைகளை வளர்ப்பதற்கு ஒரு கூண்டு செய்துகொள்ளலாம். இதற்கு அடிப்புறத்திலும் மேல்புரத்திலும் நெருக்கமான கம்பி வலைகளை அமைத்துப் பக்கங்களில் கண்ணாடி தகடுகளை பொருத்துதல் வேண்டும். சில பள்ளிக்கூட தோட்டங்களில் வரும் பறவைகளைப் பிள்ளைகள் நன்ருகக் கவனிக்கும் நிமித்தம் பள்ளிக்கூடத் தோட்டத்தின் நடுவில் ஒரு உயர்ந்த கொம்பை நட்டு அதன் முனையில் 3 அடி நீளம் 3 அடி அகலமுள்ள ஒரு சதுரமான பலகையை மட்டமாக அமைப்பார்கள். இதில் தினந்தோறும் தானியங்களைத் தூவி ஒரு கிண்ணத்தில் தண்ணீரையும் வைத்திருந்தால் பறவைகள் வழக்கமாக அங்கு வந்து தங்கும். பிள்ளைகள் அவைகளை நன்ருகக் கவனிக்கலாம். நீரில் வாழும் பிராணிகளை நன்கு கவனிப்பதற்கு ஒரு சிறிய அகுவேரியம் தயாரித்தல் நலம்.

(தொடரும்)

ஆரம்ப ஆசிரியர்களுக்கு ஒரு வேண்டுகோள்

ஆரம்ப ஆசிரியர்கள் வகுப்பில் சிறுவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும்போது அனுபவத்திற்கு வந்துள்ள முறைகளைக் கையாளுகின்றனர். சில சமயங்களில், சிற்சில விஷயங்களைப் போதிக்குங்கால் சந்தேகங்களும், சிரமங்களும் நேருவது சகஜம். எவ்வித சந்தேகங்கள் ஏற்படுகின்றன என்பதை தகுந்த கேள்விகளாக எழுதினுல் பாலர் கல்வியில் அவைகளுக்கு பதில் பிரசுரிக்கப்படும்.

பத்திராதிபர்.

கல்வியும் உலக நெருக்கடியும்

(ம. சி. சுந்தரேசுவரன், எம். ஏ., எல். டி.)

இருபதாம் நூற்றாண்டில் வாழ்பவர்களாகிய நாம், மகாப்பிரளயத்திற் கொப்பான இரண்டு பெரும்யுத்தங்களைப் பார்த்துவிட்டோம். சென்ற ஐரோப்பிய மகா யுத்தத்தின் கஷ்டங்களையும் நஷ்டங்களையும் கண்டு அஞ்சின நாம், போரை அறவே ஒழிக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு, சர்வதேச சங்கம்போன்ற ஸ்தாபனங்களையும் சாதனங்களையும் அமைத்துக் கொண்டோம். அவற்றை அமைத்த நாம் ஆண்டவன் உலகம் இப்பூவுலகினுக்கே வந்து விட்டதாக எண்ணினோம். இனி மாந்தர் போர் என்னும் பேய்க்கு அஞ்சி நடுங்கவேண்டிய தில்லையென்றும் மகிழ்ந்திருந்தோம். ஆனால், அறிவாளர் சிலர், இவ்வேற்பாடுகள் அனைத்தும் மற்றோர்கொடிய போருக்கு ஆயத்தங்களாகுமே யல்லாது, போரை ஒழிக்க இயலாதென்று அப்போதே கூறினர். அவர்கள் கூற்று நிஜமாகி விட்டது. சென்ற யுத்தம் முடிந்த இருபது வருஷங்களுக்குள்ளாகவே, அதைக் காட்டிலும் பெரியதும் கொடியதுமான யுத்தம் எழுந்து நடந்து வருகிறது. போர்வீரர்கள் மாத்திரமே யல்லாமல், சாதாரண மனிதர்களும், ஸ்திரீகளும், குழந்தைகளும்கூட கணக்கில்லாமல் மடிகின்றனர். மனிதனின் உயர்வையும், மேன்மையையும் காட்டும் பல அழகிய கட்டடங்களும் சாலைகளும் பாழாகி வருகின்றன. பொருள் நஷ்டத்திற்கோ எல்லையில்லை. சுயேச்சையாய் சமாதான நிலையில் வாழ்ந்து வந்த பல சிறிய தேசத்தினர்கள், தம் சுயேச்சையை இழந்து, பலமுள்ளவர்களால் ஒடுக்கப்பட்டு, நிர்ப்பந்தமான நிலையில் வாழ்ந்து வருகிறார்கள். யுத்த களத்திற்கு வெகு தூரத்திலுள்ள இந்தியர்களாகிய நாமும்கூட எச்சமயம் அந்நிலைமை நமக்குநேருமோ என அஞ்சி ஆயத்தமாகி வருகிறோம். இரு திறத்தினரும் இந்த யுத்தத்திற்குப்பின் உலகின் நிலை புதிய வகையாக அமைக்கப்பட வேண்டுமென்று கூறுகின்றனர். அந்நிலை யாது? அது எவ்வகைத்தினதா யிருக்கவேண்டும்?' என்பவற்றைப் பற்றி இந்த நெருக்கடியிலும் நாம் நினைக்காமல் இருக்க இயலாது. அவ்வாறு ஆராய்வது எதிர்கால அமைப்புக்குச் சாதகமாயிருப்பதோடு, அதைத் தழுவி நிற்கும் திறத்தினருக்கு இப்போது நம் பூரணமான அனுதாபத்தைக் காட்டி அத்தருணத்தைச் சீக்கிரமாகப்பெறுவதற்கும் உதவியாகும்.

இவற்றைப்பற்றி ஆராயுமுன், சென்ற யுத்தத்திற்குப் பின்செய்த ஏற்பாடுகள் ஏன் சமாதானத்தை நிலைக்கச்செய்யவில்லை என ஆராய்ந்தறிவது அவசியமாகிறது' இவ்வாராய்ச்சி முன்செய்த தவறுகளையே திரும்பவும் செய்யாமலிருக்கும்படி நம்மைத்தடுக்கக்கூடும், சர்வதேச

சங்கம்போன்ற ஏற்பாடுகள் பயன்படாமற்போனதற்குப் பல வெளிப் படையான காரணங்கள் கூறக்கூடும். ஆனால், அவை மூலகாரணமாகா. ஒன்றுகூடிச் சமாதான நிலையில் வாழவேண்டியவர்கள் மனிதர்கள். அதற்கு அத்தியாவசியமானது அவர்களின் இருதயம், நவநாகரிகத் தால் சீரழிந்துள்ள அந்த இருதயத்தைச் சுத்தி செய்ய முயலாமல் அப்படியே வைத்துக்கொண்டு, புறம்பான துணைகளை நாடியதே நம் முயற்சி வீணானதற்குக் காரணமாகும்.

இயற்கையில் மனிதன் பிறர் சகவாசத்தைத் தேடி அவர்களோடு கூடிச் சமாதான நிலையில் வாழும் இயல்புள்ளவனே. இதுவேயல்லாமல் தன்னைச் சுற்றியிருப்பவர்களின் நன்மைக்காகத்தான் பாடுபடும் சுபாவ முள்ளவனே. இக்காரணங்களால்தான் மிருகங்களைப்போல் வாழ்ந் திருந்த மனிதன் உயர்ந்த சிருஷ்டியாக இன்னும் விளங்குகிறான். இத் தகைய மனிதன், நவநாகரிகம் காரணமாய், அனைத்தையும் தேடும் தன்னையே தாழ்த்திக்கொண்டு பொருளைப்பெரிதாகப் பாராட்டலானான். அதையே வாழ்க்கை நோக்கமாகவும் தெய்வமாகவும் கொண்டாட லானான் இந்நிலையில் மனிதத் தன்மைக்கான உயர் குணங்கள் மங்கி மறைந்து, மிருகத் தன்மை மேலிடலாயிற்று. தற்கால மனிதரைக் கவனிக்குமளவில், மிருகங்களும் அவர்களோடு தம்மை ஒப்பிடுவதற்கு முழு மனதுடன் இசையுமா என ஐயமுற வேண்டியதாயிருக்கிறது. ஆகவே போற்றத்தக்க உலக அமைப்பை எதிர்காலத்தில் நிரந்தரமாக ஸ்தாபிக்க விரும்பும் அனைவரும் மிருகத்தன்மையில் ஆழ்ந்து கிடக்கும் மனிதனை உயர்த்தி, அவன் இருதயத்தைச் சுத்தி செய்து, மனிதத் தன்மையுள்ளவனாக்க முயலவேண்டியது அவசியமாகிறது.

எதிர்கால அரசாங்க அமைப்பு எங்கும் ஜனநாயக ஆட்சியாகவே இருக்கவேண்டுமென்பதைப் பலரும் அங்கீகரிப்பர். ஆனால் அது உண்மையான ஜனநாயகமாக இருக்கவேண்டும்; பொதுஜன நன்மையை நாடியே அது உழைக்கவேண்டும். இதைக் காலஞ்சென்ற கவிச் சக்கர வர்த்தியாகிய பாரதியார் 'பாரத சமுதாயம்' என்ற பாட்டில் வெகு அழகாகப் பாடியுள்ளார். அத்தகைய நிகரற்ற சமுதாயத்தை அமைக்க நாம் செய்யவேண்டியது யாது? மனிதர், பகைமை, பலாத்காரம், தன்னயத்தேட்டம், போட்டி, சுறண்டல் இவற்றைத் துறந்துவிட்டு, அன்பு, அஹிம்சை, ஒற்றுமை, சகோதரத்துவம் இவற்றை மேற் கொள்ளவேண்டும். பழைய வழிகளில் பழகினவர்களுக்கு இம்மாறுதலை அமைத்துக்கொள்வது கடினமாகவே தோன்றும். இவை இளமையி லிருந்தே பழகி ஏற்பட்டால்தான் சகஜமாகிவிடும். இதன்பொருட்டே தான், நாம் எத்தகைய வாழ்க்கையைச் சிறந்ததென எண்ணுகிறோமோ அதைப் பாடசாலையில் குழந்தைகள் வாழக்கூடிய வகையில் கல்வித் திட்டத்தைத் திருத்தி யமைக்க வேண்டுமென்று அறிஞர் பலரும் வற்புறுத்துகின்றனர், சரியான கல்விப் பயிற்சி மூலமாய் எதிர்காலப்

பிரஜைகளின் இருதயத்தை நாம் மேற்கூறிய நிலையில் அமைக்கத் தாமதமின்றி ஏற்பாடு செய்யாவிட்டால், சமாதானம் நிலைக்குமென்று எண்ணுவதற்கு இடமே யில்லை. இவ் வுண்மையையே ப்ரூஹாம் பிரபு என்பவர் அழகாகக் கூறியுள்ளார்.

"போர்வீரன் தன் மனம்போல் உலாவட்டும்; இக்காலத்தில் அவனுலாவது ஒன்றுமில்லை. நாம் பாராட்டிக் கருதவேண்டியவன் மற்றொருவன். ஆனால், அவன் சிலருக்குக் கம்பீரமானவனாகத் தோன்ற மாட்டான்; பொருட்படுத்தத் தகாதவனாகவும் காணப்படுவான். அவனே அரிச்சுவடியும் கையுமாயுள்ள ஆசிரியன். ராணுவ உடையிலுள்ள போர் வீரனை விட்டுவிட்டு நான் இவனையே முழுதும் நம்பி நிற்கிறேன்."

தவிர, உண்மையான ஜனநாயகம் வெற்றியுடன் நடைபெறவேண்டுமாயின், ஜனங்கள் களங்கமற்ற சுயேச்சை பெற்று வாழவேண்டும்; புத்திக் கூர்மையுள்ளவர்களாக இருக்கவேண்டும்; விஷய ஞானம் உள்ளவர்களாக இருக்கவேண்டும்; அப்போதைக் கப்போது எழும் பிரச்னைகளைத் தாமே தம் சுய புத்தியைக்கொண்டு ஆராய்ந்து முடிவு செய்யக் கூடியவர்களாக இருக்கவேண்டும்; தன்னலத்தைக் காட்டிலும் பொது நலத்தைப் பாராட்டுகிறவர்களாக இருக்கவேண்டும்; மானிட சமூகத்தின் உயர்வுக்கும் க்ஷேமத்திற்கும் பாடுபட வேண்டுமென்ற பற்றுள்ளவர்களாயிருக்கவேண்டும்; எந்நிலையிலும் உண்மையையும் நியாயத்தையும் கைவிடாதவர்களா யிருக்கவேண்டும். இக்குணங்கள் பலவும் ஜனநாயக ஆட்சி சமூகங்களில் காணப்படாம லிருப்பதே அதன் தாழ்வுக்குக் காரணமாகும். இக் குணங்களும் முன் கூறியவற்றைப்போல் இளமையிலிருந்து பழக்கக் காரணமாக ஏற்படவேண்டும். ஆகவே, கல்விச் சீர்திருத்மே சமூகச் சீர்திருத்தத்திற்கு அவசியமாயிருக்கிறது.

மேலே ஜனநாயக ஆட்சியில் மக்கள் பலரும் களங்கமற்ற சுயேச்சை பெற்று வாழவேண்டுமெனக் கூறினோம். பல நாட்டினரும் சுயேச்சைக்காகவே போராடுவதாகக் கூறுகிறார்கள். ஆனால், அவர்களின் போராட்ட மெல்லாம் நோக்கமற்ற போராட்டமாகவே உள்ளது. அது காரணமாய் மனிதர் ஒருவகைக் கொடுங்கோல் அரசை நீக்கிவிட்டு மற்றொரு கொடுங்கோல் அரசையே அமைத்துக் கொள்ளுகிறார்கள். குடியரசு, சர்வாதிகாரம், அபேதவாதம், பொதுவுடைமை போன்ற அனைத்தும் இவ்வாறு தோன்றியவையே. இதன் கவன மென்ன? அதைப் பார்க்கர் அம்மையார் மார்கேட்டில் ஆசிரியர் மகாநாட்டின் தலைவியாகச் செய்த பிரசங்கத்தில் தெளிவாக விளக்கியுள்ளார். "தனக்குச் சுயேச்சை வேண்டுமென முறையிட்டுப் போராடும் மனிதன் குழந்தைக்கு அச் சுயேச்சையைக் கொடுப்பதைப்பற்றி எண்ணினதேயில்லை. ஆகவே, தலைமுறை தலைமுறையாக மக்கள் சுயேச்சையில்லாமல், நிர்ப்பந்தத்திற்குள்ளாகி, ஆதிக்கத்தால் ஒடுக்கப்

பட்டு, தவறான இலட்சியங்களைக்கொண்டு, தன்னடக்கமில்லாமலும், சுயேச்சையை வகிக்கத் தகுதியில்லாதவர்களாகவும், அதை அனுபவிக்க இயலாதவர்களாகவும் தொடர்ச்சியாக வளர்ந்து வந்துள்ளார்கள். இன்னும் வளர்ந்துவருகிறார்கள்.'' குழந்தைக்கு வாக்குரிமை யில்லாததால் மனிதர் அவர்களை அடக்கி வைக்கின்றனர் போலும். இவ்வாறு ஒடுக்கப்பட்டும், அடக்கப்பட்டும் வளரும் குழந்தைகள் ஜனநாயக ஆட்சிக்கு எவ்வாறு தகுதியுள்ளவர்களாவார்கள்? இதனாலல்லவோ மாண்டிஸோரி அம்மையார் போன்ற அறிஞர்கள் குழந்தைகளின் சுயேச்சைக்காக வெகு பாடுபடுகிறார்கள்.

பிறக்கும் குழந்தை ஒவ்வொன்றும் தேசத்தின் ஆஸ்தியாகும். பிறந்தபின் ஒரு வருஷம் அல்லது இரண்டு வருஷங்கள் வரை அதன் போஷணை பெற்றோரின் பொறுப்பாகும். அதன்பிறகு அதன் வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் பெற்றோர் அரசாங்கம் இருவரும் பாத்தியப்பட்டவர்களாவார்கள். நாட்டுக் குழந்தைகள் தம் தம் அளவுக்கு வளர்ந்து கல்வி பயின்று ஏற்ற பிரஜைகளாவது அவசியம். இது அரசாங்கத்தின் பொறுப்பாகும். இதனாலன்றோ உலகமெங்கும் ஆரம்பக் கல்வி அரசாங்கத்தின் முதன்மையான பொறுப்பாக மதிக்கப்பட்டு வருகிறது. இப்பொறுப்பை அரசாங்கம் எக்காரணத்தை முன்னிட்டும் கழிக்கலாகாது. நம்மை ஆளப்போகும் வாக்காளர்களை அஞ்ஞான இருளில் ஆழ்த்தி வைத்துவிட்டு, ஜனநாயகத்தைக் குறைகூறுவதில் பயனென்ன? பணக்குறையைக் கூறிக்கொண்டு கல்வியபிவிருத்தியைத் தடை செய்வது சரியல்ல. 'வேண்டுமானால் வேரிலும் காய்க்கும்' என்பதுபோல், கல்வியை அபிவிருத்தி செய்வது என்று உறுதி செய்துகொண்டால், பணம் தானே கிடைக்கும். யுத்தம், கலகம், பஞ்சம், வெள்ளம் முதலிய நெருக்கடிகள் ஏற்படும்போது, பணமில்லையே என்று வாளாஇருந்து விடுகிறோமா? இல்லை. அதுபோல் கல்வி விஷயத்திலும் நாம் நடப்போமாயின், பணக்கஷ்டம் நம்மைத் தடுக்கவே தடுக்காது. இச்சந்தர்ப்பத்தில் சார்லஸ் ஸம்மர் என்பவர் இது விஷயமாகக் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

"யுத்தத்தில் செலவிட்டுள்ள பணத்தை எனக்குக் கொடுங்கள். அதைக்கொண்டு நான், ஒவ்வொரு ஆண், பெண், சிசுவையும், மன்னர்களும் இராணிகளும் மதிக்கக்கூடிய உடையை உடுக்கச் செய்கிறேன். பூமியெங்கும் ஒவ்வொரு பள்ளத்தாக்கிலும் ஒரு பள்ளிக்கூடம் கட்டுகிறேன். ஒவ்வொரு குன்றின் மீதும் சமாதானத்திற்கெனப் பிரதிஷ்டை செய்த ஆலயம் ஒன்றும் அமைக்கிறேன்."

ஆரம்பக்கல்வி மிகவும் தாழ்ந்துள்ள நம் நாட்டிற்கு இது மிகவும் முக்கியமாக கவனிக்கவேண்டிய விஷயமாயிருக்கிறது. நாட்டிலுள்ள ஆண் குழந்தைகளும் பெண் குழந்தைகளும் கல்வி பயில்வதற்கான வசதி

கள் ஏற்பட்டாலன்றி நாம் முன்னணியில் நின்று பண்டையப் பெருமையைப் பெறுவது கனவாகவே நின்றுவிடும். இதற்குச் செலவு அதிகம் தான் ஆகும். ஆனால், இந்தப் பணம்முழுதும் கந்து வட்டியோடு நாட்டுக்கே திரும்பிவிடும்.

அடுத்தபடியாகக் கவனிக்கவேண்டியது கல்விச் சீர்திருத்தம். நம் நாட்டில் நடைபெறும் பாடசாலைகள் பலவும் எதிர்கால சமூக இலட்சியத்திற்கு இசையாத வரையில்தான் நடந்து வருகின்றன. இந்தியச் சமூகம் மேற்கொண்டுள்ள இலட்சியங்களுக் கேற்றபடிக் கல்வித் திட்டத்தின் இலட்சியங்கள் திருத்தி அமைக்கப்படவேண்டும். அவ்விலட்சியங்களாவன. உண்மை, அன்பு, அஹிம்சை, சகோதரத்வம் என்பனவே. பிறகு, வகுப்பறை முறைகள் முழுதும் மாறவேண்டும். பாட திட்டத்தையும், பரீட்சைகளையும் தெய்வங்களாகப் பாராட்டும் மனப்பான்மை நீங்கிக் குழந்தையைப் பிரதானமாகக் கருதும் மனப்பான்மை ஏற்படவேண்டும். கல்விப் பயிற்சி முறைகள் குழந்தையின் இயல்புக்கு இசைந்தவையாய் இருக்கவேண்டும். பாடசாலைக்கு வருமுன் குழந்தை தன் முயற்சியாலேயே பண்டங்களைக் கையாண்டும், பார்த்தும், செய்தும் வியக்கத்தக்க அறிவையும், திறமையையும் பெறுகிறது. பாடசாலையில் சேரும்போது அது உருவானவற்றைச் செய்ய ஆசைகொண்டுள்ளது. அவ்வாறு செய்வதற்கு நாம் இடங் கொடுப்போமாயின், அது தன் முயற்சியாலேயே அறிவையும், திறமையையும் பெற வல்லது. இதற்கு மாறாக நாம் அவர்களை நெருக்கமான ஆசனங்களுக் கிடையே ஒடுக்கி அடைத்து, அங்கங்களை அசைக்காமலும், பெருமூச்சுகூட விடாமலும் பதுமைகள்போ லிருந்துகொண்டு, ஆசிரியர் சொல்வதைக் காதால் கேட்கச் செய்கிறோம். இதனாலன்றோ நம் பாடசாலைகளைக் கேட்கும் பாடசாலைகளென அழைக்கின்றனர். இம் முறையில் உலகைப் பற்றிய நேரான பரிச்சயம் பிள்ளைகளுக்கு ஏற்படுவதில்லை; சுயயோசனையும் அபிப்ராயமும் கிடையாது; ஒன்றைச் செய்யும் ஆற்றலும் திறமையும் இல்லை.

இதைக் கூறும்போது சிலர் சில ஆட்சேபணைகளைக் கூறிச் சுலபமாகத் தள்ளிவிடுகிறார்கள். இப்போதுள்ள ஆசிரியர்களையும், உத்தியோகஸ்தர்களையும் வைத்துக்கொண்டு அது சாத்திய மில்லை என்பர். புதிய நிலைமைக்குத் தகுதியானவர்களாவது அவர்கள் கடமையெனத் தெரிந்துவிட்டால், அவர்கள் சுலபமாகவும் சந்தோஷமாகவும் தம்மைத் தகுதியானவர்கள் ஆக்கிக்கொள்வார்கள். இன்னும் சிலர் இப் புது முறைகள் தோன்றிய நாடுகளிலேயே பலனளிக்க வில்லை எனக் கருதுகின்றனர் எனக் கூறுகிறார்கள். இவ்வாறு கூறும் ஒருவருக்குப் புது முறையின் வெற்றியைப் புகழ்ந்து கூறுகிறவர்கள் நூறு பேர்கள் இருக்கிறார்கள் என்பதை அவர்கள் அறிந்திலர் போலும். தவிர, இயல்புக்கு ஒத்

துள்ள முறை சிலாக்கியமானது என்பதற்கு வேறு சாட்சிகளும் வேண்டுமோ ?

இதுவரை கூறியதிலிருந்து நம் நாட்டுக் கல்வித்திட்டம் முழுதும் மாற்றி அமைக்கப்படவேண்டுமென்பது வெளியாகிறது. புதிய திட்டம் நாட்டிலுள்ள குழந்தைகள் அனைவருக்கும் கல்விப்பயிற்சி கொடுப்பதைக் கடமையாகக் கருதி அதற்குவேண்டிய ஏற்பாடுகளையும் பெற்று விளங்க வேண்டும். இந்தியச் சமூக இலட்சியங்களுக்கிசைய கல்வியின் இலட்சியமும் மாற்றப்படவேண்டும். பாடசாலையில் குழந்தைகள் பூரண சுயேச்சையைப்பெற்று, எதிர் காலத்தில் வாழப்போகும் வாழ்க்கையை அங்கு வாழ்ந்து பழகவேண்டும். இவ்வாறு அவர்கள் பழகுவது காரணமாய்த் தாம் ஏற்ற பிரஜைகளாவதோடு, தற்போதுள்ள முதியோரின் வாழ்க்கையையும் மாற்றக்கூடியவர்களாகி, அவ்வாறு மாற்றவும் இடமுண்டு. குழந்தைகள் தங்களுக்கு இயல்பான 'செய்து கற்றல்' என்ற முறைப்படி தம்முயற்சியாலேயே கற்கவேண்டியவற்றைக் கற்கவேண்டும். இவ்வழியேதான் குழப்பம் நிறைந்துள்ள நம் நாட்டில், அமைதியை ஸ்தாபித்து ஜனங்கள் ஒற்றுமையாகவும் க்ஷேமமாகவும் வாழும் சமுதாயத்தை நாம்பெற இயலும். இத்தகைய சமுதாயம் நம் நன்மையை மாத்திரம் கருதினாலும்கூட அதி சீக்கிரத்தில் ஏற்படவேண்டியது அவசியமாகிறது. ஆனால் பாரத மக்களாகிய நம் கடன் இத்துடன் நின்றுவிடவில்லை. தத்தளித்துக் கொண்டிருக்கும் உலகம், ஒத்து வாழ்வதற்கு இன்றியமையாத அன்பு, அஹிம்சை, சத்தியம், சகோதரத்துவம் ஆகிய உபதேசத்தை, பாரத சமுதாயம் உலகினுக்கு வழக்கம்போல் எப்போது தந்துதவும் எனவெகு ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறது. அவ்வுபதேசத்தை வாய்மொழியாகவோ எழுத்து மூலமாகவோ மாத்திரம் வெளியிடுவது பொருந்தாது. இந்திய மக்களாகிய நாம் அத்தகைய வாழ்க்கையை வாழ்ந்தே காட்ட இயலும். அதற்குமுன் கூறியதுபோல் கல்விச் சீர்திருத்தமே ஏற்ற சாதகமாகும்.

பிள்ளையின் மனம்

[208-ம் பக்கத் தொடர்ச்சி.]

(M. Subramaniam, *Assistant, L.M.C., High School, Shiyali.*)

XXII பௌருஷம் (Personality)

இச்சாசக்தியும் (Will Power) ஒழுக்கமும் (Character)

கல்வியின் விசேஷ அம்சம்

கல்வி, அறிவு, ஞானம், வித்தை, சாஸ்திரப் பயிற்சி, ஒழுக்கம் முதலியவற்றைக் குறித்துப் பேசும்போது மனிதவர்க்கத்தை விலக்கிக் கவனிப்பதில்லை மனிதனுடைய பிறப்பு உரிமைகளில் கல்வி முதலாக இருக்கின்றது. இவ்வுரிமையை மனிதன் எப்படியாகிலும் பெற்றே தீரவேண்டும். இல்லாவிடின் மனிதனை விலங்கினத்தோடுதான் சேர்க்க வேண்டும். கல்வியைக் குறித்து நினைக்கும்போது பொதுவாகப் பலருக்கும் "பள்ளிக்கூடம்." "புஸ்தகம்," "ஆசிரியர்" என்னும் நினைப்புக்களே வரலாம். இப்படிக் கருதுவது கல்வியின் தன்மையை மிகவும் குறுக்கினதுபோல் ஆகும். ஏனென்றால் உலகத்தில் இயற்கையாக அமைந்துள்ள ஒவ்வொரு பொருளும் மனிதனுக்கு ஒரு நல்லாசிரியனாகும். மனிதனுடைய ஒவ்வொரு அனுபவமும் ஒரு பொக்கிஷம் போன்ற புத்தகம். இப்படிப் பல்வழிகளாலும் சிறப்படைந்து விளங்கக் கூடிய பிறப்பு உரிமையாகிய கல்வி, சீர்கேடான நிலைமையை அடைந்து விட்டால், உயர்ந்த சமூக லக்ஷியங்களும், புனிதமுள்ள சமயக் கொள்கைகளும், சிறந்த ஒழுக்க விதிகளும், உயிர்களின் இன்பமான வளர்ச்சிக்கு ஏதுவாய் உள்ள சகல கலாசாஸ்திர விருத்திகளும் தாழ்ந்த தன்மையை அடைந்து மனித சமூகத்தையே பாழாக்கிவிடும். கல்வியின் விசேஷ அம்சம் இஃது அல்ல. "சிந்தனு சக்தி", "பேசுந்திறமை" "பகுத்தறிந்து செய்யும் வகை" ஆகிய இம்மூன்றும் ஒன்றுக்கொன்று முரண்பாட்டை அடையாமல் நிலையான சாதனைகளில் இருக்கச் செய்வதே கல்வியின் விசேஷ அம்சம். எவ்வுயிரும் இன்புற்றிருக்க முயற்சிசெய்து இழிவு, பகை. அச்சம், அவா, கபடம், வஞ்சனை, பொறாமை, லோபம், பெருமை முதலிய துர்குணங்களை விலக்கி, ஆண்மை, சோர்வின்மை, உறுதி, மேன்மை, வீரம், சுதந்திரம், கருணை, உபகாரம், சாந்தம் முதலிய நற்குணங்களை விருத்தியாக்கித் தழைத்து ஓங்கச் செய்வதே கற்றவனுடைய விசேஷ குணமாக இருக்க வேண்டும். பொதுவாக நல்ல ஒழுக்கமும், பௌருஷ உயர்வு, சிறந்த இச்சா சக்தி, ஒன்றைச் சாதிக்கும் திறன் முதலிய லக்ஷியங்களே பள்ளிக்கூடங்களில் பிரதானமாக இருக்க வேண்டும்.

சிறப்புள்ளவன் யார்?

நன்றாகக் கற்றவன் சிறப்புள்ளவனா, ஒழுக்கமுள்ளவன் சிறப்பானவனா? எவ்விதமான கல்வி முறை உயர்ந்தது, எது தாழ்ந்தது, சிறப்பு, மேன்மை, உயர்வு, தாழ்வு என்னும் குணங்கள், இடம், காலம், முதலியவற்றைப் பொறுத்திருக்கின்றன. ஒரு சமூகத்தாருக்கு ஒரு காலத்தில் சிறப்பாகத் தோன்றும் ஒரு குணம், மற்றொரு சமூகத்தாருக்கு இன்னொரு காலத்தில் அதே குணம் வித்தியாசமாகத் தோன்றும். ஒருவன் தன்னை எவ்வளவுக்கெவ்வளவு அடக்க முயற்சி செய்கிறானோ அதுவே சிறந்த கல்வி என்று சிலரால் கருதப்படுகிறது. ஒருவன் தன் உள்ளத்தை எவ்வளவுக்கெவ்வளவு வெளியாக்குகின்றானோ அவனே சிறந்தவன் என்று மற்றும் சிலரால் கருதப்படுகிறது. சிலர் இராஜ தந்திரிகளையும், மற்றும் சிலர் இலக்கிய ஆசிரியர்களையும், இன்னும் சிலர் மதாசாரியர்களையும், வேறு சிலர் தானம் செய்வோர்களையும், பின்னும் சிலர் யோகிகளையும், சிறப்புள்ளவர்களாகக் கருதலாம் ஒரு சமூகம் தலைவனையும், இன்னொரு சமூகம் யுத்த வீரனையும், வேறு ஒரு சமூகம் நல்லொழுக்கமுள்ளவனையும் விசேஷ மனிதன் என்று நினைக்கக் கூடும். இடம், காலம், லக்ஷியத்தன்மை, சமூக மனப்பான்மை எவ்வாறு இருப்பினும், "நல்லொழுக்கம்", "நற்கிரியை", "தன்னை அடக்கல்" ' தன்னை வெளிப்படுத்தல்", தன் நல் இஷ்டத்தை வினைத்திறனில் புகுத்தல், தன் நிலையில் நிற்றல் முதலிய சீரிய குணங்களே ஒருவனுக்குச் சிறப்பைத் தரும். இத்தகைய சீரிய குணங்கள் தற்போது அமைந்துள்ள கல்விச்சாலைகளில் விருத்தியாக முடியுமா? நல்லொழுக்கமும் தனித்தன்மையும் வாய்ந்த ஒருவனைக் காண முடியும். ஒரு சிறந்த மஹா புருஷன், தற்போதுள்ள கல்விச்சாலைகளில் வளர்ந்து வெளியாகி சமூக முன்னேற்றத்தையும், உலக நன்மையையும், தன்னலம் கருதாது கிளம்பக்கூடுமா? தற்போதுள்ள கல்வி முறைதான் என்ன?

நவீன சமூகமும் கல்வி முறையும்

நவீன சமூகத்தின் அமைப்பும், எண்ணங்களும், கல்விச்சாலைகளும் அடிக்கடி திகைப்பைப் பெருக்குகின்றன. சகல சமூக தர்மங்களும், ஜாதிமத பேத அமைப்புக்களும், ஒழுக்க லக்ஷியங்களும் பிறவும் நவீன பொருள் ஆதாரதத்துவத்திற்கும், அரசியல் திட்டங்களுக்கும், பிற நாட்டு ஒழுக்கங்களுக்கும், தகுந்தாற்போல் அமைந்துகொள்ளப் பார்க்கின்றன. இவ்விதமாகவே பற்பல கல்வித் துறைகளாகிய தொழில், இயந்திர சாஸ்திரம், கைத்தொழில், மதம், கலாவிருத்தி, போர்முறைப் பயிற்சி, உடல் வனப்பு முதலிய எண்ணிக்கையற்ற கல்விகளும் அமைந்து இருக்கின்றன. இவை எல்லாம் ஒரு பள்ளிக்கூடத்தில் பல நோக்கங்களோடு புகுத்தப்பட்டு இருக்கின்றபடியாலும், இன்னும் பற்பல தன்மைகளாலும் உருமாறி தனியாய் விளங்க இடமில்லைபோலும்! ஒரு பள்ளிக்

கூடத்தில் பற்பல ஜாதிப்பிள்ளைகள், பல அதிகாரிகள், பலவிதமான பாட திட்டங்கள், பற்பல மணிநேரங்களில் பற்பல குணமும் ஒழுக்கமும் வாய்ந்த ஆசிரியர்கள் வந்து போதிப்பது பற்பல சுற்றுப்புற நிலைமைகளிலிருந்து அநேகவிதமான சிந்தனையுடைய பிள்ளைகள், கல்வி லக்ஷியங்கள் பல. கற்கவேண்டிய நூற்கள் பல. பரீக்ஷைகள் பல. பற்பலவிதமான கேள்விகள் விடைகள் பிள்ளைகளின் வரம் பற்பல. அவர்களின் இஷ்டத்திற்கும் மாறுன விஷயங்களும் அநேகம். இத்தகைய பற்பல சக்கரங்களுடைய கல்வி இயந்திரத்தில் மாட்டிக்கொண்டு வெளிவந்த பின்பு சிறுவனுடைய ஒழுக்கமும் குணமும் எவ்வாறு அமைந்திருக்கும் என்று கூறமுடியாது. இருப்பினும் ஆசிரியரின் லக்ஷியம் ஒருபோதும் மாறக் கூடாது. "பௌருஷ வளர்ச்சி" "சிறந்த இச்சாசக்தி" "உயர்ந்த நல்லொழுக்கம்" இவைகளே லக்ஷியங்களாக இருக்க வேண்டும்.

ஆசிரியரின் நோக்கம்

இந்த நிலைமையில் ஆசிரியர் பல்கோடி. மனமுள்ளவராயும் (Million-Minded) ஒரே ஆத்ம சக்தியுள்ளவராயும் (Single-Souled) இருந்தாலன்றி, பற்பல பிள்ளைகளின் சிந்தனைகளையும் செய்கைகளையும் சரியானபடி ஒழுங்குக்குக் கொண்டு வருவது அசாத்தியம் நல்லொழுக்கத்திற்கு வேர்களாகிய நற்பழக்கம், நல்மனது, நல்வினை, சுயசக்தி, மாறுக் குணம், புது நிலைமைகளைச் சரிவர அறிய போதுத் திறமை இவைகளைப் பலப்படுத்த வேண்டும். இப்படிப் பலப்படுத்துவதற்கு அனுகூலமாக இருக்கும் இச்சா சக்தி எவ்வாறு வளர்கின்றது என்று பார்ப்போம்.

இச்சா சக்தி என்றால் என்ன?

சிறு குழந்தைகள் முதன்முதல் எழுத ஆரம்பிக்கும்போது பார்த்தால், அவர்களுடைய இச்சா சக்தியானது புலப்படுகிறது. எழுதுகோலை இறுகப் பிடிக்கிறார்கள். கைவிரல்களுக் கிடையில் அதை அழுத்துகின்றார்கள். மேஜையின் மேல் தங்கள் உடம்பை வளையும்படி செய்கிறார்கள். உதட்டைக் கடித்துக்கொள்ளுகிறார்கள். கண்கொட்டாமல் எழுத்தையும் எழுதுகோலையும் பார்க்கின்றார்கள். புருவங்களை நெரித்துக்கொள்ளுகிறார்கள். உட்கார்ந்திருக்கும் நாற்காலியின் கால்களை தங்கள் கால்களால் கெட்டியாக அணைக்கிறார்கள். இடது கையால் கற்பலகையை அல்லது காகிதத்தை அழுத்திப் பிடிக்கிறார்கள். எழுத்துக்கள் சரியாக வராவிட்டால் சிற்சில சமயங்கள் அழுகின்றார்கள். இத்தகைய விரைப்பான செய்கைகள் பிறருக்கு அனுவசியமாகத் தோன்றினும் அவர்களுக்கு அவை ஒரு சக்தியைத் தருகின்றது. மேலும், ஒரு குழந்தை தன் தகப்பனாரைப் பார்த்து "நான் அதைச் செய்தேன்." "எனக்கு அந்த இடம் தெரியாது" "என் இஷ்டமான படம் இது"

என்று சொல்லும்போது தன்னுடைய நிலையிலிருந்தே செய்கிறது. தாய் தந்தை குறிப்பிட்ட ஒரு வேலையை அது செய்யும்போது, சுய முயற்சியி னுலும், பிறருடைய உதவியை அறியாமலே எதிர்பாராமலும் செய்ய முயல்கின்றது. சில பிள்ளைகள் தங்களுக்குத் தெரியாத கணக்குகளை அருகில் இருப்பவன் காட்டினுலும் அதைப் பார்த்து எழுதாமல் உறுதி யான மனமுள்ளவர்களாக இருக்கின்றுர்கள். எனவே இச்சா சக்தியின் தன்மையானது "நான்" "எனது" "எனக்கு" என்னும் உருவமா கவும், சுய நம்பிக்கை, சுய முயற்சி, தன்னிலையில் சாதித்தல், மன உறுதி, வினைத்திறன் உறுதி, சுயமதிப்பு முதலிய குணங்களோடும் சேர்ந்துள்ளது

இச் சக்தியை எவ்வாறு விருத்தியாக்குவது? வீட்டிலும், வெளியி லும், பள்ளிக்கூடத்திலும், வாழ்க்கையிலும், சிறுவர்கள் நினைக்கும் ஒன்றைச் செய்து முடிக்கப் பயிற்சி அளிப்பது சுலபமான வேலையன்று. நினைத்து ஒன்றைச் செய்வதற்குத் தக்க உடல் வலிமையும், நரம்புகளின் கூட்டுறவும், இருப்பதோடு ஒன்றுக்கொன்று முரண் அடையாமல் இசைந்து செய்வதற்குப் போதுமான உடற்பழக்கமும் வேண்டும். தசை நார், நரம்பு, இருதயம், சுவாசப்பைகள், மூளை முதலியவை சரியானபடி வேலை செய்ய நல்ல இரத்த ஓட்டம் அவசியம். இதற்கு அனுகூலமானது காற்ருேட்டமான இடங்களில் உடற் பயிற்சி அளித்தலேயாகும். இத் தகைய பயிற்சிகளால், இச்சாசக்தியானது அசைவு உண்டாகும். உடல் உறுப்புக்களை முதன்முதல் தன்வசமாக்கி, அவற்றை ஆளும் நிலைமைக்குக் கொண்டுவருகிறது. இப்படி உடல் உறுப்புக்களை வேண்டியபோது, தவறு இல்லாமல், திறமையுடன், செய்கையில் ஈடுபடுத்தச் செய்விப்பது, உடல் பயிற்சிக் கல்வி ஆசிரியரது வேலை. கல்வி பயிலும் நேரங்களில் பிள்ளை களைத் தனித்தனியே உட்காரச் செய்வதோடு தனித்தனி வேலைகளைக் கொடுத்து அவர்கள் அவற்றைச் செய்து முடிக்க ஊக்கம் அளிக்க வேண்டும். ஒவ்வொரு வேலையிலும் சிறுவர்கள் தங்களுடைய சொந்த புத்தியையும் உபகரணங்களையும் உபயோகிக்கச் செய்யவேண்டும். பிழை ஏற்பட்டால், அது உண்டான காரணத்தை அவர்களைக்கொண்டே ஆரா யச் செய்து அதைத் திருத்தவேண்டும். வேண்டிபோது நிதானம், கவ னம், சொல் வன்மை, உறுதி, கண்டிப்பு, ஆற்றல் முதலியவற்ருல் ஆசிரி யர்கள் இச்சாசக்தியை வளர்க்கவேண்டும். ஆனுல் சிறுவர்களுடைய வேலையில் அடிக்கடி குறைசொல்லி, அவற்றில் ஆசிரியர்கள் தலையிட்டால் அவர்களுடைய சுயபுத்தியும், செய்திறனும் மங்கிவிடும். மந்த குண முள்ளவனை அடிக்கடித் தூண்டியும், புத்திசாலிகளைக் கண்காணித்தும் வரவேண்டும். குறித்த நேரத்தில் குறித்த வேலையை, சரியான முறைப் படி ஒழுங்காக விரைவில் செய்து முடிக்கும் உற்சாகத்தை ஆசிரியர் ஊட்டவேண்டும். அதிகமாக வற்புறுத்தினுல் பிள்ளைகளின் மனம் முறிந்து அதைரியம் அடைந்து சோர்வில் அழுந்துவார்கள் ஆகையால் ஆசிரியர் வேலையின் தன்மை சிறுவனுடைய உடல், மனம், அக்கரை முதலியவற்

றின் நிலைமை சுற்றுப்புற வன்மை இவைபோன்றவற்றை ஆராய்ந்தும் நிதானித்தும் செய்யவேண்டும். இப்படி ஆசிரியர்கள் செய்வாராயின், பிள்ளைகளுடைய இச்சாசக்தியானது விருத்தியாகி, மெய்வருத்தம், பசி, தூக்கம், அவமதிப்பு, முதலியவற்றையும் கவனிக்காது கருமத்திலே கண்ணாகிவிடும். இனி இச்சா சக்தியும், மனோசக்தியும், ஆத்ம சக்தியும் சேர்ந்த ஒழுக்கம் இன்னதென்பதைப் பார்ப்போம்.

ஒழுக்கத்தைப்பற்றிய பிரச்னை

பரம்பரை வித்தாகிய ஒழுக்கம் என்னும் விதை, நல்ல வீட்டு வளர்ப்பில் பிறந்து, சுற்றுப்புற வாசனையில் வளர்ந்து, பள்ளிக்கூடங்களில்சீர் அமைந்து சமூகத்தொண்டிலும் சமூகத்திலும், சிறக்கக் களைத்து, சோதனை நிலைமைகளைமீறி காயாகி, சர்வஜன நன்மையில் கனியாக மாறுகிறது. எனவே ஒழுக்கமானது, பரம்பரை, வீட்டு நிலைமை, சுற்றுப்புரவாசனை, பள்ளிக்கூட விசேஷ பழக்கம், ஸ்வபாவம், பெருமுயற்சி, தன்னை அடக்குதல், பிறர் நலச்செய்கையில் ஈடுபடுதல் தன்னலம் கருதாமை முதலிய உயர்குணங்கள் இதில் அடங்குவதால், இது உயிருக்குச் சமானமானது. ஒழுக்கமானது ஒவ்வொருவனிடத்திலும் தனித்து விளங்குகின்றபடியால் இதை ஒரு "தனி அம்சமாகவே" (Distinctive mark) பாவித்து மேல் நாட்டார் இதைக் "காரக்டர்" (Character) என்கிறார்கள். அதாவது ஒவ்வொருவனும் ஒவ்வொருவிதமாகத் தனித்தன்மை அடைந்து இருக்கிறான் என்றும், அத்தன்மையே, சுபாவ லக்ஷணம் என்றும், இந்த லக்ஷணம், கல்வி, கேள்வி முயற்சி அனுபவம் முதலியவற்றால் வளர்ந்து விருத்தியடைகிறதென்றும் அவர்கள் சொல்கிறார்கள். தனித்தன்மை என்று சொல்லும்போது ஒவ்வொருவனுடைய குணமும் ஒருவிதமான சுயமதிப்புள்ள உணர்ச்சியை (Selfregarding feelings) மேற்கொண்டு இருக்கிறதென்றும் இவ்வுணர்ச்சி, சமூக நன்மை, ஆத்மவிருத்தி முதலியவற்றில் ஈடுபடுகின்றதென்றும் கூறுகிறார்கள். இது உண்மை. பெருந்தன்மையான காரியங்களில் ஈடுபட்டு அவற்றில் சந்தோஷப்படாதவன் நல்லவன் என்று சொல்லமுடியாது" என்று "அரிஸ்டோடல்" (Aristotle) கூறுகிறார்.

ஒழுக்கமும் மனோதத்தத்துவ சாஸ்திரமும்

ஒழுக்க விதிகளை ஆராயும் நூல் நீதி சாஸ்திரமாக இருக்க, மனோதத்துவத்திற்கும் ஒழுக்கத்திற்கும் சம்பந்தம் உண்டா? உண்டு. மனோசக்தி, (Mental Power) உடல் சக்தி (Physical Power) இச்சா சக்தி (Will Power) சுபாவ குணம் (Instincts), முதலிய அகநிலைமையும், சுற்றுப்புறவன்மை (Environmental Influence) பரம்பரை (Heredity) பிரயாசை (Effort) கல்வி (Education) முதலிய புறநிலைமையும், அனுபவமும், மனோதத்துவ சாஸ்திரத்தில் விசேஷமாகச் சம்பந்தப் பட்டிருக்கின்றன. மேலும் சகல சக்தியையும் அடக்கி ஆளும்

திறமை மனோ சக்திக்கே உரியது. ஆகையால் ஒழுக்க வளர்ச்சிக்கு மனோதத்துவ அறிவு அவசியம்வேண்டும்.

ஆசிரியரும்—ஒழுக்க வளர்ச்சியும்

மனிதனைப்பற்றிய அறிவே மனிதகுணத்தை சீர் அமைத்து விருத்தியாக்கும் சிறந்த பெரியோர்களது ஜீவியசரித்திரம், விசேஷமத போதனை நல்ல லக்ஷியங்கள் அடங்கிய இலகியப்பயிற்சி, பற்பலநாட்டுச் சரித்திர சம்பவங்களை உருவாக்கிய வீரர்களுடைய சரித்திரங்கள், தெய்வபக்தியுள்ள மதாசாரியர்களின் சரித்திரம் முதலியவற்றை சிறுவர்களுக்கு ஊட்டவேண்டும். நல்ல நீதி நூல் பயிற்சி செய்விப்பதோடு, கற்றதையும், கேட்டதையும் சிறிதளவாகிலும் செய்கையில் மாற்றும்படி ஆசிரியர்கள் முயலவேண்டும். இனி பௌருஷம் என்பதன் தன்மையைக் கவனிப்போம்.

"பௌருஷம்" என்றால் என்ன?

வால்மீகர் உத்தம புருஷருடைய லக்ஷணங்களைப்பற்றி இராமாயணத்தில் கூறி இருக்கின்றார். சிறந்த மதாசாரியர்களான பௌத்தர், இயேசு, சங்கர், முகமத், இராமாநுஜர் முதலியோரும், மற்றும் கவிஞர்களும் சீர்திருத்தம் செய்தோர்களும், தத்துவ சாஸ்திரிகளும், ஆசிரியர்களும், யுத்தவீரர்களும், இலக்கிய ஆசிரியர்களும், பிறரும், உத்தம புருஷ லக்ஷணங்கள் பொருந்தினவர்களே. பௌருஷம் இன்னதென்பதையும் அது எவ்வாறு வளர்ச்சி அடைகிறது என்பதையும் பற்றி தெரிந்து கொள்வது இயலாதகாரியமாகும். ஏனென்றால் மனிதவர்க்கத்தின் வரம்பை வரை அறுக்கமுடியாது. மனிதகுணத்தின் விசேஷத்தைத் திட்டமாகச் சொல்லவுமுடியாது. தோற்றத்திலும் குணத்திலும், புத்தியிலும், திறமையிலும், பழக்க வழக்கங்களிலும், ஒழுக்க விதிகளிலும், கல்வி கேள்விகளிலும், விருப்ப வெறுப்புக்களிலும், உணர்ச்சிகளிலும், அனுபவங்களிலும் ஒன்றை அறிந்து வெளியிடும் தன்மையிலும், மனிதர்களுக்குள் எவ்வளவோ வித்தியாசம் இருக்கின்றது. சீலம் வாய்ந்தவர்கள் சிலர். போக்கிரிகள் சிலர். சிலர் பார்வைக்கு அழகுள்ளவர்களாயும் பிறரை வசீகரம் செய்யும் தன்மை உள்ளவர்களாயும் இருக்கிறார்கள். சிலர் பார்வைக்கு பயங்கர உருவத்தோடும், அருவருப்பான குணத்தோடும் இருக்கின்றார்கள். சிலர் தங்கள் வேலைகளில் வெகு சமர்த்தர்களாயிருந்து, தங்கள் எஜமானர்களைப் பல்வழிகளாலும் திருப்தி செய்கின்றார்கள். சிலர் எப்போதும் எவ்விடத்திலும், யாரோடும் சண்டை இட்டுக்கொண்டே இருக்கிறார்கள். சிலர், தங்களைவிட தாழ்ந்தவர்களிடத்திலும், நயமாகவும், பிரியமாகவும் இருந்து, அவர்களோடுக் கூடிக்குலாவி இன்புற்று இருக்கிறார்கள். வேறுசிலர் எப்போதும் தனித்து இருந்து தன்னைப்பற்றியே நினைத்துக்கொண்டும், தன் சௌகரியங்களைக் கவனித்துக்கொண்டும், தன்னைப் புகழ் செய்துகொண்

டும் இருக்கிறார்கள். இத்தகையோர் ஒருவேளைப் பிறரைச் சந்தித்துவிட்டால், தன்னைப்பற்றியும் தன் விஷயத்தையுமே பேசுவார்கள். பொறாமை, வஞ்சகம், சூது, பொய் களவு, குடி முதலிய துர்குணங்களில் பிரியமுள்ளவர்கள் சிலர். சிலர் உண்மை, தெய்வபக்தி, பரோபகாரம், உதாரகுணம், தயை முதலிய நற்குணங்களால் விளக்குகின்றார்கள். சிலர் உடல், பொருள், ஆவி இவற்றைத்தத்தம் செய்கிறவர்களாயும், மற்றும் சிலர் டம்பம், பெருமை, மதிப்பு கௌரவம் இவற்றைச் சம்பாதிக்கிறவர்களாயும் இருக்கின்றார்கள். சிலர், ஞானம், கல்வி, சொல்வன்மை, புத்தி புகட்டல், பரோபகாரம், சமூகநன்மை, முதலிய குணம் வாய்ந்தவர்களாயும். உறுதியுள்ளவர்களாகவும் இருக்கின்றார்கள். சிலர், குறும்பு, வம்பு, குயுக்தி, வீண்பேச்சு, முதலியவற்றை மேற்கொண்டவர்களாய் இருக்கின்றார்கள். அகன்ற மார்பும், பருத்து உருண்டு திரண்ட தோள்களும், மலர்ந்த கண்களும், அழகான நீண்ட மூக்கும், பொன்னிறமான காந்தியும், விசாலமான நெற்றியும், நீண்ட கைகளும், உயரமான உருவமும், உடையவர்கள் மிகச்சிலரே. எனவே உடல் வனப்பு (Physical Beauty) அகத்தின்அழகு (Beauty of the Heart and feelings) மனோகுணம் (Mental Characteristics) சிறந்த ஒழுக்கத் தன்மை (High Moral Nature) வினைத்திறன் (Ability to do) உறுதியான இச்சா சக்தி (Strong will Power) உயர்ந்த நீதி உணர்ச்சி (High Ethical Sense) முதலிய குணங்களே "பௌருஷத்தின்" தன்மைகளாகும். இக்குண விசேஷங்களின் மூலம் எது?

பௌருஷ மூலங்களைப்பற்றி சில கோள்கைகள்.

நில நிபுணர்கள் பௌருஷத்தன்மையைக் குறித்து ஆராய்ந்து தங்கள் அபிப்பிராயங்களை வெளி இட்டு உள்ளார்கள். "பௌருஷத்தை ஒழுங்கு படுத்தும் சேகரிகள்" (Glands Regulating Personality) என்னும் புத்தகத்தில் பேர்மன் (Berman) என்பவருடைய கருத்து உபயோகமானது. பிடியிடரி சேகரி (Pituilary gland) கபாலத்திற்குள் அமைந்திருக்கிறதென்றும், இது இருவகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. என்றும், இவை எலும்புக்கூடு வளர்ச்சியையும் ஆண்மை அல்லது பெண்மையையும் அதிகரிக்கின்றது என்றும், தொண்டைக்கருகில் அமைந்திருக்கும் "தைராயிட்" சேகரி (Thyroid), ஊக்கத்தையும் ஒன்றைச் செய்யும் சக்தியையும், ஆட்ரனேல் சேகரி (adronal) சண்டையிடும் குணம், மூர்கம், வெகுளி, தாக்கும்தன்மை முதலிய குணங்களையும், உண்டாகுவதாகக் கூறியுள்ளார். எவ்விதமாக இருப்பினும் பௌருஷத்திற்கு மூல காரணங்கள் (1) உடல் நேர்மை (Physique) (2) கபவாத பித்த இரத்த முதலியவற்றால் அமைந்திருக்கும் தேகததன்மையாகிய வேதித் தன்மை (Chemique) (3) சுபாவகுணம், (Instincts). (4)நுண்ணறிவு, முதலியனவே. சாதாரணமாக உலகத்தில் உடல் அழகே எல்லாவற்றைக்காட்டிலும் எடுத்துக்காட்டி ஒன்றை வசீகரம் செய்கிறது. பண்

டைக் காலத்துக் கிரேக்கர்களும் உடலில் அமைந்திருக்கும், பித்தம் கபம், இரத்தம், வாதலேத்துமம், முதலியவற்றின் நிலைமையால், முன் கோபம், எரிச்சல், குணம், மந்தம், துக்கம் நிறைந்த சோர்வு ஆகிய இவை உண்டாகின்றன என்று எண்ணி இருந்தார்கள். ஒருவன் எவ்வளவுதான் கல்விகற்றுப் புறசம்பந்தம் முதலியவற்றால் பாதிக்கப்பட்டாலும் சுபாவகுணம் மாறுமேதவிர அடியோடு ஒழியாது. புத்தியால் எதையும் சாதிக்க முடியுமாகையால் நுட்பமான அறிவு (Intelligence) பௌருஷத்திற்கு அவசியம் வேண்டும். குறைவான புத்தியுள்ளவர்களே குற்றம் முதலிய செய்கைகளில் ஈடுபடுகின்றார்களாம். எனவே, உடல் நேர்மை, வேதிமைத்தன்மை சுபாவகுணம், நுண்ணறிவு, முதலியவை அவசியம் பௌருஷத் தன்மைக்குவேண்டும.

ஒரு கேள்வி

பௌருஷத் தன்மையைப் பற்றிய நவீன ஆராய்ச்சிகளையும், அம் சங்களையும் பார்த்தோம். ஆனால் ஆசிரியருக்குப்பலன் உண்டாகும்படியான விஷயம் என்ன ? ஆசிரியருடையலக்ஷியம் என்ன ? தற்காலத்தில் அமைந்துள்ள கல்விமுறைகள் பிரகாரம் ஆசிரியர் ஒருவனுடைய பௌருஷத்தின் ஆரம்பத்தன்மையை கண்டறியமுடியுமா (Discover) கண்டறிந்த பின் அதைத் தகுந்தபடி விருத்தியாக்க முடியுமா (Develop) விருத்தியாக்கியபின் அதை சமூக நன்மையில் பிரயோஜனப் படுத்த முடியுமா (Utilise) இத்தகைய முயற்சிக்கு வசதியான அக நிலைமைகளும் ஆசிரியருக்கு வசதியாக இருக்கின்றனவா ?

"சிறுவர்களின் பௌருஷத் தன்மை"

சிறுவர்களின் பௌருஷம் அதிக விசேஷமாகத் தெரியாது. ஏனென்றால் சிறு வயதில் ஒரு குணமானது ஒரு உறுதியான நிலையை அடைந்திராது. ஒவ்வொருவனும் ஒரு தனித்தன்மையோடு (Individuality) விளங்குகிறான். இத்தன்மை சுபாவகுணத்தோடு ஒட்டியே இருக்கிறது. இக்குணம் பொதுவாகப் பரம்பரை சுற்றுப்புறம் முதலியவற்றோடு சம்பந்தப்பட்டே இருக்கிறது. கல்விச்சாலைகளில் இக்குணத்தைக் கொஞ்சந்தான் சீராக்க முடியும். அடியோடு ஒழிக்க முடியாது. பள்ளிக்கூட சம்பந்தத்தால் திடீரென்று புதிதாக ஒன்று தோன்ற முடியாது. புத்தருடைய ஜீவகாருண்ய குணம் பிறவியிலேயே அமைந்து பின்பு வளர்ந்தது. இயேசுவின் அன்பும், சங்கராசாரியின் அற்புதமான தெய்வீக அறிவும், அலக்ஜாந்தரின் விசேஷ திறமையும், இளைய பிட்டின் (Younger Pitt) அரசியல் நிர்வாக புத்தியும், சிவாஜியின் நாட்டுப்பற்றும் வீரமும், கிளைவின் சண்டை செய்யும் குணமும், பாரதியாரின் கவி இயற்றும் திறனும் பிறவிக் குணத்திலேயே அமைந்து பின்பு வளர்ந்து பள்ளிக்கூடத்தில் சிற்சிலசமயங்களில் பிரகாசித்தனவே தவிர, பள்ளிக்கூடம் இத்தகைய பௌருஷத் தன்மையை கவனித்து வளர்க்க

வில்லை. எனவே பௌருஷம் சிறுவர்களுடைய சுபாவ குணத்தில் பொருந்தியுள்ளது. மேலும் பள்ளிக்கூடங்களில் இத்தகைய தனிக்குண மானது தனிமையாகவே விளங்கும் இத்தகைய தனிக்குணமானது சுபா வத்தோடு *சம்பந்தப்பட்டு*, (Emotions) மனோவிகார உணர்ச்சியை முன் கொண்டு வெளியாகின்றது. *தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும்* (Self Preservation) *சுபாவம், பயத்தோடும் சண்டையிடும் குணம், கோபத்தோடும் நூதனத்தில் ஆவல், ஆச்சரியத்தோடும், அடக்குதல்* (Repression) *வெறுப்போடும், தன்னை தாழ்த்தும் தன்மை, வணக்கத் தோடும் அன்பு, இரக்கம், வாஞ்சை முதலியவற்றோடும் சேர்ந்து வெளி யாகின்றன.* இத்தகைய ஒரு சுபாவ குணம் விசேஷமாக வெளியாகி அதற்குத் தகுந்த சீர் உணர்ச்சியோடு (Sentiment) நல்லவழியில் பிரயோ ஜனப்படுவது பௌருஷத்தன்மை எனலாம்.

மூன்று தன்மைகள்

சுபாவ குணம் பொதுவாக பௌருஷ வளர்ச்சி சம்பந்தப்பட்ட வரையில் (a) *தான், தனது, தன் காரியம், தற்புகழ்ச்சி, பெருமை அல்லது* அகங்காரத் *தன்மையாகவும்* (Egosistic) (b) *சமூக நன்மை, பிறர் நலன் அடையும்பொருட்டு உழைத்தல் அல்லது* பரோப கார சிந்தை (Altruistic mind) *தன்மையாகவும், அன்பு கருணை, உண்மை, கடமை, செய்திறன் வன்மை முதலிய மஹா உன்னத லக்ஷி யங்கள் கொண்ட* சீர் உணர்ச்சித் தன்மையாகவும் (High Sentiments) *தோன்றுகின்றன.* இவற்றோடு *எப்போதும் பொதுவாகச் சம்பந்தப் பட்டது* தன்மதிப்பு சீர் உணர்ச்சிகளும் (Self-Regarding Sentiments) *இந்த* உணர்ச்சியே சகல செய்கைகளுக்கும் குணத்திற்கும், பலமாக இருந்து, புகழ்ச்சி இகழ்ச்சி முதலியவற்றைத் தாங்கிக்கோள்கிறது. *இதை ஆசிரியர் ஆதாயப்படுத்த வேண்டும்.*

பள்ளிக்கூடமும்—பௌருஷ வளர்ச்சியும்

ஒரு சிறுவனுடைய ஒழுக்கத்தை பெற்றோர்களும், ஆசிரியர்களும் அதிக நிலாக்கியமாக விருத்தியாக்க முடியாது என்றாலும் சிற்சில பொறுப்பான காரியங்களால் சிறுவர்களுடைய பௌருஷத்தன்மைகளை அறிந்து அவற்றைப் பிற்காலத்தில் விளங்கும்படி அஸ்திவாரம் போட லாம். நல்ல சுபாவம் பிரகாசிக்கும்படி சிறுவர்களுடன் அபிமானத் தோடு பழகி மிதமாக அவர்களைப்புகழவேண்டும். தீயவற்றை இளக்க *மான மனத்தோடு உறுதியுடன் அடக்கவேண்டும். நயமும்* கண்டிப்பும் *சமயத்திற்குத் தகுந்தாற்போல் காட்டவேண்டும்.* விசேஷ *ஒழுக்க உணர்ச்சியை ஆசிரியர்கள் சிறுவர்களிடம் காணமுடியாது. என்றாலும் ஒழுக்க உணர்வை அடிக்கடி ஊட்டவேண்டும். சண்டையிடுதல் முதலிய கெட்ட குணங்களை ஆதாயப்படுத்தும் பொருட்டு* உயர்ந்த உணர்ச்சியில் (Sublimation) ஈடு *படுத்தவேண்டும். முரடர்களும் சண்டையிடும்*

குணமுள்ளவர்களும் பிற்காலத்தில் விசேஷ சேனைத் தலைவர்களாகலாம். செய்யுள், சங்கீதம், சித்திரம், நாடகம், சிறந்த கதை, நீதிநூல், முதலிய வற்றால் சிறுவர்களுடைய உள்ளக்கிளர்ச்சியை உண்டாக்கி, நன்மைகளில் புகுத்தலாம். பிள்ளைகளுடைய வீட்டு நிலைமை, பரம்பரை, தாய் தந்தையர்செய்யும் தொழில் முதலியவற்றைக் கண்டுகொண்டு வேண்டும்போது பரிதாபத்தோடும், அன்போடும், வற்புறுத்தல் இல்லாமல், நிலைமைகளைச் சீர்திருத்தவேண்டும். எப்போதும் எதிர் மறை வாக்கியங்களைக் காட்டிலும், வியங்கோளும் உடன்பாடும் நல்லது. ஒரு மாணக்கனிடத்தில் ஒரு விசேஷமான வரம் அல்லது திறமை இருக்கலாம், இதை ஆசிரியர் விருத்திசெய்ய பிரயாசைப்படவேண்டுமே தவிர அடக்கி நசுக்கிவிடக் கூடாது. தெய்வபக்தி, இச்சாசக்தி, கிரியாசக்தி முதலியவற்றை சந்தர்ப்பம் அகப்படும்போதெல்லாம் ஊட்டவேண்டும். ஆசிரியர்கள் தங்கள் பழக்க வழக்க, ஒழுக்கங்கள் மூலமாக, முன்மாதிரியாயிருந்தால்தான் சிறுவர்களும் குணத்தில் பிரகாசிக்கமுடியும். பொதுவாகக் கல்வி லக்ஷணம் "அழகான காக்ஷி இன்பமான இசை முதலியவற்றின் நடுவில் சுகமான இடத்தில் ஒவ்வொரு பொருளின் நன்மையைப் பெற்றுக்கொண்டு நம்முடைய வாலிபர்கள் இருக்கவேண்டும்" என்பது பிளேட்டோ (Plato) வின் அபிப்பிராயம். முற்றிற்று.

அன்பர்களுக்கு அருள் விருந்து

ஸ்ரீ அருணகிரிநாதர் அருளிய கந்தரனுபூதியைப் பாடி வழிபடும் மெய்யன்பர்களுக்கு நினைத்தவண்ணம் ஸ்ரீ முருகப்பெருமான் காக்ஷியளித்து இருமைப் பயனையும் அளிப்பர் என்பது ஆன்றோர் துணிபு. ஆதலின், ஸ்ரீ மகா கந்தர் சஷ்டியை முன்னிட்டு, கந்தரனுபூதி ஐம்பத்தொரு செய்யுளையும், அஷ்டோத்திர சத நாமாவளியையும் பாக்கட் அளவில் அன்பர்கள் இலவசமாக மக்களுக்கு வழங்க வேண்டி நாங்கள் அடக்க விலைக்கு ஆர்டர் கொடுப்பவர்களின் பெயரில் அச்சிட்டு அனுப்புகிறோம்

100 பிரதிகளின் அடக்க விலை ரூ 1—0—0

(தபாற் சிலவு அணு 0—4—0 தனி)

முக்கிய கவனிப்பு:— இம்மாதம் 31-ந் தேதிக்குள் வரும் ஆர்டர்கள்தான் கவனிக்கப்படும். ஆதலின், அன்பர்கள் தங்களுக்குத் தேவையான புத்தகங்களுக்காக முன் பணத்துடன் ஆர்டர்கள் அனுப்பக் கோறுகின்றோம். ஆயிரம் புத்தகங்கள் ஆர்டர் கொடுப்பவர்களுக்குத் தபாற் செலவின்றி அனுப்பப்படும்.

முகுந்தன் அண்டு கம்பனியார்

புத்தக வியாபாரிகள்

வண்ணாரப்பேட்டை :: :: சென்னை

விஞ்ஞானம்

R. Mahadevan, B. A., L. T.

எட்டாம் வகுப்பு

I காற்றடைக்கும் கருவி

நாம் விஞ்ஞான சாஸ்திரம் படிப்பதின் நோக்கம் நம்மைச் சுற்றியுள்ள விஷயங்களைத் தெரிந்துகொள்ளுவதும், இச்சாஸ்திரம் நமக்கு எவ்வாறு உதவுகிறது .என்பதை அறிவதுமேயாகும். தற்காலத்தில் சிறிய கிராமங்களில்கூட துவிச்சக்கர வண்டி உபயோகிக்கப்படுகிறது. ஒரு பையனிடம் துவிச்சக்கர வண்டியிருந்தால் அவனைச் சுற்றி நான்கு பையன்கள் அவ்வண்டியில் சவாரி செய்யும் ' தமாஷை ' அனுபவிக்கக் காத்துக்கொண்டிருப்பார்கள். துவிச்சக்கர வண்டியில் நாம் சுகமாகச் செல்லுவதற்குச் சாதனமாயுள்ளது எது? அதன் ரப்பர் குழாயிலுள்ள காற்று அல்லவா? ரப்பர் குழாயில் காற்று இருந்தால் நாம் எவ்வளவு உற்சாகத்துடன் செல்லுகிறோம்! குழாயில் ஒரு முள் தைத்து காற்று வெளியே சென்றுவிட்டால் எவ்வளவு கஷ்டப்படுகிறோம்? சமீபத்தில் யாராவது காற்று அடைக்கும் கருவி (Biycle pump) வைத்திருக்கிறார்களா என்று தேடுகிறோம். இக்கருவி எவ்வாறு சக்கரத்தின் ரப்பர் குழாயில் காற்றை அடைக்கிறது என்று கவனிப்போம்.

காற்றின் சுருங்கி விரியும் தன்மை

காற்றுக்கு இறுகுந்தன்மை, அல்லது சுருங்கும் குணம் உண்டு. ஒரு அகன்ற பாத்திரத்தில் தண்ணீர் எடுத்துக்கொண்டு அதில் ஒரு கண்ணாடிப் பாத்திரத்தைக் கவிழ்த்தால், தண்ணீர் உட்சென்று பாத்திரத்திலுள்ள காற்று சுருங்கும். பாத்திரத்தைக் கொஞ்சம் மேலே தூக்கினால் அது விரியும். வில் வண்டிக்கும் கட்டை வண்டிக்கும் என்ன வித்தியாசம்? வில்லுக்குச் சுருங்கி விரியும் தன்மையுண்டு. இதனால் தான் வில் வண்டியில் பிரயாணம் செய்வது சுகமாக இருக்கிறது. வில்லுக்கு இருக்கக்கூடிய சுருங்கி விரியும் தன்மை (Elasticity) காற்றுக்கு அதிகமாக இருக்கிறது. இதை உபயோகித்துத்தான் நாம் ரப்பர் குழாயில் காற்றை நிரப்புகிறோம்.

காற்றடைக்கும் கருவிகளில் அநேக விதங்கள் உண்டு. ஆனால் எல்லாவற்றிலும் காற்றை அமைக்கும் முறை ஒன்றே. எல்லாக் கருவிகளிலும் பிஸ்டன் இருக்கிறது. இந்தப் பிஸ்டன் ஒரு பாராலுக்குள் (Barrel) முன்னும் பின்னும் நகரும். பிஸ்டனின் வெளிப் பக்கத்தில் கைப்பிடி ஒன்று உண்டு. உட்புறத்தின் நுனியில் ஒரு தோல் கிண்ணம் (Leather washer) இருக்கிறது. பிஸ்டனை அழுத்தும்போது தோல்

கிண்ணத்தின் வாய் விரிந்து பாரலின் பக்கங்களில் உறைந்து கிண்ணத்திற்குமுன் இருக்கும் காற்று பின் செல்லாமல் தடுக்கிறது. ஆகையால் காற்று பாரலிலுள்ள துவாரத்தின் வழியே சக்கரத்திலுள்ள குழாய்க்குள் செல்லுகிறது. ரப்பர் குழாயில் ஒரு வால்வ் (Valve) அல்லது ஒரு திறப்பு மூடி இருக்கிறது. இது காற்றை குழாய்க்குள் செல்லவிடும். ஆனால் குழாயிலிருந்து வெளியே செல்ல விடாது. இந்த வால்வ் ஒரு துவாரங்கொண்ட சிறு இருப்புக் குழாயும் அதைச்சுற்றியுள்ள ஒரு சிறு ரப்பர் குழாயும் கொண்டது. காற்று பாரலிலிருந்து வரும்போது அக்காற்றின் அழுத்தும் சக்தியினால் இரும்புக் குழாய்க்கும் அதைச் சுற்றியிருக்கும் ரப்பர் குழாய்க்கும் இடையில் வழியுண்டாகி காற்று சிறிய துவாரத்தின் வழியே ரப்பர் குழாய்க்குள் செல்லும். சென்றவுடன் ரப்பர் குழாய் சிறிய துவாரத்தை அடைத்துக்கொள்ளும். அதனால் காற்று ரப்பர் குழாயிலிருந்து பாரலுக்குள் போக முடியாது.

பிஸ்டனைப் பின் இழுக்கும்போது தோல் கிண்ணத்தின் வாய் குவிந்து அதற்கும் பாரலுக்கும் இடையில் வழி ஏற்பட்டு, தோல் கிண்ணத்தின் பின்புறம் இருக்கும் காற்று பிஸ்டனுக்கு முன்னே செல்லும். மறுபடியும் பிஸ்டனை அழுத்தும்போது இன்னும் கொஞ்சம் காற்று சக்கரத்திலுள்ள ரப்பர் குழாய்க்குள் செல்லும். இவ்வாறு போதிய அளவுக்கு துவிச்சக்கர வண்டியில் நாம் காற்றை அடைத்துக் கொள்ளலாம்.

வாழ்க்கை சம்பவங்களை நடுமையாகக்கொண்ட பாடதிட்டம்

(ஆகஸ்டுமாதத் தொடர்ச்சி)

S. ஜகந்நாதன், டீசர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை

3. மிருகக்காட்சி சாலை

1. நேரில் பார்வையிடுதல் :

உற்சவ காலம், சர்க்கஸ் மிருகக் காட்சி : குரங்கு, கரடி, யானை—வித்தையாட்டி, மிருகக் காட்சி சாலை இவற்றில் எது ஏற்றதாகவிருக்குமோ அதைப் பார்வையிடுதல். பார்வையிடுங் காலத்தே சில குறிப்புக்களை எடுத்துக்கொள்ளவும்.



மிருகத்தின் பெயர்—அவயவங்கள்—நிறம்—செய்யும் வேடிக்கை. செய்து காட்டும் காரியம், என்ன செய்து கொண்டிருந்தது, பழக்க வழக்கம், ஆகாரம்.

2. செய்து பார்த்தல் :

A. படம் சேர்த்து ஒட்டுதல்—அட்டையில் மிருகங்கள்போல் சித்திரம் எழுதி அட்டையின் இரண்டு புறமும் வர்ணமிட்டு வெட்டுதல்.

அட்டை ஈர்க்குச்சி, பலகை கம்பி } இவைகள் கொண்டு மிருகங்களுக்குக்கூண்டு செய்தல். இங்கு காண்பிக்கப்படாத கோபுரக் கூண்டுகள் கூட செய்யமுடியும்.



அட்டை ஈர்க்குச்சி: இவைகொண்டு பக்ஷிகள் கூண்டு செய்தல்.



ஒட்டகம், யானை, வரிக்குதிரை போன்றவைகளைக் கட்டிப்போட களிமண், கெட்டியான குச்சி கொண்டு கம்பங்கள் செய்தல்.

B. எழுத்து வேலை—பெயர்கள்—எச்சரிக்கை விஷயங்கள்—மற்றும் இங்கு சித்திர மூலமாய்க் காட்டிய பிரகாரம் மிருகங்கள் படங்களைக் கொண்டு ரங்க ராட்டினம், மிருகங்களின் சபை இவை செய்துகொள்ளலாம். சிறிய பழங் குடை ஒன்றைக்கொண்டு ஒரு ரங்க ராட்டினம் செய்வது நன்றாக இருக்கும்

சம்பாஷணை:

1. பார்த்துவந்த விபரங்களை ஒழுங்குபடுத்துவது.

2. மிருகங்களின் சுபாவம், வசிக்குமிடமும் தேக நிறமும்; பிடித்துப் பழக்கும் விதம்—உதாரணம் புலி, யானை: மைசூரில் யானை பிடிக்கும் விதம்.



3. மாமிச பட்சிணி, சாகபட்சிணி—தகுந்தாற்போல அவயவ அமைப்புகள்—இரவில் வெளிவரும் மிருகங்கள்—

பூகோளம்.

உலகமே ஒரு பெரிய மிருகக் காட்சி சாலை.

1. சித்திர உலகப் படம். ஆங்காங்குள்ள மிருகங்கள் அமைக்கப்பெற்றபடி ஒன்று காட்டவும். (உபாத்தியாயர் தயார் செய்யவேண்டியது.) உலகப் படம்: பிள்ளைகள் தம்மிடமுள்ள உலகப் படம் ஒன்றில் முக்கியமான சில பெரிய மிருகங்கள் காணப்படும் இடங்களைக் குறிப்பது அல்லது அவைகளின் படங்களைப் போட்டுக்கொள்வது அல்லது ஒட்டிக் கொள்வதும் பொருந்தும். அடியிற்கண்ட மிருகங்களின் ரப்பர் ஸ்டாம்பு இருப்பின் நன்கு உபயோகப்படும்.

குறிப்பு: இங்கு காட்டிய படங்களின் அச்சுகள் "கலைமகள்" ஆபீஸால் அன்புடன் அளிக்கப்பட்டவை.



உலகப்படத்துள் வரைந்துள்ள மிருகங்கள்.

1. *ரெயிண்டியர்* 3. *காண்டாமிருகம்* 5. *சிறுத்தை*
2. *பசுமாடு* 4. *புலி* 6. *பாம்பு*

7. தீப்பறவை	12. வரிக்குதிரை	17. யானை
8. குரங்கு	13. சிங்கம்	18. கங்காரு
9. வாமா	14. ஒட்டைச்சிவிங்கி	19. லயர்பறவை
10. ஒட்டகம்	15. குதிரை	
11. முதலை	16. ரஷ்யாக்கரடி	

சிங்கம்	கங்காரு	வரிக்குதிரை
புலி	நீர் யானை	சிறுத்தை
ஒட்டைச்சிவிங்கி	குரங்கு	முதலை
யானை	பாம்பு	காண்டாமிருகம்
ஒட்டகம்	மான்	

2. மிருகக் காட்சி சாலை இருக்குமிடங்கள்

சென்னை ஈரோடு மைசூர்

திருவனந்தபுரம், புதுக்கோட்டை } போன்ற சுதேச சமஸ்தானங்களின் தலை நகரம்.

இவைகளையும் ஒரு இந்தியா படத்தில் குறித்துக்கொள்ளவும். இங்குள்ள மிருகக் காட்சி சாலை ஏற்பாடு, விசேஷமான மிருகங்கள் இவற்றைப்பற்றித் தெரிந்தவரையில் சொல்லலாம். மிருகங்களின் படத்தை சில தேச தபால் முத்திரைகளிலும் கவனிக்கலாம். முடியு மானல் இவற்றைச் சேர்க்கவும்.

செய்யுள் :

கந்துக மதக்கரியை வசமா நடத்தலாங்
கரடி வெம்புலிவாயையுங்
கட்டலா மொரு சிங்க முதுகின் மேற் கொள்ளலாங்
கட்செவி யெடுத்தாட்டலாம்
வெந்தழலி னிரதம்வைத் தைந்தலோ கத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணம லுலகத்து லாவலாம்
விண்ணவரை யேவல் கொளலாஞ்
சந்ததமு மிளமையோ டிருக்கலா மற்றொரு
சரீரத்தி னும்புகுத லாஞ்
சலமே னடக்கலாங் கனன்மே லிருக்கலாந்
தன்னிகரில் சித்தி பெறலாஞ்
சிந்தையை யடக்கியே சும்மாவிருக்கின்ற
திறமரிது..............................

(தாயுமானவர்).

குறிப்பு :—இப்பாட்டைப் போதிக்கத் தகுந்தபடி படத்துடனும் உதாரணத் துடனும் அமைத்துக்காட்டிப் போதிக்கமுடியும். பல துஷ்ட மிருகங்களைப்பிடித்து அடக்கி ஆள சாத்தியமாயினும் மனதைக் கட்டுப்படுத்துவது மனிதனல் ஆவது அரிது:

விடுகவிகள்

இங்குள்ள விடுகவிகளைப்படி. அதற்கு ஏற்ற விடையைக் கண்டுபிடி.

(1) கன்னங்கறே லென்றிருப்பான் கறுப்புமயிர் மூடியிருக்கும் கறுங்குரங்குமல்ல; வானரசேனையுடன் இலங்காபுரி வந்தவன் ஹனுமார் அல்ல: ஆளைக்கண்டால் பாய்ந்துவரும்; அக்கினியைக்கண்டால் பயந்து ஓடும்.

(2) உடம்பு எல்லாம் உரோமம் உண்டு; வால் நீண்டிருக்கும் மரமேறித்தாவுவான்; பழம் தின்பான் அணில் அல்ல. கிளைகளைப் பிடித்து ஊஞ்சலாடுவான் வௌவால் அல்ல; நாம் எப்படிச் செய்யினும் அப்படிச்செய்வான்; இலங்காபுரி கோட்டை தாண்டின உத்தமன் இவனே.

(3) பட்சியிற் சிறந்த பட்சி; சிறகை விரித்தாடும் பட்சி; அமரர்கோனைக் காத்த பட்சி; ஆயிரங்கண் பெற்ற பட்சி.

(4) கூன முதுகன் கோணக் காலன்; நெட்டைக் கழுத்தும்; குட்டைவாலு முளோன்; ஒருவாரம் உண்ணுன், நீர் அருந்தான்; விரைந்து செல்வான்; சுடுமணல் வெட்டவெளியில் வேகமாய்ச் செல்வான்; ஒ—வைமுதலெழுத்தாகக் கொண்ட உத்தமன் இவனே.

(5) நாலுலக்கை குத்திவர, இரண்டுமுறம் புடைத்துவர துடுப்பு துலாவிவர, வெண்சாமரம் வீசிவர, இராஜமக்கள் ஏறிவர—அவன் யார்?

(6) ஆடும்போது சீறும், ஆடிக்குடத்திலடையும் மூடித்திறக்கும்போது முகம் காட்டும்—அது என்ன?

மிருகங்கள் சம்பந்தப்பட்ட குறிப்புகள்

(1) மிருகங்களை வாகனமாக அமைத்துக் கொள்ளுதல், (அபிஸீனியர்) சிங்கத்தை வாகனமாக அமைத்துக் கொள்ளுதல்.

(2) ஜனங்களின் தைரியம்—பரதன் சிங்கக் குட்டியுடன் விளையாடுதல்.

(3) ஆப்பிரிக்கா தேசக் குழந்தைகளின் தைரியம்.

கதை சொல்லுதல்.

1. அந்திரோகிளிசும் சிங்கமும்.

2. யானையும் தையற்காரனும்.

3. ஒவ்வொரு மிருகமும் தானே இராஜனுக இருக்க தன்னைப் பற்றி என்ன சொல்லிக் கொண்டது?

4. குரங்கின் வாலில் கறுப்பு அடையாளம் வந்ததேன்? (இலங்காதகனம்).

5. மயிலின் தோகையில் கண்கள் வந்ததேன்? (மயில் தேவேந்திரனைக் காத்ததும், மயிலுக்கு தேவேந்திரன் வரம் தந்ததும்).

6. அபூர்வ மிருகங்களைப் பாதுகாக்கும் சங்கம். தமாஷுக்காக வேட்டை யாடுதல்.

சம்பந்தப்பட்ட கணக்கு.

(A) மிருகக் காட்சி சாலைக்குப் போக வரவு செலவு:
பிள்ளைகளுக்கு அரைட்டிகட்டு:
இரண்டுபேருக்கு ஒரு டிக்கட்டு: ஒரு முழு டிக்கட்டு சார்ஜ் ரூ 0—1—9

		ரூ. அ. பை
34 பேருக்கு: 17 டிக்கட்டு.	ரூ. 0—1—9 × 17	1—13—9
2 உபாத்தியாயருக்கு	ரூ. 0—1—9 × 2	0— 3—6
பிரவேசக் கட்டணம்: ஒருவருக்கு 1 அணு வீதம்	36 பேருக்கு	2— 4—0
திரும்பிவர பிள்ளைகள டிக்கட்டு		1—13—9
உபாத்தியாயர்		0— 3—6
	ஆகமொத்தம்	

(B) ஒவ்வொருவரிடமிருந்து வசூல் ரூ. 0—3—0.
போகவர டிக்கட்டு 0—1—9 }
பிரவேசக் கட்டணம் 0—1—0 } பாக்கி ரூ. 0—0—3.

4. கியாலண்டர் தயார் செய்தல்.

சம்பாஷணை

(1) மாதம், கிழமை, தேதி, மற்ற விசேஷங்கள் பார்க்க உபயோகம். பௌர்ணமி, அமாவாசை, கிருத்திகை அடையாளங்கள்.

(2) வீட்டுக்கு, வகுப்புக்கு அலங்காரமும் அழகும்.

(3) புது வருஷம் - வியாபாரிகள் இனும்.

செய்து பார்த்தல்

A. பலவிதங்கள்: பார்த்தறிதல்.

1. ஏடு ஏடாகக் கிழிக்கக்கூடியது. மாதம் ஒன்றுக்கு ஒரு ஏடு.
2. தினம் ஒன்றுக்கு ஒரு ஏடு.
3. வருஷம் ஒன்றுக்கு ஒரே அட்டை. மாதம், தேதி கிழமை மாற்றிவைக்கத் தகுந்தபடி.
4. நெருப்புப் பெட்டியில் தேதி மாத்திரம் காட்டும்படி.
5. சோப்புப் பெட்டியில் மாதம், கிழமை, தேதி காட்டும்படி.

B. 6. பூந்தோட்டியில் வைக்க ஏற்ற பிரகாரம்.
7. கடிகாரப் மாதிரி.
8. பின்னல் திருப்பும்படி.
} சித்திரங்கள் கவனிக்க:

A. 9. மாதம், கிழமை திரும்பித் திரும்பி வருகிறபடி வட்டத்தில் அமைக்க.

B. 10. திதி, நட்சத்திரம், அறுபது தமிழ் வருஷங்கள் - திரும்பித் திரும்பி வருகிறபடி வட்டத்தில் அமைத்துக் காட்டவும்.



பின்காட்டியுள்ள கியாலண்டர்களைச் செய்யத் தேவையான சாமான்கள்,

பழைய கியாலண்டர் நம்பர்கள், பிசின், வெள்ளைக் காகிதம், மெல்லிய குச்சி, நெருப்புப் பெட்டி, கோழி இறகு, சோப்புப் பெட்டி, மெல்லிய மரப் பெட்டி, அட்டை, சிறு களிமண்செட்டி, மடக்கு பித்தளை ஊசி, கத்தி, கத்தரி முதலியன.


1 2 3 4 5 6 7 8 9 10 11 12 13 14 15 16 17 18 19 20 21 22 23 24 25 26 27 28 29 30 31
ஜனவரி
பிப்ரவரி
மார்ச்
ஏப்ரல்
மே
அக்டோபர்
நவெம்பர்
டிசம்பர்
கிழமை
திங்கள்
செவ்வாய்
ஞாயிறு
சனி


1934
தேதி
1
கிழமை
ஞாயி
மாதம்
ஜன

A. பாஷை

(ai)

ஞாயிறு	ஜனவரி	ஜூலை	சித்திரை	ஐப்பசி
திங்கள்	பிப்ரவரி	ஆகஸ்டு	வைகாசி	கார்த்திகை
செவ்வாய்	மார்ச்சு	செப்டம்பர்	ஆனி	மார்கழி
புதன்	ஏப்ரல்	அக்டோபர்	ஆடி	தை
வியாழன்	மே	நவம்பர்	ஆவணி	மாசி
வெள்ளி	ஜூன்	டிசம்பர்	புரட்டாசி	பங்குனி
சனி				
கிழமைகள் 7	இங்கிலீஷ் மாதங்கள் 12		தமிழ் மாதங்கள் 12	

(aii) இன்று நேற்று நாளை
காலை பகல் இரவு

	காலை	பகல்	இரவு
1			
2			
3			

உப்புமா	சாம்பார்
காபி	ரஸம்
தோசை	நெய்
இட்டிலி	மோர்
ஆப்பம்	ஊறுகாய்
சாதம்	பழையது
குழம்பு	கூழ்
வாழைக்காய்	ரொட்டி
உருளைக் கிழங்கு	பால்
	பிட்டு
கத்திரிக்காய்	துவையல்
கீரை	பொரியல்
முள்ளங்கி	அப்பளம்

மூன்று நாட்களில் நீ காலை பகல் இரவு சாப்பிட்ட பதார்த்தங்களை மேலே கண்டபடி எழுதிக்காட்டு.

Ai. தினசரி பாட அட்டவணை

	1	2	3	4	5	6	7	8
நேற்று								
நாளை								
இன்று								

Aii.

நடந்த முந்தின	நடக்கிற	நடக்கப்போகிற அடுத்த

B.

மாதம்	கேள்விப்பட்ட ஒரு முக்கிய சமாசாரம்	மாதம்	தானே செய்த ஒரு முக்கிய காரியம்
தேதி 1		தேதி 1	
2		2	
3		3	
4		4	

A.

பகல்		இரவு	
வெயில்	தூற்றல்	பனி	தூற்றல்
மழை	காற்று	குளிர்	காற்று
மப்பு	குளிர்	மழை	

அன்றுடம் பகல் இரவில் இங்கு கண்ட சீதோஷ்ண விஷயங்களில் எது பொருத்தமாயிருக்குமோ அதை எழுதி வருதல்:

B. குறிப்புப் புத்தகங்கள்.

1. யுத்த சமாசாரம்
2. வீட்டு சமாசாரம்
3. இயற்கை விசேஷங்கள்
4. பள்ளிக்கூட சமாசாரம்
5. விளையாட்டு சமாசாரம்
6. காலைக் கூட்டங்கள்
7. கவர்னர் யுத்தநிதி
8. தினசரி சாப்பாடு
9. தெரு சமாசாரம்
10. பத்திரிகை சமாசாரம்
11. பிறருக்குச் செய்த நன்மை
12. தானே செய்த காரியம்
13. கடைத்தெரு சமாசாரம்
14. குடும்ப சமாசாரம்
15. கோயில் சமாசாரம்
16. சினிமா விஷயங்கள்

ஒரு அரைக் காகிதத்தை 16 பக்கம் உள்ள ஒரு சிறு நோட்டுப் புத்தகமாகத் தைக்கவும். ஒவ்வொரு பக்கத்திலும் பிள்ளைகள் ஒவ்வொரு நாளும் மேலே சொல்லப்பட்ட விஷயங்களுக்கு உரித்தாயுள்ள சமாசாரங்களை எழுதிவரலாம். தினசரி பள்ளிக்கூடம் வந்தவுடன் அவரவர்கள் தமது குறிப்புக்களைப் படித்துக் காட்டி சந்தோஷிக்கிறார்கள்.

A. சிறுவர்கள் தேதி, கிழமை, மாதம் இவற்றை மாற்றி வைக்கவும் பழகுவது, பகலிரவு சீதோஷ்ணக் குறிப்புகளை தேவைக்குத் தகுந்தபடி மாற்றிவைக்க பழகுவது, ஆகார சம்பந்தமான வார்த்தைகளடங்கிய பெட்டியிலிருந்து தாங்கள் அன்றுடம் சாப்பிட்ட பதார்த்தங்களை எடுத்துவைத்துப் பழக்குவது இவை பொருந்தும்.

B. (1) பஞ்சாங்கம் படிக்கத் தெரிந்து கொள்ளுதல். தமிழ் இலக்கங்கள், திதி, நக்ஷத்திரம், வருஷங்களின் பெயர்கள்.

(2) மாதம், கிழமை பெயரிடப்பட்ட விதங்கள் : மாதங்களும் இயற்கை மாறுதல்களும் சில பழமொழிகள்.

குறிப்பு :—இவ்விஷயத்தின் கீழ் A என்ற குறிப்பிட்டவைகள் கீழ் வகுப்பிற்கும் B என்ற குறிப்பிடப்பட்ட விஷயங்கள் மேல் வகுப்பிற்கும் பொருந்தும் என ஊகிக்கலாம்.

கணிதம் மாதக்கியாலண்டர்

1940 அக்டோபர் 1940

ஞா		6	13	20	27
தி		7	14	21	28
செ	1	8	15	22	29
பு	2	9	16	23	30
வி	3	10	17	24	31
வெ	4	11	18	25	
ச	5	12	19	26	

A.

1, 8, 15, 22, 29
2, 9, 16, 23, 30.
3, 10, 17, 24, 31.

இம்மாதிரி ஏழு ஏழாகக் கூட்டிக்கொண்டு போவதைக் கவனிக்கவும்.

B. மாதங்களுக்குள்ள நாட்கள்—வருஷத்தின் நாட்கள்.

B2. 30 நாள் உள்ள மாதங்கள்
31 நாள் உள்ள மாதங்கள்
29, 28 உள்ளது.
} ஞாபகம் வைக்கத் தகுந்த பழைய மாதிரியும் புதுமாதிரிப் படமும்.

B3. தமிழ்ப் பஞ்சாங்கத்திலிருந்து தமிழ் மாதங்களுக்குரிய நாட்களும் வருஷத்தின் நாட்களும் : கூட்டல் கணக்கு.

B4. தேதி கிழமை கண்டறிதல் : பழைய பழக்கம்.

(உ-ம்) சனியோடு சனி 8
ஞாயிறோடு ஞாயிறு 15
திங்களோடு திங்கள் 22
வெள்ளியோடு வெள்ளி 29.
} இம்மாதிரி

B5. நாட்கள் கணக்கிடுதல்.
நாட்கள் கணக்கிட்டுக் கூலிகொடுத்தல்.

B6. தயிர் பால் கணக்கு வைக்க கியாலண்டரின் உபயோகம்.
மாதக்கணக்கு தயிர் பால் முதலியன.

B7. பிறந்த வருஷம், மாதம், நாள், தேதி குறித்துக்கொள்க. அதிலிருந்து எவ்வளவு வயது ஆயிற்று என்று கண்டறிக.

B8. ஒரு மாஸத்து நாள், திதி, நக்ஷத்திரம் இவைகளைப் பஞ்சாங்கத்திலிருந்து குறிக்க.

B9. ஒரு வருஷத்திலுள்ள 12 மாதங்களில் சம்பவிக்கும் பண்டிகை முதலியவற்றை வரிசைப்பட மாத வாரியாக (இங்கிலீஷ், தமிழ் மாதங்கள்) எழுதிவரவும்:

B10. விடுகவி.

ஓங்கி உயர்ந்த மரம்.
பன்னிரண்டுகிளை உள்ளமரம்.
முப்பது இலைகளுள்ள கிளை நாலே
ஒன்று அதிகமுள்ள கிளை ஏழாகும்.
இரண்டு இலை குறைவுள்ள சிறுகிளை ஒன்றுதான்.
நாலாண்டுக் கொருதரம் சிறு கிளையில்
ஓர் இலை அதிகமாகும். அது என்ன?

அடுத்த இதழில் வேறுசில சம்பவங்களை எடுத்து அதற்கேற்ற பாடதிட்டம் ஒன்று வகுப்போம்.

சிறு குழந்தைகட்கு ஆரம்பத்தில் கணிதம் போதிக்கும் முறை.

By **P. Subrahmanya Ayyar**, *Thyagaraya Nagar.*

"ஏனம்மா எனக்கு மாத்திரம் கொஞ்சந்தானு? அண்ணுவுக்கு ரொம்ப கொடுத்தாயே. எனக்கும் ரொம்ப கொடு, இல்லாவிட்டால் எனக்கு வேண்டாம் போ" என்று சிறு குழந்தைகள் சண்டையிடுவது நாம் சாதாரணமாகக் காணக்கூடியதோர் சம்பவமே. அதிகம், குறைவு என்ற இந்த உணர்வு குழந்தைகட்கு எந்த சமயத்தில் முதன்முதல் தோன்றுகிறதோ அதுவே அவர்கள் வாழ்வில் கணித ஞானத்திற்கு அஸ்திவாரக்கல் நாட்டப்பெற்ற சமயம்.

பரிமாணம், உயரம், நீளம், விஸ்தீரணம் முதலான ஒவ்வொரு அம்சத்திலும் பெரியது சிறியது என்ற வித்தியாசத்தை உணர திறம் பெற்று எண்ணிக்கையிலும் வித்தியாசம் கண்டுபிடிக்க குழந்தை ஆரம்பம் செய்கிறது.

ஒரு குழந்தைக்கு அதன் தாய் நான்கு சீடைகள் கொடுத்தாள். சீடைகளைத் தன் முன்பக்கத்தில் வைத்துவிட்டு எதையோ பார்ப்பதற்குக் குழந்தை திரும்பியது. அந்த சமயத்தில் தாய் இரண்டு சீடைகளை எடுத்து மறைத்து வைத்துக்கொண்டாள். குழந்தை மறுபடியும் திரும்பிப் பார்த்தபோது சீடைகளின் எண்ணிக்கை குறைந்திருப்பதை உணர்ந்து அழ ஆரம்பித்தது. தாயார் தான் எடுத்ததைத் திரும்பவும் கொடுத்துவிட்டாள். குழந்தை திருப்தியடைந்து அழுகையை நிறுத்திவிட்டது. இவ்வனுபவம் நம்மில் பலருக்குண்டு. இவ்வுணர்வு ஏற்படும் காலம் தொடங்கியே நாமும் குழந்தைக்குக் கணிதப் பயிற்சி தர வேண்டும். இப் பயிற்சியின் விவரத்தை கீழே விளக்கியிருக்கிறது.

பயிற்சி 1

மாடிப்படியமைத்தல்

மேரியா மாண்டிஸோரி அம்மையாரின் உபகரணங்களி லொன்றாகிய நீளப் படிகள் (**Montessory long stair**) என்று வழங்கப்படுவதையே முதற் படம் விளக்குகிறது.

முதற் படத்தில் 5 நீண்ட கட்டைகள் காணப்படுகின்றன. அவை முறையே 1, 2, 3, 4, 5 பாகங்களாகக் குறுக்குக் கோடுகளால் பிரிக்கப்பட்டிருக்கின்றன. 5-வது கட்டையைக் கவனி. **B. R.** என்று ஒவ்

வொரு பாகத்திலும் மாறிமாறி எழுதப்பட்டிருக்கிறது. B என்ற பாகத்தில் நீல நிறமும் R என்ற பாகத்தில் சிவப்பு நிறமும் பூசி வைக்கவேண்டும். இதுமாதிரியே மற்ற கட்டைகளையும் தயார் செய்துகொள்ள வேண்டும். எல்லாக் கட்டைகளிலும் ஆரம்பத்திலுள்ள பாகமானது நீல நிறமுடையதாக இருப்பதைக் கவனி. 5 கட்டைக ளிருந்தாற் போதாது. இம்மாதிரியாகவே மொத்தத்தில் 10 கட்டைகள் தயார் செய்துகொள்ள வேண்டும்.

ஒன்றிலிருந்து 10 வரையில் உள்ள கட்டைகள் எல்லாம் சேர்ந்து ஒரு அடுக்கு எனப்படும். இதைப்போல் இரண்டு அடுக்குகள் தயாரித்துக்கொள்ள வேண்டும்.

விளையாடும் விதம் :

(1) கட்டைகளை ஒன்றிலிருந்து 10 வரையில் ஏறு வரிசையில் அமைத்தல். (இது சம தரையிலிருந்து மாடிக்கு ஏறிப்போதல் போன்றது.)

(2) ஒன்றிலிருந்து 10 வரையில் அமைத்து அதைச் சேர்ந்தாற்போல் 10-லிருந்து ஒன்று வரையில் அமைத்தல். (இது சமதரையிலிருந்து ஏறி மறுபடி இறங்கி சமதரைக்கு வருதல் போன்றது.)

(3) பத்திலிருந்து ஒன்றுவரையில் வைத்து அதைச் சேர்ந்தாற்போல் ஒன்றிலிருந்து பத்துவரையில் அமைத்தல். (இது சமதரையிலிருந்து இறங்கி மறுபடியும் ஏறி மேலே வருதல் போன்றது.)

(4) 9-வது கட்டையோடு 1-வது கட்டையையும், 8-வது கட்டையோடு 2-வது கட்டையையும், 7-வது கட்டையோடு 3-வது கட்டையையும் இதுபோல் மற்றவைகளையும் சேர்த்துவைத்து எல்லாவற்றையும் சம நீளமாக்குதல்.

2-வது படத்தில் நீண்ட சதுர வடிவமுள்ள 5 அட்டைத் துண்டுகள் காணப்படுகின்றன. ஒவ்வொன்றும் குறுக்குக் கோடுகளால் பிரிக்கப் பட்டிருக்கின்றன. இதுபோல் ஒன்றிலிருந்து 10 வரையில் இரண்டு அடுக்குகள் தேவை.

இவைகளைக் கொண்டும் முன்னே விவரிக்கப்பட்டதுபோல் விளையாடலாம்.

பயிற்சி 2

தனிப்பொருள்களைக் கொண்டு மாடிப்படி அமைத்தல்

உபகரணம் 3 (3-வது படம் பார்) படத்தில் A B C D என்று காட்டப்பட்டிருப்பது நீண்ட சதுர வடிவமுள்ள ஒருபெரிய அட்டைத் துண்டு. அதன்மேல் படத்தில் காணப்படுவதுபோல் 6 வரிசை கட்டங்

கள் மாடிப்படி மாதிரியாக வரையப்பட்டிருக்கிறது: 6 வரிசைகளோடு நில்லாமல் 10 வரிசைகள் இது மாதிரியே வரைந்துகொள்ள வேண்டும்.

விளையாடும் விதம் இக்கட்டங்களில் இரும்பு வாஷர்கள் ஒரு கட்டத்திற்கு ஒன்று வீதம் வைக்கப்பட்டிருக்கின்றன, எல்லா கட்டங்களிலும் வைத்த பிறகு அவைகளைக் கலைத்து ஒன்று சேர்த்து மறுபடியும் வைக்கவேண்டும். இப்படி பல முறைகள் விளையாடவேண்டும். வாஷர்களுக்குப் பதிலாக விதைகள், மணிகள், பொத்தான்கள் ஆகிய இவைகளை உபயோகிக்கலாம்.

பயிற்சி 3

(4-வது படம் பார்) இப்படத்தில் பொத்தான்கள் மாடிப்படி அமைப்பில் வைக்கப்பட்டிருக்கின்றன.

விளையாடும் விதம்.—குழந்தைகள் 3-வது உபகரணத்தின் உதவி இல்லாமலே தரையில் பொத்தான்களை மாடிப்படி அமைப்பில் வைக்கப் பழகவேண்டும்.

பயிற்சி 4

இரண்டாவது பயிற்சியில் மூன்றுவது உபகரணத்தின்மேல் வைக்கப்பட்ட வாஷர்களை எடுத்துவைக்கும்போது அவைகளை ஒன்றுகச் சேர்த்து வைக்கவேண்டும் என்றேன். ஆனல் இப்போது அப்படிச் செய்யாமல் ஒவ்வொரு வரிசையிலுள்ள வாஷர்களையும் தனித்தனி இணைப்பில் வைக்கவேண்டும், (5-வது படம் பார்) இரண்டு மறை ஆணிகள் நட்டுகளுடன் காணப்படுகின்றன. ஒன்றில் மூன்று வாஷர்களும் மற்றென்றில் நான்கு வாஷர்களும் காணப்படுகின்றன. இது மாதிரி வைக்க 10 ஆணிகள்வேண்டும். எல்லாவற்றையும் எடுத்து இணைத்து வைத்தபிறகு மூன்றுவது உபகரணத்தின்மேல் வாஷர்களை வைக்க வேண்டும். எந்த ஆணியிலுள்ளது எந்த வரிசைக் கட்டங்களுக்கு சரியாக இருக்கும் என்று யோசனைசெய்வது தான் குழந்தைகளுடையும் பயிற்சி ஆகும். முதலில் சில தடவைகளில் தட்டுத் தடுமாறி வைப்பார்கள். பழகப் பழக திறமையேற்படும்.

பயிற்சி 5

(6-வது படம் பார்) அதில் 3 அட்டைகள் காணப்படுகின்றன. ஒன்றில் 5 பொத்தல்களும் மற்றென்றில் 6 பொத்தல்களும் வேறென்றில் 7 பொத்தல்களும் காணப்படுகின்றன. இதுபோல் பொத்தல்களுள்ள அட்டைகள் ஒன்றிலிருந்து 10 வரையிலுள்ள ஒவ்வொரு எண்ணுக்கும் தேவை. இந்த 10 அட்டைகளும் 4-வது உபகரணம் என்று வழங்கப்படும்.

விளையாடும் விதம்.—ஒரு குழந்தை தன் பக்கத்தல் இந்த 10 அட்டைகளையும் வைத்திருப்பான். மற்றெரு குழந்தை தன் பக்கத்தில்

நிரம்ப பொத்தான்கள் வைத்திருப்பான். முதல்வன் அட்டைகளிலொன்றை எடுத்துத் தரைமேல் வைத்து இதில் உள்ள பொத்தல்கள் எத்தனையோ அத்தனை பொத்தான்கள் எனக்குக்கொடு'' என்று கேட்பான். மற்றவன் அட்டையிலுள்ள பொத்தல்களில் பொத்தான்களை ஒவ்வொன்றாக வைத்து முடிப்பான். பொத்தல்கள் எல்லாவற்றிற்கும்



வைத்தான பிறகு முதல்வன் அட்டையைத் தூக்குவான். பொத்தான்கள் தரையில் காணப்படும். பிறகு அவைகளை ஒன்றுசேர்த்து எடுத்து வைத்துக்கொள்வான். இப்படியே பல அட்டைகளைக்கொடுத்து அவைகளுக்குச் சமமான பொத்தான்களை வாங்குவான் (6 a-வது படம் பார்) படத்தில் **A** என்று குறிக்கப்பட்டிருப்பதுதான் முதல்வன் தரையின் மேல் வைத்த அட்டை. **B** என்று குறிக்கப்பட்டிருப்பது அட்டையிலுள்ள பொத்தல்களின் நடுவே பொத்தான்கள் வைக்கப்பட்டிருப்பதைக் காட்டுகிறது. **C** என்று குறிப்பிட்டிருப்பது அட்டை எடுபட்ட பிறகு பொத்தான்கள் தரையில் நிற்பதைக் காட்டுகிறது.

குறிப்பு :—படத்தில் காட்டப்பட்ட மாதிரி உபகரணங்கள் தயாரிக்கும்போது அவைகளின்மேல் எழுத்துகளோ எண்களோ வரையவேண்டியதில்லை படத்தில் காணப்படும் எழுத்துகளும் எண்களும் படத்தை விளக்குவதற்காக ஏற்பட்ட குறிகளேயாம்).

பெற்றோர் சங்கத்தின் அவசியம்

(A. S. K. சுதந்திர மூர்த்தி)

ஆரம்பக்கல்விப் பிரச்னை என்ற மாத்திரத்திலேயே ஆரம்பப் பாடசாலைகள்தான் நினைவிற்கு வருகின்றன. அவற்றுள்ளும் ஆரம்பாசிரியர்கள்தான் இப் பிரச்னையில் ஈடுபடவேண்டியவர்கள் என்ற எண்ணங்களே படிப்படியாய் மனத்தெழுகின்றன. இதற்குக்காரணம் தற்கால நிலைமையேயன்றி வேறு யாதாயிருத்தல்கூடும்? கூர்ந்து நோக்கின் குழந்தைகளுடன் அறியாமைப் போராட்டத்தில் ஈடுபட வேண்டியவர்கள் ஆசிரியர்கள் மட்டுமல்ல என்பது நன்குபலனாகும். ஆசிரியர்கள் குழந்தையின் பாடசாலைக் காலத்தில் சற்றேறக்குறைய முக்கால்பங்கு காலமே அதாவது ஆண்டில் 220 நாட்கள் மட்டுமே பழகுகிறார்கள். அதிலும் தினசரி ஐந்தில் ஒரு பகுதி நேரமே ஆசிரியர் பாதுகாப்பில் குழந்தைகள் வைக்கப்படுகின்றன. அதாவது குழந்தைகளின் கல்விக் காலத்தில் அரைக்கால் பகுதியே ஆசிரியர்கள் உபயோகப்படுத்திக்கொள்ள முடிகிறது. இஃதும் தினசரி ஒழுங்காகப் பாடசாலைக்குவரும் பாலர்கள் விஷயத்தில்தான் பொருந்தும். எஞ்சிய முக்காலே அரைக்கால் பகுதிக் காலம் குழந்தைகள் விஷயத்தில் கவனிக்கப்படுவதில்லை யென்றே துணிந்து கூறலாம். அந்தப் பெரும்பாலான காலத்தில் குழந்தைகள் பெற்றோர் தம் கவனிப்பில் இருந்து வருகிறார்களென்பது சொல்லத் தேவையில்லை. இங்ஙனமிருக்கையில், ஆசிரியர்கள் அளிக்கும் பயிற்சி எத்துணைதூரம் பயனளிக்குமென்பது வெள்ளிடைமலை!

இதிலிருந்து புலனாவது யாதெனில் குழந்தைகளின் ஆரம்பக் கல்வியில் தேர்ச்சி மட்டுமின்றி ஐந்து வகுப்புவரையில் படிக்கக்கூடிய நிலைமையும் குறைவுபடுவதற்குக் காரணம் குழந்தையின் பெரும்பாலான கல்விக் காலம் எள்ளளவும் கவனிக்கப்படாமையே. பாடசாலை நேர மொழிந்த இதர நேரங்களில் பாலர்கள்பால் கவனஞ்செலுத்தாத பெற்றோர்களே இத்தகைய நிலைக்குக்காரணம் என்று சொல்வது உண்மைக்கு மாறுகாது. இவ்விதம் அறுதியிட்டுக் கூறுவதைப் பெற்றோர்களின்மீது சார்த்தப்படும் ஓர் குற்றச்சாட்டாகவுங் கொள்வதற்கில்லை. ஏனெனில் நம் நாட்டைப் பொறுத்தமட்டில் நூற்றுக்கு 7 அல்லது 8 நபர்களே எழுத்துவாசனை உள்ளவர்களாதலால் அத்தகைய அறிவுச் செல்வமற்ற பெற்றோர்கள் கல்வியின் அவசியத்தை யுணர்ந்து எட்டுணையும் ஆர்வங் காட்டுவார்களென்று சொல்வதற்கில்லை.

இரண்டாவதாக, அன்னார் குழந்தைகளுக்கு ஓய்வு நேரத்தில் ஆசிரியர்கள் போதிப்பதையொட்டி உதவி செய்யுக்கூடும் என்று எண்ணுவதற்கே மேற்கூறிய காரணத்தால், இடமில்லை.

மூன்றாவதாக, தினசரி சற்றேறக்குறைய ஒன்றரையணாகூட வருமான மற்ற நிலையில்வாழும் நாட்டில் பாலர்கள் படிக்கும் வயதுக்காலம் முழுவதையும் படிப்பிலேயே செலவிட பெற்றோர்களால் அனுமதிக்கக்

கூடவில்லே. அவர்களுக்கு மனமிருப்பினும் நிலேமை இடங்கொடுக்குமென்று சொல்வதற்கில்லே.

நான்காவதாகத் தற்காலக் கல்விமுறையில் பி. ஏ., எம்., ஏ., பட்டதாரிகளுள்பட பெரும்படிப்பாளிகள் எனக் கருதப்படுவோர்கள் கைக்கெட்டிய பொருளேயும்விட்டுக் கதிகலங்கி, உழைப்பாளிகளாகி ஊதியந் தேடமுடியாத பரிதாப நிலேயைக்காணும் பெற்ருேர்கள் இக் கல்வியின் மீது நம்பிக்கையையும் ஆவலேயும் வைப்பதற்குப் பதிலாக அதிருப்தியையும், வெறுப்பையும் அன்றி வேறு எதைக்காட்ட முடியும்?

முக்கியமாக இந் நான்கு காரணங்களுமே பாலரனேவரும் பாடசாலேயில் சேராமைக்கும், அங்ஙனம் விதிவசத்தால் தட்டுத் தடுமாறி சேரும் பாலர்களில் பல்லோர் ஐந்து வகுப்புக்கள் முடிய படியாமைக்கும் அடிப்படையென்று அறுதியிட்டுக் கூறலாம்.

ஆரம்பக்கல்வி ஓங்கவேண்டுமாளுல் மேற்கூறிய குறைகளேப் பரிகரிக்கவேண்டும். கிராமங்கள் தோறும், பாடசாலேக் கட்டிடங்களே விருத்திசெய்வதாலோ, இலவசக் கல்வியூட்டுவதாலோ, சிறந்த பாடபுத்தகங்களேக் குறைந்தவிலேக்குக் கிடைக்கிறதென்றுகூறி பாலர்களேச் சுமக்கச் செய்வதாலோ, பாலர்கல்வி ஒருநாளும் வளர்ச்சியடையப் போவதேயில்லே.

எனவே முதற்குறையை நீக்க பெற்ருேர்களிடையே அதாவது பெரியோர்களிடையே "Each one Teach one" "ஆளுக்கொருவரை அறிஞராக்குமின்" எனுமொழிப்படி எழுத்தறிவியக்கம் பரவவேண்டும். அவ்வியக்கம் பரவிப்பயன்தருவது ஆரம்பாசிரியர்களால்தான் முடிந்த காரியம். இதற்குப் பெற்ருேர்களின் கூட்டுறவு எத்துணேதூரம் அவசியமானதென்று கூறவேண்டியதில்லே.

அடுத்தாற்போல், இம்முதற்குறையைக் களேவதின் மூலமே இரண்டாவது குறையும் மறைந்துவிடும். முதியோர் கல்வி இயக்கம் பரவப் பரவப் பாலர் கல்வியும் பண்படையும். அறிவின் வளர்ச்சி சுற்றுப்புற உணர்ச்சியைப் பொறுத்ததல்லவா?

மூன்ருங்குறை பெற்ருேர் தம் பொருளாதாரத்தைப் பொறுத்ததாக விருப்பதால் அக்குறையும் அவசியம் நீக்கப்பட வேண்டியதாகும். இது அரசாங்கத்தின் வேலேயென ஆசிரியர் பலர் கருதலாம். ஆனல் அப்படி ஆசிரியர்கள் தட்டிக் கழிக்கக்கூடிய காரியம் இது என்று சொல்வதற்கில்லே. பொருளாதார முன்னேற்றம் பின்னேற்றமாகத் தோன்றலாம்; மேலும் மிக்க சிரமமான காரியங்கூட. எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் திண்ணியோர்தான். இதற்கு உறுதியுடைய நெஞ்சுவேண்டும். நேர்மைத்திறமை வேண்டும். சமீபத்தில் நமது ஜில்லா கல்வியதிகாரி அவர்கள் வெளியிட்டுள்ள அனுபவசாத்தியமான திட்டமாகிய கிராமப் புனருத்தாரணத் திட்டமும் காந்தியடிகளின் நிர்மாணத்திட்டம் முதலியவைகளுள் கதர்த்திட்டமுள்ளிட்ட குடிசைக் கைத்தறித் திட்டமும்,

கிராமவாசிகளிடையே பரவுமாயின், நிரந்தரமான பலனும் நிலவும். கிராமவாசிகளின் பொருளாதார நிலையும் திருப்திகரமான நிலைக்குத் திரும்பும். இந்நிலை எய்த ஆசிரியர்களும் தேசபக்தர்களும் தம்மால் இயன்ற உதவி தான் செய்தல் வேண்டும். சோம்பேறி வாழ்க்கை சுவர்க்கத்திற்கு வழிகாட்டுமா ?

நான்காவதாக எடுத்துக்காட்டப்பட்ட பலவீனத்தை, தற்கால இந்தியக்கல்வி வானத்தில் உலவும் வார்தா கல்வித் திட்டம் ஒன்றே அடியோடொழித்து புத்துயிரூட்டவல்லது என்று கூறுவது மிகையாகாது.

இத்திட்டங்கள் தோன்றி, வேரூன்றி பலன்தரவேண்டுமானால் ஆசிரியர்களும் பெற்றோர்களும் ஒத்துழைக்கவேண்டுவது அவசியமாகும். இவ்விரு சாராரின் ஒத்துழைப்பின்றேல் மேற்கூறிய யாவும் பகற்கனவேயாகும். மேற்கூறியவற்றை ஆய்ந்து அவற்றின் அவசியத்தை யுணர்ந்தார்க்கு நாம் கூறவேண்டியது யாதொன்றுமில்லை. எனவே அவ்வவசியங்கள் பூர்த்தி செய்யப்படவேண்டின் பெற்றோர் கூட்டுறவு, எவ்வளவு தூரம் இன்றியமையாதனவெனக் கூறவேண்டுவதில்லை. ஆகவே ஆசிரியர் பெற்றோர் கூட்டுறவைப் பெறவேண்டும். பெற்றோர்களே இக்குறைகளை யுணர்ந்து களையமுற்படுவார்கள் என்று எண்ணும் நிலையோ இந்நாட்டில் இந்நூற்றாண்டிலில்லை. எனவே மலரை நாடி வீழும் வண்டேபோல் பெற்றோரை நாடி ஆசிரியர்கள் தான் செல்லவேண்டும். தேனைச்சேகரித்து மாந்தர்க்குதவும் தேனீயின் நிலையில்தானே தற்போது ஆரம்பாசிரியர்கள் இருக்கின்றார்கள். உழைப்பு அதிகமாகத்தான் இருக்கும். ஊதியத்தைப்பற்றிச் சிந்திப்பானேன்.

உண்மையிலேயே உழைப்பின் உயர்வையும் காலத்தின் அருமையையும் ஆசிரியர் உணர்வார்களேயாகில், ஆங்காங்கு, பெற்றோர் சங்கம் ஏற்படுத்த முற்படவேண்டும். வெற்றுரை பகர்வதால் பலனில்லை. கதைபேசிக்காலங் கழிக்குங்காலம் கழிந்தது உழைப்பே தேவை. பெற்றோர் சங்கத்தின்மூலமே மேற்கூறிய நிவாரண திட்டங்கள், நாளடைவில் படிப்படியாக அமுலுக்குக் கொண்டுவருதல் மட்டுமின்றி, மாணவ மாணவிகளை பாடசாலைக்கு ஒழுங்காக வரச்செய்வதும், ஒரே வகுப்பில் தேக்கம் ஏற்படுவதைத் தவிர்ப்பதும், படிக்கும் வயதுடைய பாலர்களில், பாடசாலைப் பக்கமே தலை காட்டாதவர்களின் சங்கியையைக் குறைப்பதும், சிறப்பாக சிறுமியர் கல்வி பயிலச்செய்வதும் சாத்தியமாகும். மேற்கூறியவை பொதுப்பட சமூக நலனை யுத்தேசித்தவையாயினும், ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில் அவர்களின் சொந்த நலனையும் பாதிக்கக் கூடியவைகள் அல்லவா ? எவ்வகையிற் பார்த்தாலும், அதாவது சமுதாய (**Nation**) முன்னேற்றங்கருதியோ, சுயநலக்கருதியோ, மற்றும்பிறவின்பாற்படுத்தியோ, பெற்றோரின் கூட்டுறவு இன்றியமையாததாகிறது.

இதுகாறுங் கூறியவாற்றால் 'பெற்றோர் சங்கம் இன்றேல் மற்றோர் பலனுமில்லை' எனக்கண்டோம். மேலும் பேசிப்பயனில்லை. இனிக்கண்டவற்றைச் சிந்தித்து சித்திரிப்போமாக. இதற்கென இம் மாதம் இருபத்தாறாந் தேதி குறிப்பிடப் பட்டிருப்பதைக் கண்டு ஆவன செய்மின் அறிஞர்களே !

சாரணீயமும் கல்வியும்

S. Srinivasa Aiyar, B. A., L. T.,
Secretary, North Arcot District Hindustan Scout Assoiation, Vellore

தற்காலக் கல்வி திட்டத்தில் மாணவர்களுக்கு நூல்களைப் போதிப்பதும் அறிவைப் பெருக்குவதுமே முக்கிய நோக்கங்களாகக் கருதப்படுகின்றன. ஆனால் ஒரு நாட்டுக் கல்வித் திட்டமானது வேறு சில உயரிய நோக்கங்களும் உடையதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் தேக வன்மை நிறைந்த மனிதனாக வளரவேண்டும். ஒழுங்கான நடத்தையுடையவனாதல் வேண்டும்; சமூகத்திற்குப் பயன் அளிப்பவனாகத் திகழவேண்டும்; நாட்டுக்கு நன்மகனாக விளங்கவேண்டும்; அல்லது மனிதன் மிருகத்தன்மை ஒழிந்து முழுமனிதனாக ஆகவேண்டும்.

தற்காலப் பாடத் திட்டத்தின்படி மனிதனை மனிதனாக்குவது மிகக் கஷ்டமான காரியமாக இருக்கிறது பள்ளிக்கூடங்களில் பாட திட்டத்தில் குறிக்கப்பட்ட பாடங்களே போதிக்கப்படுகின்றன. இப்போது உடல் வன்மையை வளர்ப்பதற்கும் சிறிது கருத்து செலுத்தப்படுகின்றது; பள்ளிக்கூட வேலை முழுவதும் பரீக்ஷை என்னும் யமனாலேயே ஆளப்படுகின்றது; குழந்தைகளின் ஒழுக்கம், நடத்தை இவைகளைக் கவனித்து ஒழுங்குபடுத்துவதற்கு ஏற்ற சாதனங்கள் இல்லை; இந்தத் துறையில் வேலை செய்வதற்கு ஆசிரியர்களுக்கு அவகாசமும் இல்லை.

கல்வி கற்க வரும் ஒவ்வொரு குழந்தைக்கும் பல விஷயங்களை அறியவேண்டுமென்னும் அவா மிகுதியாக உண்டு. அந்த அவாவைப் பூர்த்தி செய்ய ஏற்ற சந்தர்ப்பங்கள் பாட திட்டத்தினால் வரையறுக்கப்பட்டப் பள்ளிக்கூடங்களில் இல்லை. அறிவைப் பெருக்கிக்கொள்வதற்கு குழந்தைகளுக்கு இயற்கையாக ஏற்படும் அவாவைப் பூர்த்தி செய்விக்க வேண்டியது நாட்டின் நலத்தையும் மக்களின் நன்மையையும் கருதுவோரது கடமையாகும்.

குழந்தைகளின் ஒழுக்கத்தை மேம்படுத்தி, பழக்க வழக்கங்களை நல்வகைப்படுத்தி, இயற்கை அவாவைப் பூர்த்திசெய்விப்பதே சாரணீயத்தின் முக்கிய நோக்கமாகும்: பாட திட்டத்தினால் வரையறுக்கப்பட்டப் பள்ளிக்கூடக் கல்வியின் குறைபாடுகளைப் போக்கி ஒவ்வொரு குழந்தையையும் நாட்டின் நன்மகனாக்குவதே சாரணீயத்தின் சிறந்த வேலை. ஆகையால் ஒரு நாட்டின் கல்வித் திட்டமும் சாரணீயமும் வேறுபட்டதன்று நாட்டினது கல்வித் திட்டத்தைப் பூர்த்திசெய்வதே சாரணீய

மாகும்; அல்லது கல்வித் திட்டத்தின் தலைசிறந்த பாகமே சாரணீயம் என்று சொல்வது மிகையாகாது.

இனி சாரணீயமானது கல்வித் திட்டத்தை எப்படி பூர்த்தி செய்கிறது என்பதைக் கவனிப்பாம். ஒரு மாணவன் பள்ளிக்கூடத்தில் ஒரு நாளைக்கு 5 அல்லது 6 மணி நேரம் கழிக்கிறான்; தூக்கத்திலும் சாப்பாட்டிலும் 12 மணி நேரத்தையும், வீட்டில் பாடங்களைப் பயிலுவதில் 2 அல்லது 3 மணி நேரத்தையும் கழித்தபோதிலும், இரண்டு அல்லது மூன்று மணி நேரம் ஓய்வு ஏற்படுகிறது. இந்த ஓய்வு நேரத்தைச் சாதாரணமாகச் சிறுவர்கள் வீண் காலமாகக் கழிக்கின்றனர். குறித்த வேலையில்லாததனால் தீய வேலைகள் செய்வதிலும் மனம் செல்வதுண்டு. ஓய்வு நேரத்தில் குழந்தைகள் தீய வழிகளில் செல்லாது தடுத்து அவர்களது மனத்தை நல்வழிகளில் திருப்பி அவர்கள் நன்மகனாக விளங்குவதற்கு ஏற்ற சில விஷயங்களைக் கற்றுக்கொடுப்பதே சாரண இயக்கத்தின் அடிப்படையாகும்.

சாரணப் பயிற்சி மரியாதை, பெருந்தன்மை, நியாயம், பொறுமை, மனந்தளராமை, பொறுப்பு, தைரியம், கீழ்ப்படிதல், தன்னலங் கருதாமை ஆகிய நற்குணங்களைப் பயிற்றுவிக்க ஏற்ற சந்தர்ப்பங்களை அளித்து ஒவ்வொரு சாரணனும் இந்நற்குணங்களைப் பெறும்படிச் செய்கிறது. மனத்திற்கு மகிழ்ச்சி தரக்கூடிய விளையாட்டுக்களினாலும், பாட்டுக்களினாலுமே இவை பயிலுவிக்கப்படுகின்றன. சாரண இய்க்கத்தின் விளையாட்டுக்கள் வெட்ட வெளியிலும், மனத்தைக் கவரும் இயற்கை வனப்புமிகுந்த வனங்களிலும் சோலைகளிலும் தோப்புகளிலுமே விளையாடப்படுகின்றன. ஒவ்வொரு குழந்தையும் இயற்கை அன்னையின் வளங்களைக் கண்டு மகிழ்ந்து ஏற்றத் தாழ்வில்லாமல் பரிபூரண சுயேச்சையுடன் ஆடிப்பாடி விளையாடி தன்னுடைய இயற்கை ஆற்றல்களைப் பெருக்கிக் கொள்கின்றது. சாரணத் திட்டத்தின் அடிப்படையாகிய அணிவகுப்பின்மூலம் ஒவ்வொரு குழந்தையும் கீழ்ப்படிதல் சுய ஆட்சி ஆகிய அரிய தத்துவங்களை அறிந்துகொள்ளுகின்றது. காடு உறைதல், காடு திருத்தல், வனசர வாழ்க்கை இவைகளில் அப்பியாசங்கள் கொடுப்பதாய் ஒவ்வொரு சாரணனும் சுறுசுறுப்பு, தன்னடக்கம், நடுநிலைமை, முன் எச்சரிக்கையாயிருத்தல், ஒத்துழைத்தல் ஆகிய நற்குணங்களைத்தான் அறியாமலேயே எய்தப்பெறுகின்றான்.

விளையாட்டுக்கள் இல்லாத நேரத்தில் சிறுவர்கள் சித்திரமெழுதல், தச்சு வேலை, கூடை பின்னுதல், நூல் நூற்றல் இவைகள் போன்ற பல உபயோககரமான சிறு வேலைகளில் பயிற்சி பெறுவதற்குச் சாரணீயத்தில் சந்தர்ப்பங்கள் அளிக்கப்படுகின்றன. இம்மாதிரிப் பயிற்சியினால் குழந்தைகளுக்கு மனவெழுச்சியும், துணிவும, தைரியமும், சுய நம்பிக்கையும் ஏற்படுகின்றன. இம்மாதிரி விளையாட்டாக

ஒய்வு நேரங்களில் கற்றுக்கொள்ளும் சிறு வேலைகள் சிறுவர்களது கைப்பழக்கத்தையும், சாமர்த்தியத்தையும் விருத்திசெய்து அவர்கள் வாழ் நாட்களில் அவர்களை பயன் தரக்கூடிய மனிதர்களாக்கு கின்றன.

ஆரோக்கிய வாழ்க்கை சாரணியத்தின் சிறந்த கோட்பாடு களில் ஒன்று. ஏற்கெனவே குறிக்கப்பட்ட விளையாட்டுக்களினாலும் காடுகளிலும் வெட்ட வெளிகளிலும் பாளையம்போட்டுக் காலத்தைக் கழிப்பதாலும் தேகவன்மை ஆரோக்கிய வாழ்வு ஏற்படுகிறது. தவிர சுக வாழ்வுக்குவேண்டிய நெறிகளும் தகுந்த சர்தர்ப்பங்களில் சாரணர் களுக்கு விளக்கிச் சொல்லப்படுகின்றன.

ஒரு சிறுவன் நற்குணமுடையவனாகவும், கைத்திறன் படைத்தவ னாகவும், ஆரோக்கிய தேக வாழ்க்கையுடையவனாகவும் மாத்திரம் இருந் தால் அவன் நாட்டுக்கு நன்மகனாக ஆகமாட்டான். ஒருவன் சமூகத் தின் சிறந்த உறுப்பினனாக இருக்க வேண்டுமானால் அவன் சமூக சேவை செய்வதை தன் கடமையாகக் கொள்ளவேண்டும் ஒருநாடு அல்லது சமுகம் சிறந்து விளங்குவதற்கு அச்சமுகத்தினரது அறிவும் ஆற்றலும் மாத்திரம் போதா; சமூக உணர்ச்சி ஒவ்வொருவனிடமும் ததும்பி இருக்கவேண்டும். சாரண விதிப்படி ஒவ்வொரு சாரணனும் பிரதிதின மும் ஏதாவது ஒரு நற்கருமம் செய்யவேண்டும்; கைகால் முறிந்தவர் களுக்கு முதலுதவி செய்தல், நெருப்பணைத்தல், தண்ணீரில் மூழ்குபவர் களைத் தப்புவித்தல், திருவிழாக்களன்று மக்களுக்கு உதவிபுரியல் ஆகிய பல சமூகத்துறைகளில் சாரணர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படுகின் றன. இதனால் சாரணர்களுக்கு சமூக சேவையில் உணர்ச்சியும், நல்ல பழக்கமும் அனுபவமும் ஏற்படுகின்றன. ஒவ்வொரு சார ணனும் சமுகத்தின் சிறந்த உறுப்பினனாகவும் நாட்டின் நன்மகனாகவும் இருப்பதற்கு வேண்டிய அறிவையும். ஆற்றலையும், பயிற்சியையும் அனு பவத்தையும் சாரண இயக்கத்தின் மூலம் பெறுகின்றான்.

இம்மட்டோ! மனிதன் மனிதனாக வாழவேண்டுமானால் அவ னுக்கு நாட்டுப்பற்று அவசியமான குணமாகும். நாட்டுப்பற்றே நம்மை மனிதராகச் செய்வதாகும் 'எவனொருவனுக்கு நாட்டுப் பற்று இல்லையோ அவன் ஆன்மாவை இழந்தவனாவான்' என்று ஒரு பேரறிஞர் கூறியுள்ளார். எல்லா நற்குணங்களிலும் சிறந்த நற்குணமாகிய நாட் டுப்பற்றை (தேச பக்தியை) சிறுவர்களிடத்தில் ஊன்ற வைப்பதற்கும் வளர்ப்பதற்கும் ஏற்ற சந்தர்ப்பங்களை சாரண இயக்கம் அளிக்கின்றது. ஆகவே காரண இயக்கத்தில் சேரும் ஒவ்வொரு சிறுவனும் நற்குண நற்பழக்கங்கள் உடையவனாகவும், கைத்திறன் சமார்த்தியம் படைத் தவனாகவும் சமூகசேவை நாட்டுப்பற்று நிறைந்தவனாகவும் ஆக்கப்படு கின்றான். சுருங்கச் சொல்லுமிடத்து ஒவ்வொரு குழந்தையையும் நாட்

டினது பயன்தரக்கூடிய நன்மகனுக்குவது சாரண இயக்கம் என்றே சொல்லலாம்.

பள்ளிக்கூடங்களின் முக்கிய நோக்கமும் குழந்தைகளை நாட்டின் நன் மக்களாக்குவதே யாதலால் ஒவ்வொரு குழந்தையையும் சாரண இயக்கத்தில் சேரும்படிச்செய்வது ஆசிரியர்கள் கடமையாகும். சாரண இயக்கத்திற்கு வேண்டிய உதவியைச்செய்வது ஒவ்வொரு ஆசிரியனும் தன் கடமையென்று உணரவேண்டும்; தன்னால் இயன்ற உதவியை மகிழ்ச்சியுடன் செய்யமுன் வரவேண்டும். இன்றைய சிறுவனே நாளை சமூகத் தலைவன் ஆதலால், இன்றையச் சிறுவர்கள் தக்க வழியில் பயிற்சிபெற்று நாட்டினது நன்மக்களாக விளங்குவதற்கு எல்லோரும் சாரணப்பயிற்சி பெறுவது நாட்டினது நலத்திற்கும் சமூகத்தினது சிறப்புக்கும் இன்றியமையாத தாகும். அப்போதே நமது நாடு உன்னத நிலைமையை அடைந்து மக்கள் எல்லோரும் இன்புற்று வாழ்ந்திருக்க முடியும்.

'எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே'.

OBITUARY.

The S. I. T. U. Protection Fund : Madras.

We regret to have to announce the death of Mr. R. Venkatasubramanya Iyer, Rajah's High School, Sivaganga, (R. 62) on 7—9—40 at the age of 48. His nominee (wife) was paid the benefit amount of Rs. 321-4-0 on 8—10—1940.

520, High Road,
TRIPLICANE,
10—10—40.

V. SRINIVASAN.
Hony. Secretary.

பத்தாவது தென் இந்தியக் கல்வி வாரம்

1931-ம் வருஷம் முதல், தென்னிந்திய ஆசிரியர் சங்கம் கல்வியின் முன்னேற்றத்தில் கருத்துள்ள இதர சங்கங்களின் ஒத்துழைப்புடன் கல்வி வாரங்களைக் கொண்டாடிக்கொண்டு வருகிறது. இந்த வருஷமும், கல்வி டிபார்ட்மெண்ட்டுடன் இன்னும் அநேக பிரபலமான சங்கங்களின் கூட்டுறவை பெற்றிருக்கிறது. கல்வி டிபார்ட்மெண்டாலும், இதர சங்கங்களினாலும் அனுப்பப்பட்ட மெம்பர்களைக்கொண்டு மத்திய கல்வி வாரக்கமிட்டி ஒன்று ஏற்பாடாயிருக்கிறது. இந்தக் கமிட்டிக்குத் தலைமைவகிக்க, ஜியாக்ராபிகல் சங்கத்தின் காரியதரிசியாகிய ஸ்ரீமான் N. சுப்ரமணியம், M. A., L. T., F. R. G. S. அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். கல்வி வாரத்தில் "கல்வியும் தற்கால தாக்குதலும்" என்னும் விஷயத்தைப்பற்றி பிரசாரம் நடக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த வாரத்தின் நோக்கம்

நம் பள்ளிக்கூடத்தின் தேவைகளைப்பற்றிப் பொது ஜனங்களுக்குத் தெளிவாகத் தெரிவிப்பதே இந்தக் கல்வி வாரத்தின் நோக்கமாகும். பொதுஜனங்கள்தான் பள்ளிக்கூடங்களை போற்றி போஷிப்பவர்கள்; பள்ளிக்கூடங்கள் செவ்வனே நடப்பது பொதுஜனங்களின் ஆதரவையும் நன்கொடையையும் பொறுத்திருக்கிறது. பள்ளிக்கூட வேலைகளைபற்றியும் கல்வியின் நோக்கத்தைப்பற்றியும் விளம்பரப்படுத்தும்படி சர்க்கார் அறிக்கைகள் வற்புறுத்துகின்றன. ஆகையால் கல்வி வாரத்தை, டிஸ்டிரிக்ட் போர்டுகளும் முனிஸிபாலிடிகளும் இன்னும் மற்றுமுள்ள அதிகாரிகளும் உபயோகித்துக் கொள்ளுவார்கள் என்று இந்த மத்திய கமிட்டி எதிர்பார்க்கிறது.

இந்தியாவில் விவசாய சம்பந்தமான ராயல்கமிஷன் ரிபோர்டில் சொல்வதாவது:—

"கல்வி அபிவிருத்திக்கு மிகவும் தடங்கலாயிருப்பது பெற்றோர்களின் அசிரத்தையாகும். அதைப்போக்குவதற்கு கல்வியினால் ஏற்படும் பிரயோஜனங்களை நன்றாகத் தெரிந்துகொள்ளும்படி அவர்களைத் தூண்டுவதைத்தவிர வேறு சிறந்த வழி கிடையாது. அந்த அசிரத்தையை நீக்கிவிட்டால், பணக்கஷ்டமும் நீங்கிவிடும். ஏனென்றால் கல்வியின் பயனை அறிந்த பொதுமக்கள் கல்வி அபிவிருத்திக்கு வரிகளைத் தாங்களே செலுத்த முழுமனதுடன், முன்வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது."

கல்வி வாரத்தை கொண்டாடுவது எப்படி?

1. நீங்கள் இருக்கும் இடத்தில் லோகல் கல்வி வாரக்கமிட்டி ஒன்று ஏற்பாடு செய்யுங்கள். அதற்கு மெம்பர்களாக பெற்றோர்கள் மானேஜர்கள், ஸ்கூல் போர்ட் மெம்பர்கள், லோகல்போர்ட் மெம்பர்கள், இன்னும் அப்பக்கத்திலுள்ள வியாபாரிகள், வக்கீல்கள், டாக்டர்கள், உத்தியோகஸ்தர்கள் போலொத்த பிரமுகர்களைச் சேர்க்கவும்.

2. பள்ளிக்கூடத்தில் சிறுவர்கள் செய்த வேலைகளைக்கொண்டு பொருட்காட்சி தயார் செய்யவும்.

3. பெற்றோர்களும், பொதுஜனங்களும் வந்து பார்க்கும்படி பள்ளிக்கூடத்தைத் திறந்து வைக்கவேண்டும்.

4. கல்வி வாரத்தில் ஒவ்வொருநாளும் பொதுக்கூட்டம் கூட்டி, கல்வி விஷயமாக தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட்டு பேச சாதாரண ஜனங்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கவேண்டும்.

5. உங்கள் சுற்றுப் புறங்களில் ‘எழுதப்படிக்க தெரியாமை’ என்பதை அகற்ற ஏற்பாடு செய்க. அக்டோபர் மாதம் 23ந்தேதியை “கல்வி அறிவின்மையை ஒழிக்கும் நாளாக” கொண்டாடுங்கள். முதியோர் கல்வி ஸ்தாபனங்கள் ஏற்பாடு செய்யவேண்டும்.

குறிப்பு:—மத்திய கல்வி வாரக்கமிட்டியார் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு பாஷைகளில் ‘பெற்றோர்களுக்கு ஓர் வேண்டுகோள்’ என்பதைப் பிரசுரித்திருக்கிறார்கள். இவைகளின் ஒரு செட் விலை ரூ. 3/- வேண்டியவற்றை மத்திய கல்வி வாரக்கமிட்டியின் கன்வீனருக்கு எழுதிப் பேற்றுக் கொள்ளலாம்.

தென்னிந்திய ஆசிரியர் சங்கம் ‘தென்னிந்திய ஆசிரியர்,’ ‘பாலர் கல்வி’ என்று இரண்டு பத்திரிகைகளிலும் தனிப்பிரதி பிரசுரிப்பார்கள். அவைகளில் அனேக பிரமுகர்களினுடைய கட்டுரைகள் அடங்கி இருக்கும். இவைகளைக்கொண்டு சொற்பொழிவுகள் நிகழ்த்தலாம். இந்தத் தனிப் பிரதிக்கு ஆர்டரை இப்பொழுதே அனுப்புங்கள்.

மத்திய கல்வி வாரக்கமிட்டி

(பத்தாவது தென்னிந்திய கல்வி வாரத்தை நடத்துபவர்கள்)

1. தென்னிந்திய ஆசிரியர் சங்கம்.
2. தலைமை ஆசிரியர் சங்கம்.
3. சென்னை ஜியாகராபிகல் சங்கம்.
4. சென்னை லைப்ரரி சங்கம்.
5. தெனிந்திய மிஷினரி கல்வி சங்கம்.
6. காதொலிக் கல்வி சங்கம், சென்னை ராஜதானி.

7. தென்னிந்திய சாரணர் சங்கம்.
8. ஜூனியர் செஞ்சிலுவைச் சங்கம்.
9. இந்திய ஊழியர்கள் சங்கம்.
10. சென்னை ஆசிரியர் சங்கம்.
11. இந்துஸ்தான் சாரணர் சங்கம்.
12. சென்னை பெற்றோர் சங்கம்.
13. சென்னை முதியோர் கல்வி சங்கம்.
14. மாகாண தேகப்பயிற்சி கல்விச் சங்கம்.
15. சென்னை சர்க்கார் கல்வி இலாகா.

தற்கால கல்வி—குழந்தையின் தாக்குதல்

முதல் நாள் :—

1940-ஞ அக்டோபர் மீ 21உ திங்கட்கிழமை.

தன் முழுவளர்ச்சியையும்பெற தகுந்த போஷிப்பு, வைத்திய சிகிச்சை, உத்சாகத்துடன்கூடிய நடவடிக்கைகள் முதலியவற்றிற்கு ஒவ்வொரு குழந்தைக்கும் உரிமை உண்டு. நம் தேசத்தில் குழந்தைகளைப் போஷிக்கும் வழிபெற்றோர்களுக்குத் தெரியாததால் அனேக குழந்தைகள் தகுந்த வளர்ச்சி இல்லாமல் இருக்கின்றன. தேக அமைப்பிலும், சமூகவாழ்க்கையிலும் குறையுள்ள குழந்தை கல்விக்குத் தாக்குதல் ஆகும். கல்வியின்கருத்து வாழ்நாளின் சம்பவங்களுக்கு உதவி புரிவதற்கும் அதன் இடையூறுகளை நீக்குவதற்கும், முடியாவிட்டால் அக் கல்வி திட்டத்தினால் என்னபயன் ?

இது சம்பந்தமாக, 1930-ல் குழந்தையின் உரிமைகளைப்பற்றி ஒரு மகாநாட்டில் ஏற்படுத்திய குறிப்புகளைக் கவனிக்கவும் :—

"ஒவ்வொரு குழந்தைக்கும் சுத்தமான, நல்ல வெளிச்சம் காற்று உள்ள ஒரு பள்ளிக்கூடம் வேண்டும். மிகவும் சிறிய குழந்தைகளுக்கு காண்டர்கார்டன்களும் கூட வேண்டும்.

"தானாகவே பயிற்சிசெய்து அபிவிர்த்தி யடைவதாயிருந்தாலும் படிப்பு ஒவ்வொரு குழந்தையையும் வாழ்நாளுக்குத் தகுந்தபடி தயாரிக்கிறது. பயிற்சியாலும், போதனையாலும் மிகவும் திருப்திகரமான ஒரு சம்பாத்யத்திற்குத் தயார் செய்கிறது......"

"கூன், குருடு, செவிடு," முதலான குழந்தைகளுக்கு சீக்கிரத்தில் தகுந்த சிகித்சைகளைச் செய்து அவர்களைச் சமூகத்திற்கு பாரமாக இல்லாமல் உபயோக முள்ளவர்களாகச் செய்யவேண்டும்........".

"சமூகத்திற்கு முரண்படும் குழந்தைகளை சமூகத்தின் ஆதரணையினால் சீர்திருத்தவேண்டும், அவர்களை விலக்கி விடக்கூடாது......."

செய்யவேண்டியவைகள்

I. ஏற்பாடு செய்க :—

(a) குழந்தைகளுடைய வேலைப்பாடுகளின் பொருட்காட்சி.

(b) உபாத்தியாயர்களுடைய சாதனங்களின் கண்காட்சி.

II. கீழேகண்ட உபன்யாசங்களுக்கு ஏற்பாடு செய்யவும் :—

(a) குறைகள் உள்ள குழந்தைகளுக்குப் படிப்பு.

(b) கீழ்மைப்பட்ட குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடம்.

(c) படுத்தும் குழந்தைகள்.

(d) குழந்தைக் கல்வியின் புதிய வழிகள்.

(e) குழந்தையின் சக்தியும் உபாத்தியாயரும்.

தற்காலக் கல்வி—வீட்டின் தாக்குதல்

இரண்டாம் நாள் :—

1940-ஆு அகடோபர்மீ 22வ செவ்வாய்கிழமை.

வீடும் பெற்றோரும் கல்வி அபிவிருத்தியைத் தாக்குவது உண்டு. எல்லோருக்கும் ஏன் இனமாகவும் கட்டாயமாகவும் படிப்பு சொல்லிக் கொடுக்கக்கூடாது என்று கேட்கிறார்கள். தற்காலத்தில் படிப்பு நமக்கு சந்தோஷமும், தாராள நோக்கமும், சமரசமும் கொடுக்கிற தில்லை. எங்குபார்த்தாலும் சச்சரவும், வீண் வீம்புகளும் இருக்கின்றன. இதற்கெல்லாம் யார் காரணம்?

குழந்தை சரியான வழியில் மனிதனாக வளர்வதற்கு படிப்பு உபகாரமா யிருக்கிறது. வீட்டின் கூட்டுறவு இல்லாமல் படிப்பு கற்பிக்க முடியாது. ஒழுங்கில்லாமலும், அழகில்லாமலும், சந்தோஷமில்லாமலும், அழுக்கு, வியாதி, தரித்திரம் முதலியவைகளோடுகூடிய வீட்டைப்பற்றி நாம் அடிக்கடி குறிப்பிடுகிறோமல்லவா. இப்படிப்பட்ட சுற்றத்தோடுகூடிய குழந்தைக்கு கல்வி சாதகமாய் இருக்குமா? சராசரியில் பெற்றோர்களுக்கு குழந்தையின் படிப்பைப்பற்றி கவனிக்க அவகாசம் இல்லை. கல்வி கற்பிப்பவர் குழந்தையின் வீட்டிலுள்ள நிலைமையையும், பெற்றோர்கள் பள்ளிக்கூடத்து பாடமுறைத் திட்டத்தையும் நன்கு அறிந்துகொண்டார்களேயானால் எவ்வளவோ நன்மைகளையும் சீர்திருத்தங்களையும் செய்யலாம்.

செய்யவேண்டியவைகள்.

1. பெற்றோர்—உபாத்தியாயர் சங்கம் ஏற்படுத்தவும்.

2. பெற்றோர்களுடைய மகாநாடு ஒன்றுகூட்டி பள்ளிக்கூடத்து பாடமுறைத் திட்டங்களைப்பற்றி விளக்கிக் காட்டவும்.

3. பெற்றோர்களுக்குப் பள்ளிகூட விதிகளைச் சொல்லி அவைகளின் உபயோகங்களையும் விஸ்தரித்துச் சொல்லவும்.

4. பின்வரும் உபன்யாசங்களுக்கு ஏற்பாடு செய்யவும் :—

(a) வீடும் பள்ளிக்கூடமும்: எந்தவழிகளில் ஒத்துழைக்கக்கூடும்.

(b) பெற்றோர்—உபாத்தியாயர் சங்கம்—இதர நாடுகளில் பெற்றோர் சங்கங்கள் என்ன செய்திருக்கின்றன.

கல்வியும் சமூகமும்

மூன்றும் நாள் :

1940ஞு அக்டோபர்மீ 23உ புதன்கிழமை.

எல்லா தேசங்களிலும் தற்காலத்திய சமூக, ராஜீய, குடும்ப சம்பந்தமான விஷயங்களில் மிகவும் அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. கல்வியினுல் சமரசம் ஏற்படுமா என்று சமூகம் கேட்கிறது. கல்வியின் நோக்கங்கள் மிகவும் உயர்ந்தவை. சமூகத்தோடு முரண்படாமல் இருப்பதற்குத் தகுந்த வழிகளை ஏற்பாடுசெய்யவேண்டும். பள்ளிக்கூடத்திற்கு சமூகம் உதவிசெய்யத் தயாராயிருக்கவேண்டும்.

ஒவ்வொரு குழந்தையும் மற்ற குழந்தைகளை சமமாக பாவிக்கும்படி பழக்குவதே வீடு, பள்ளிக்கூடம், சமூகம் இவைகளின் கடமையாகும். உயர்த்தி தாழ்த்தி, பணக்காரன் ஏழை, என்ற வித்தியாசமான எண்ணங்களை சிறு குழந்தைகளின் மனதில் உண்டாக்கக் கூடாது. சாரணீயமும், விளையாட்டுகளும், கல்வி பிரயாணமும், ஒருவருக்கொருவர் சகோதரபாவத்தையும், சமத்துவத்தையும் விருத்தி செய்கின்றன.

பள்ளிக்கூடம் கல்வி கற்பிக்கும் ஸ்தலமாயிருப்பதோடுகூட அதன் சுற்று வட்டாரங்களில் படிப்பின்மை என்பதை ஒழிக்க வழிதேடவேண்டும். இன்றே முயற்சி எடுங்கள். இத்தினத்தை "படிப்பின்மையை ஒழிக்கும் தினமாக"க் கொண்டாடவும்.

இன்று செய்ய வேண்டியவை.

பின்வரும் உபன்யாசங்களுக்கு ஏற்பாடு செய்யவும் :—

(1) பள்ளிக்கூடம் வகுப்புகளின் மத்யஸ்தலம்.

(2) புஸ்தகங்களும் முதியோர் கல்வியும்.

(3) பள்ளிக்கூடமும் ஜனங்களின் ஆரோக்கியமும்.

(4) ரேடியோவும் ஜனங்களின் படிப்பும்.

உங்கள் சுற்று வட்டாரத்தில் முதியோர் கல்வி ஸ்தாபனங்களை ஏற்பாடு செய்யவும். (அதற்கு வேண்டி பொருள் உதவிக்கு பண வசூல் செய்யவும்.)

கல்வியும் தேகப்பயிற்சி அபிவிருத்தியும்

நான்காம் நாள் :

1940ஆம் அக்டோபர்மீ 24வ வியாழக்கிழமை.

இந்தியாவில் மக்களின் சராசரி வயது 23 வருஷம்!—பலக் குறைவு, ஏழ்மைத்தனம், சுகாதார விதிகளை அறியாமை, விரும்பத்தகாத சமூக வழக்கங்கள், அமித போஜனம், போதுமான ஆகாரமின்மை, வைத்திய சிகிச்சையில் அசிரத்தை—இவைகள் இந்த நிலைமைக்குக் காரணம். ஆகையால் வேலை செய்பவர்களின் திறமை மிகவும் குறைவாக இருக்கிறது. படிப்பு கற்பிப்பவருக்கு தேகப்பயிற்சியை அபிவிருத்தி செய்வதில் கவனம் அதிகம் இருக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது.

குழந்தைகளை பள்ளிக்கூடத்தில் சேர்க்கும் போதும், பள்ளிக் கூடத்தில் இருக்கும் போதும் வைத்தியர்களைக்கொண்டு பரிசோதிக்கச் செய்யவேண்டும். ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் பையன்களுடைய எடை வளர்ச்சி முதலியவற்றைப் பற்றிய அட்டவணை ஒன்று இருக்குமானல் தேகப்பயிற்சி அபிவிருத்திக்கு அனுகூலமா யிருக்கும். பார்வைக் குறைவு, பல்லில் கோளாறுகள், உள்நாக்கு வளர்ச்சி, முதலிய போஷணைக் குறைவினல் உண்டாகும் வியாதிகளை பெற்றோர்களின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டும். குழந்தைகளுக்குச் சிகிச்சை செய்ய பள்ளிக் கூட ஆஸ்பத்திரி எற்படுத்தவேண்டும். சுகாதார முறைகளின் பழக்கங் களில் ஜாஸ்தி கவனஞ் செலுத்தவேண்டும்.

இந்தியாவில் அதிக சூரிய உஷ்ணம் வெளிச்சம் இருப்பதால் வெளித் தோட்டங்களில் பள்ளிக்கூடங்களை முடிந்தவரை நடத்தலாம். குழந்தைகளுக்கு நடுப்பகலில் புஷ்டிதரும் ஆகாரத்திற்கும் பால் கொடுப் பதற்கும் ஏற்பாடு செய்யலாம்.

நான்காம் நாள் நாம் செய்யவேண்டியவை

பின்வரும் உபன்யாஸங்களுக்குத் தயார் செய்யவும்.

1. சரீர சுகத்தை அபிவிருத்திசெய்ய பள்ளிக்கூடங்கள் என்ன செய்கின்றன.
2. தேகப் பயிற்சிக்கு வேண்டிய பள்ளிக்கூட பாட திட்டம்.
3. பள்ளிக்கூடத்தில் பரிசுத்தம் எப்படி பழக்கப்படுகிறது.
4. குழந்தைகளின் சாதாரணமான அவஸ்தைகளும் அவை களின் சிகிச்சையும்.
5. பள்ளிக்கூடத்தில் வைத்திய பரிசோதனை: அது எதைத் தெரிவிக்கிறது.
6. சரீர குற்றம் குறையுள்ள குழந்தைகளைப் பற்றிய விஷயம்.
7. விளையாட்டு ஸ்தலம்—பள்ளிக்கூடத்தின் மூச்சுப்பை.

8. பள்ளிக்கூடத்திற்கும் விளையாட்டு ஸ்லத்திற்கும் உள்ள சம்பந்தம்.

9. ஆகாரமும் சுகாதாரமும்.

பின் வருவனவற்றைப்பற்றி எடுத்துக்காட்ட ஏற்பாடு செய்யவும் :—

1. தேகப்பயிற்சியும், கூட்ட விளையாட்டுகளும் எல்லா பெற்றோர்களையும் இதைப்பார்க்கத் தருவிக்கவும். இதை எவ்வளவு விமர்சையாய் நடத்தலாமோ அவ்வளவு விமர்சையாய் நடத்தவும். முடியுமானால் அவைகளை போட்டோ எடுத்து பத்திரிகைகளுக்கு அனுப்பவும்.

2. பையன்களுடைய சுகஸ்திதியைப்பற்றின ஒரு அட்டவணையை பொருட் காட்சியாக வைக்கவும்—அட்டவணையில் பையன்களின் வயது, எடை, உயரம், சாதாரண வியாதிகள், பாடங்களில் அபிவிருத்திக்கும் உடம்பு சௌக்ய ஸ்திதிக்கும் உள்ளசம்பந்தம் - முதலியவற்றை குறித்திருக்கவேண்டும்.

3. வகுப்பையும், பள்ளிக்கூடத்தையும், பள்ளிக்கூடச் சுற்றத்தையும் சுத்தம்செய்ய பையன்களை நியமிக்கவும். சுத்தமாயிருக்க வேண்டும் என்ற அறிவை பையன்களுக்குப்புகட்ட இது சரியான அடிப்படையாகும். பள்ளிக்கூடத்தை அழகாக வைத்திருக்கவும்.

4. உங்கள் பள்ளிக்கூடத்தில் ஜூனியர் செஞ்சிலுவைச் சங்கத்தை ஏற்படுத்துங்கள்.

5. சுகாதாரத்தையும், ஜாக்கிரதையையும், மரியாதையையும் அபிவிருத்திசெய்ய ஸேப்டி முதல் ஸ்குவாட் (Safety First Squad) ஒன்று தயார்செய்யவும். பம்பாயிலுள்ள இந்தச் சங்கத்திற்கு எழுதினால் அவர்கள் வேண்டிய யோசனைகளைத் தடையின்றி அளிக்கத் தயாராயிருக்கிறார்கள்.

பிரயோசனமுள்ள கல்வி

ஐந்தாம் நாள் :

1949-ஆ அக்டோபர்மீ 25உ வெள்ளிக்கிழமை.

உலகத்தில் அதிருப்தியும் கலவரமும் இருப்பதற்கு முக்கிய காரணம், வேலையின்மைதான். சாதாரண படிப்பைக்கொண்டு சிறுவர்களால் தொழில்கள் செய்யமுடியாது. இனி கற்பிக்கும் கல்வியானது பின்பு பையன்களுக்கு ஏதாவது ஒரு வியாபாரத்திற்கோ தொழிலுக்கோ சாதகமாக இருக்கவேண்டும். இந்தத்தொழிற் கல்வியானது தாய் பாஷையில் கற்பிக்கப்படும் சாதாரண கல்விக்கு முரண்பட்டு இருக்கக் கூடாது. தொழிற் கல்வியைவிட சாதாரணக் கல்வி மிகவும் கௌரவமுடையதென்று பெற்றோர்கள் கருதுகிறார்கள். ஆகையால் பெற்றோர்களுடைய நோக்கங்களில் மாறுதல் ஏற்படவேண்டும்.

இன்று செய்யவேண்டியவை. கீழ்க்கண்ட உபன்யாசங்களுக்கு ஏற்பாடு செய்யவும் :—

1. கைத்தொழில் கல்வி.
2. வர்தா படிப்பு திட்டம்.
3. ஒழிவு நேரங்களை சாமர்த்தியமாக பிரயோஜனப் படுத்துதல்.
4. பள்ளிக்கூடங்களில் விளையாட்டு சங்கங்கள்.
5. சங்கீதமும் சித்திரவேலையும்.
6. விளையாட்டுகளும் அவற்றின் பிரயோசனங்களும்

சித்திரவேலை, கைத்தொழில் காட்சிச்சாலை ஏற்படுத்தவும்.

கல்வியும் கண்ணியமும்

ஆறுவது நாள் :

1940ஞ அக்டோபர்மீ 26உ சனிக்கிழமை

"ஒரு கண்ணியமுள்ள பிரஜை சமூகப் பொறுப்பை உடையவராயும், பொது நன்மைக்காக உழைப்பவராகவும் இருக்கவேண்டும்" (இ. ஸைமன்). ஏராளமான வேலையில்லாத் திண்டாட்டமும், உலகத்தில் ஏற்பட்டிருக்கும் குழப்பமும், சங்கட சமயங்களில் ஜனங்களின் உதவியற்ற தன்மையும் படிப்பை சீர்திருத்தவேண்டிய அவசியத்தைக் குறிக்கின்றன.

கண்ணியமுள்ள பிரஜைகளைத் தயாரிக்கும் படிப்பில் சேர்க்கவேண்டியவை—ஜியாகரபி, ஹிஸ்டரி, இகனமிக்ஸ், ராஜீயம், விஞ்ஞானம், தற்கால சரித்திரப், சமூக சரித்திரம், சித்திர வேலை, இதர தேசங்களிலுள்ள நாகரிகம். இதனால் தேசத்தோடு தேசம் மரியாதையாகவும் பிரியமாகவும் நடந்துகொள்ளும். பள்ளிக்கூடத்தில் இருக்கும்பொழுது பொறுமையையும் கையாளும்படி செய்யவேண்டும். பெரிகிள்ஸ் என்பவர் சொல்வதாவது : "தைரியம் என்பது சுயேச்சை, சுயேச்சை என்பது சுகம், சுகத்தை நாம் அடைவோமாக."

செய்யவேண்டியவை

இந்த உபன்யாசங்களுக்கு ஏற்பாடு செய்யவும் :—

1. பள்ளிக்கூடத்தில் சுயராஜ்யம்.
2. பள்ளிக்கூட சங்கங்களில் பையன்களில் தலைமை.
3. தகுந்த கண்ணிய புருஷனைத் தயாரித்தல்.
4. தேச பரிபாலன சட்டங்களும் கடமைகளும்.
5. தேச பாஷையும் கண்ணியமும்.
6. ராணுவப் பயிற்சியும் பதவிகளும் ஏற்படுத்தவும்.

1. பள்ளிக்கூட சட்டங்களையும் ஒழுங்குமுறைகளையும் அமுலில் கொண்டுவர பையன்களின் சபை.

2. பையன்களின் பார்லிமெண்டும், சுற்றுப்புறத்திற்கு வேண்டிய தேச பரிபாலனத்தைப்பற்றி வாதம்.

3. பையன்களைக்கொண்டு உபன்யாசம் :—

(a) கண்ணியமுள்ள பிரஜைகளின் கடமைகள்.

(b) நம் சுற்றுப்புறங்களை சீர்திருத்த என்ன செய்யலாம்.

4. சுகாதாரக் கோஷ்டிகள்.

5. ஜனங்களுக்கு சுகாதார விதிகளை போதிக்கவேண்டி சாரணர்கள்.

6. பொது ஜனங்களுக்கு முன் ஜாக்கிரதையைப்பற்றியும், ரஸ்தா விதிகளைப்பற்றியும் தெரிவிக்கவேண்டி கோஷ்டிகள்.

7. வீட்டிற்கும் பள்ளிக்கூடத்திற்கும் நெருக்கமான பழக்கம் ஏற்பட பள்ளிக்கூட சபையாவது அல்லது பெற்றோர் சங்கமாவது ஆரம்பித்தல்.

கல்வியும் தற்கால சங்கட நிலைமையின் தாக்குதலும்

ஏழாவது நாள் :—

1940-ஆம் அக்டோபர் மீ 27உ ஞாயிற்றுக்கிழமை

உலகில் யாரும் சண்டையை விரும்பவில்லை. ராணுவப்படைகளின் சத்தத்தையும், ஆகாய விமானங்களின் சத்தத்தையும் நாம் இன்று கேட்கிறோம். விஞ்ஞான சாஸ்திரம் யுத்தத்திற்கு ஆயுதங்களைச் செய்ய உதவி புரிந்திருக்கிறது. அதன் கெடுதல்களை நாம் இப்பொழுது நேரில் பார்க்கின்றோம்.

எங்கு பார்த்தாலும் சமரச நோக்கம்வேண்டும் என்ற கூச்சலாக இருக்கிறது. படிப்பு சொல்லிக் கொடுப்பவர் உலக நன்மைக்காகவும், சமாதானத்திற்காகவும், தேசங்களுக்குள் ஒற்றுமைக்காகவும் என்ன செய்யக்கூடும் ?

தற்போது வேண்டியது என்னவென்றால் மானிட சங்கங்களின் அபிவிருத்திக்கும் ஒற்றுமைக்கும் சாதகமான உணர்ச்சி ஏற்படும்படியாக தேச சரித்திரங்களை புதுப்பிக்கவேண்டும்.

அன்யோன்ய க்ஷேமலாபங்களை விரும்பும்படி மாணவர்களுக்குப் போதிக்கவேண்டும்.

சமூக நிலைமைக்கு தக்கவாறு தீர்க்கயோசனை செய்யப் பழக வேண்டும். தேசபக்தி சமாதானத்திலும், நியாயத்திலும் சிநேகப் பான்மையிலும் செல்லுமாறு கல்வி அமைக்கப்படவேண்டும்.

செய்ய வேண்டியவை

உபன்யாசங்களுக்கு ஏற்பாடு செய்யவும்:—

1. நம் தேசத்தின் அபிவிருத்திக்கு இதர தேசங்கள் என்ன செய்திருக்கின்றன.

2. இதர தேசங்களிலிருந்து நாம் என்ன அடைகிறோம் அவைகளுக்கு நாம் என்ன கொடுக்கிறோம்.

3. பூகோளத்தைப்பற்றிய அறிவும் தேசங்களுக்குள் நேசப்பான்மையும்.

4. சரித்திர ஆராய்ச்சியும் நல்லெண்ணத்தை அபிவிருத்தி செய்யவேண்டிவ பிரயத்தனங்களும்.

5. ஜூனியர் செஞ்சிலுவைச் சங்கமும் தேசங்களுக்குப் பரஸ்பர நேசமும்.

6. சாரணீயம்.

7. உலக சமரசத்திற்காக பாடுபட்ட உயர்ந்த மனிதர்களின் சரித்திரக் கதைகள்.

ஏற்படுத்தவும்:—

1. ஒருவருக்கொருவர் நேசத்தோடு இருப்பதாக உறுதி கூறும் பற்பல தேசங்களைக் குறிக்கும்படி பையன்களைக்கொண்டு நடித்தல்.

2. பல தேசங்களின் தேசீய கீதங்களைப் பாடுதல்.

உங்கள் பள்ளிக்கூடங்களில் ஜூனியர் செஞ்சிலுவை சங்கங்கள்.

ஒரு மரத்தை நடுங்கள். எல்லாரும் இந்த காரியத்தில் ஈடுபடட்டும். உலக சிநேகப்பான்மையின் முக்கியத்தைப்பற்றி பையன்கள் பேசவேண்டும்.

சமாதானமும் யுத்தத்தின் கோரங்களும்

உலக சமாதானத்திற்காக பிரத்தியேக பிரார்த்தனைகளை நடத்தவும்.

சாரணீயமும் கல்வியும்

எஸ். ஆர். வெங்கட்ராமன், பி. எ., பி. எல்.
ஹெட்குவாட்டர்ஸ் கமிஷனர், ஹிந்துஸ்தான் சாரணச்சங்கம்.

நமது பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்கள் சிறு பிள்ளைகளுக்குக் கல்வி, நன்னடத்தை, நல்லொழுக்கம் இவற்றைக் கற்றுக்கொடுக்கின்றனர். இத்துறையில் உபாத்தியாயர்களுக்கு சாரணீயம் மிகவும் ஒத்தாசையாயிருக்கிறது என்பது யாவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விஷயம். சாரணப் படைகளைச் சாதாரணமாகப் பள்ளிக்கூடங்களிலேயே உபாத்தியாயர்களால் நடத்தி வருகின்றனர். பள்ளிக்கு வெளியிலும் நடத்தி வருகின்றனர்.

தற்காலத்தில், "ஏட்டுச்சுரைக்காய் கரிக்குதவாது" என்பது போல, புத்தகப்படிப்பு மாத்திரம் போதாது. நமது சிறுவர்களுக்கு நல்ல பழக்கம் ஏற்படவேண்டியது அவசியம். இதற்குச் சுரணீயம் உதவியாயிருக்கிறது. பள்ளிக்கூடம் போகாத வேளையில், ஒய்வு நேரங்களில் சிறுவர்களுக்குச் சாரணப் பயிற்சியால் அவர்கள் நல்ல தேகசுகத்தையும் மனச் சந்தோஷத்தையும் நல்ல நடத்தையும் பெறுகிறார்கள். சிறுவர்களின் மனதைக் கவரும்படியான முறையிலே சாரணப் பயிற்சித் திட்டம் அமைந்திருக்கிறது. குழந்தைகள் கூச்சலிட்டுக்கத்தி விளையாடவும் ஓடவும் ஆடவும், அவரவர்கள் சாமர்த்தியத்திற் கேற்றவாறு வேலைகளைத் தம் கையால்செய்து பழகவும் சாரணீயத்தில் இடமுண்டு. சிறுவர்கள் விஷமம் நிறைந்தவர்கள். அந்த விஷமம் என்பது அவர்கள் மனதில் நிறைந்து ததும்பும் ஆவேசம், அவர்களுடைய அவயவங்கள் துரு துருவென்று எதைச்செய்யலாம் என்று பதரும் சமயம். அச்சமயத்தில் நாம் சாரணப் பயிற்சியினாலே அவர்களின் உணர்ச்சியையும் நடவடிக்கையையும் பயன்தரக்கூடிய வழியில் திருப்பலாம். இதனால் சிறுவர்களுக்கு,

(1) தேக திடம்,
(2) நல்லொழுக்கம், நன்னடத்தை,
(3) கைத்தொழிற் பழக்கம்
(4) சமூகசேவை, போன்ற குணங்கள் ஏற்படுகின்றன.

பிற்காலத்தில் அவர்கள் நல்லபிரஜைகளாக விளங்க இடமேற்படுகிறது. நாகரிகம் மிகுந்த இக்காலத்திலேஜனங்களின் மனோபாவம், பழக்கம் சமூகத்தின் நிலைமை இவையெல்லாம் நாளுக்குநாள் மாறிவருகின்றன. வாழ்க்கையில் ஏற்படும் பல கஷ்டங்களையும் நாம் வருத்தமில்லாமல் சமாளிக்கும் சக்தியற்றவர்களாக இருக்கிறோம். வழக்கமாய் அனுபவிக்கும் பலவித செளகரியங்களில் ஏதேனும் ஒன்று குறைந்துவிட்டால், நாம் துன்பப்படுகிறோம். கடினவாழ்வு, சுருசுருப்பான வாழ்வு, ஆடம்பர

மற்ற, எளியநடையுடை பாவனை, கைத்தொழிற் பழக்கம், எவ்விதக் கஷ்டத்திலும் மனந்தளராமல் குதூஹலமாயிருப்பது, இவைகளெல்லாம் சிறுவயதில் நமக்கு சகஜமாக ஏற்படாததால், பிற்காலத்தில் நமக்கு ஏற்படும் அற்ப அசௌகரியங்களைக்கண்டு அவற்றைத் தாளமுடியாமல், 'உலகமே முழுகிவிட்டது, உலகில் இனி வாழ்வதில் பயனில்லை' என்ற அதைரியம், உண்டாகிறது. இந்த மனோபாவமுள்ள ஜனசமூகம் ஒரு மகத்தான வேலையை எப்போதும் செய்யமுடியாது. உலக வாழ்க்கைக்கு வேண்டிய பயிற்சி நமக்கு வீட்டிலாவது, பள்ளிக்கூடத்திலாவது, முழுதும் கிடைப்பது தற்காலத்தில் அரிதாயிருக்கிறது.

பள்ளிக்கூடங்களிலும் வீடுகளிலும் கழிக்கும் நேரம்போக மற்ற நேரத்தைச் சிறுவர்கள் நல்லவழியில் கழித்து நல்ல பயிற்சிபெறவே சாரணீயம் ஏற்பட்டது.

ஒரு மாணவன் ஒரு வாரத்தில் சராசரி 70 மணி நேரம் தூக்கத்திலும், 25 பள்ளிக்கூடத்திலும், 14 சாப்பாட்டிலும், மீதி 59 மணி நேரத்தை வெளியில் தன் நண்பர்களுடன் கழிக்கிறான். இந்த 59 மணி நேரத்தில் சிறுவர்களுக்கு வாழ்க்கைக்குவேண்டிய அவசியமான பயிற்சியைகல்வி முறையிலே, பையன்களின் மனதைக்கவரும் முறையிலே சாரணீயம் போதிக்கிறது. இதனால் பள்ளிக்கூடப்பாடத்தில் சிறுவர்கள் மேம்பாடடைவதுடன், வீட்டிலும் நல்லொழுக்கத்துடன் நடந்துகொண்டு பெற்றோர்களுக்கு உதவிசெய்து அவர்களுக்குச் சந்தோஷத்தையுண்டாக்க வழி ஏற்படுகிறது. சாரணீயத்தில் கற்றுக்கொடுக்கும்படியான விஷயங்களை நான்காகப் பிரிக்கலாம் என்று சொன்னேன்.

1. **தேகதிடம்.** நாம் சுகவாழ்வு வாழவேண்டுமானால் தேக பலம் வேண்டும். ஆரோக்ய வழிகளை அறியவேண்டுவது அவசியம். சாரண விளையாட்டுக்கள், காடுகளில் வெட்ட வெளியில் பாளையம் போட்டுக் காலத்தைக் கழிப்பதாலும் நமக்கு தேகதிடம் ஏற்படுகிறது. தனக்கு ஆரோக்யத்தைக் கொடுக்கும் உணவைத் தயார்செய்து சாப்பிடவும் ஒரு சாரணன் கற்றுக்கொள்ளுகிறான், முதலுதவியும் அவனுக்குத்தெரியும், இன்னும் பல தேகப்பயிற்சிகளும் அவனுக்குத் தெரியும். இவற்றினால் தேகபலம் ஏற்படுகிறது.

2. **நல்லொழுக்கம்.—நன்னடத்தை:**—நல்ல நடத்தையால் நாம் பல வேலைகளில் வெற்றிபெறலாம். மரியாதை, பெருந்தன்மை, நியாயம், பொறுமை, ஒரு காரியத்தில் மனந்தளராமை, பொறுப்பு, தைரியம், கீழ்படிதல், உத்ஸாகம், பிறர் உதவியை எதிர் பாராது தன் வேலையைத் தானே செய்துகொள்ளுதல், தன்னலங் கருதாமை, போன்ற குணங்களெல்லாம் அவர்களுக்குச் சாரணப்பயிற்சியில் பழக்கத்தில் ஏற்படுகின்றன.

3. **கைத்தொழிற் பழக்கம்.** நமது நாட்டில் இலக்கியப் படிப்பு வேலையில்லா திண்டாட்டத்தை உண்டாக்கி யிருக்கிறது. குமாஸ்தா

வேலை கிடைக்காத ஒரு படித்த சிறுவன் தன்கையினுல் ஏதாவது ஒரு சாமானைச்செய்து அதனுல் ஜீவனம் செய்யத் தற்காலத்தில் முடியாது. இக்குறையை நாம் ஒருவாறு சாரணீயத்தில் ஒழிக்கலாம். சாரணீயத்தில் பயிற்சியெல்லாம் நடை முறையிலேயே செய்துகாட்டப் படுகிறது. முதலுதவி செய்யவும், சித்திரம் வரையவும், தச்சுவேலை செய்யவும், புகைப்படம் பிடிக்கவும், இன்னும் சிறுவர்களுக்கு வாழ்க்கையில் உபயோகப்படும் பல கைத்தொழிற் பயிற்சியையும் சாரணீயத்தில் சிறுவர்களுக்கு நாம் புகட்டலாம். இவ்விதமாகப் பல கைத்தொழில்களைப் புகட்டுவதால், சிறுவர்கள் தங்கள் சாமர்த்தியத்தை சில கைத்தொழில்களில் காட்டலாம். அதில் அதிகமான தேர்ச்சியடைந்து, அத்தொழிலையே தமது வாழ்க்கைத்தொழிலாகவும் ஏற்றுக்கொள்ளலாம். இதனுல் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியும்.

4. சமூக சேவை :—படித்தவனுக்கு அடையாளம், அவன் தன் சமூகத்தின் நலத்தில் அக்கரையுள்ளவனுயென்பதுதான். சமூகம் பல ஜாதிகளைக்கொண்டது, பல வகுப்பாரைக்கொண்டது, எல்லாரும் பரஸ்பர பாவத்துடன் ஒத்துழைக்கவேண்டும். ஜாதி துவேஷம், வகுப்பு துவேஷம், ஒன்றும் இல்லாமல் அச்சமூகத்தார் வசித்தால்தான் யாவருக்கும் நன்மை ஏற்படும். இந்த ஒரு பரந்த நோக்கம். சமரச மனோபாவம், சமூகத்தில் எல்லாருக்கும் சேவைசெய்யும் உணர்ச்சி இவையெல்லாம் ஒருசிறுவனுக்குச் சிறு வயதிலிருந்தே உண்டாகவேண்டும். அந்தப் பயிற்சியைச் சாரணீயம் கொடுக்கிறது. மற்றும், நமது நாட்டின் பழமை, நாகரிகம், கல்வி, காலாசாரம் இவற்றினிடம் சாரணர்களுக்கு ஒரு அழியா அன்பும் ஆர்வமும் உண்டாகிறது. ஒவ்வொருவனுக்கும் தன் தாய் நாட்டிடத்து அன்பு ஏற்படுகிறது. ஒவ்வொரு சாரணனும் தன் நாட்டின் முன்னேற்றத்திற்காக உழைக்கவேண்டுமென்று ஆவல் கொள்கிருன். இதனுல் அவனிடம் சிறுவயது முதற்கொண்டே பொது நல உணர்ச்சி வளர்கிறது.

ஒரு பையனைப் பள்ளிக்கனுப்புவதால் என்னென்ன நன்மைகளை நாம் எதிர் பார்க்கிருேமோ, அதைப்போன்ற பல நன்மைகளை நாம் சாரணீயத்தால் அடையலாம். பள்ளிக்கூடத்திற்குப் பையன்களை அனுப்புவதால் என்ன செலவாகுமோ அதில் பத்தில் ஒரு பங்குகூட சாரணப் பயிற்சிக்கு ஆகாது. சாரணீயத்தில் பள்ளிக்கூடப் படிப்பிற்கு அனுகூலமான பல விஷயங்களையே கற்றுக்கொடுக்கிருர்கள். ஆதலால் சாரணீயமும் பள்ளிக்கூடப் படிப்பும் ஒன்றிற்கொன்று ஆதரவாக இருக்கின்றன. சாரணப் பயிற்சியெல்லாம் இலவசமாகவே கொடுக்கப்படுகிறது. சிறுவர்களுக்கு தேசாபிமானம் முதலிய நற்குணங்கள் ஏற்படுகின்றன. தற்காலப் படிப்பு முறையில் உள்ள குறைகளை நீக்குவதற்குச் சாரணீயம் ஒரு ஏற்றமுறை. அதை உபாத்தியாயர்களும், பெற்றோர்களும், நமது நாட்டின் முன்னேற்றத்தில் உள்ள பல பொது நல ஊழியர்களும் ஆதரிக்கவேண்டியது அவசியம்.

பள்ளிக்கூடத்திற்குமுன் படிப்பு *

உபாத்யாய சங்க கார்ய ப்ரவீண
ஸ்ரீமான் S. K. யெக்ஞ நாராயண அய்யர் எம்., ஏ.

மார்க்கண்டேய சரித்திரம் நம்நாட்டில் வெகுகாலமாய் வழங்கி வரும் கதை. அதில் ஒரு விஷயம் கவனிக்கத்தக்கது. வெகுநாள் பிள்ளையில்லாமல் வருந்தி பிள்ளைபெற தவம் செய்த மிருகண்டு மக ரிஷிக்கு பகவான் பிரத்தியக்ஷமாகி 'அப்பா உமக்கு 100 வயது வரை இருக்கும் அசட்டுப்பிள்ளை வேண்டுமா, அல்லது 16 வயதில் இறந்து போய்விடும் சமத்துப்பிள்ளை வேண்டுமா?' என்று கேட்டபொழுது அம் முனிவர் அல்ப ஆயுளில் போனாலும் சமத்துக்குழந்தைதான் வேண்டும் என்று வரம் கேட்டாராம். இது இயற்கை. பெற்றோர் ஒவ்வொருவரும் தம் குழந்தை புத்திசாலியாயிருக்க வேண்டுமென்றுதான் விரும்பு கிறார்கள். ஆனால் அப்படி புத்திசாலியாக குழந்தை வளரவேண்டு மானால் தாய்தகப்பன் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அது எவ்விதம் முயற்சி செய்வது என்பதுதான் பிரச்னை.

குழந்தைகளின் இளமைப்பருவத்தை அநேக பாகங்களாக பங் கிட்டு ஒவ்வொரு பாகத்திலும் அவர் மனப்பான்மை யாது? அவருடன் எப்படி முதியோர் நடந்துகொள்ள வேண்டும்? என்ற விஷயத்தை மேல் நாட்டு பண்டிதர்கள் விமர்சையாய் ஆராய்ச்சி செய்து இருக்கிறார்கள். 2½ வயது முதல் ஐந்து வயது வரை உள்ள பருவத்தை கேள்விகேட் கும் தசை என்று சொல்லுகிறார்கள். இந்த வயதில்தான் குழந்தையின் ஞானம் கொஞ்சம் கொஞ்சமாக அபிவிருத்தி அடையத் தொடங்கு கிறது. 'அது என்ன? இது எப்படி? அது ஏன் அப்படி இருக்கு' என்று ஓயாமல் குழந்தைகள் கேள்வி கேட்டுக்கொண்டே யிருக்கும். அந்த கேள்விகளுக்கு சரியான பதில் சொல்ல சாதாரண பெற்றோர் களுக்கு அறிவும் போதாது; பொறுமையும் கிடையாது. இது எல் லோருக்கும் அனுபவம்தான். ஆனாலும் என்னுடைய அனுபவத்தில் ஒரு சிறு விஷயத்தை சொல்லுகிறேன். என் குழந்தைகளில் ஒருவன் 3 வயது பிராயமாக இருக்கும்பொழுது திருநாளுக்கு கோவிலுக்குப் போயிருந்தோம். அங்கே ஒரு யானை நின்றுகொண்டிருந்தது. அதை சற்று உற்று பார்த்துவிட்டு பையன் தாயாரை நோக்கி, 'அம்மா, நமக் கெல்லாம் கால் நீளமாய் இருக்கே, யானைக்கு மாத்திரம் ஏன் வட்டமா யிருக்கு?' என்று கேட்க அம்மையாரும், 'எனக்குத் தெரியாது, உன்

---

* திருச்சி அகில இந்திய ரேடியோவின் அனுமதியுடன்.

அப்பாவைக்கேள் என்றாள்' பையன் என்னை கேட்டான். நானும் சற்று நேரம் விழி விழி என்று விழித்துவிட்டு, அதை அப்படி கடவுள் படைத்தார் என்று பதில் சொன்னேன். அது சரியான சமாதானமென்று எனக்கு அப்பொழுதும் படவில்லை. இப்பொழுதும் படவில்லை. இது போல எத்தனையோ பெற்றோர்கள் திண்டாடி இருப்பார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

சில பெற்றோர்கள் இந்த தொல்லை பொறுக்க முடியாதென்று குழந்தைகளை மிகச் சிறு வயதிலேயே பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி விடுகிறார்கள். அது தவறான காரியம். மேனாட்டில் இப்படி சிறுவயது குழந்தைகளுக்கென்று தனியாக நர்ஸரி ஸ்கூல் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அப் பள்ளிகளில் தினசரி எல்லாம் வீட்டில் நடப்பதுபோலவே தானிருக்கும். குழந்தைகளுக்கு பல் விளக்கக் கற்றுக்கொடுத்து, ஸ்நானம் பண்ணிவைத்து, ஊண் உறக்கம் முதலியவைகளை, காலாகாலத்தில் நடத்திவைத்து, பாக்கிவேளைகளில் அவர்கள்உற்சாகமாக விளையாட வேண்டிய கருவிகளைக்கொடுத்து குழந்தைகள் எப்பொழுதும் சந்தோஷமாக இருக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. நம் நாட்டில் அதுபோன்ற சௌகரியங்கள் பெரிய நகரங்களில் சிலவற்றில் தானிருக்கின்றன. அதனால் கேள்வி கேட்கும் தசையில் குழந்தைகளை சரியாக வளர்த்தவேண்டும் கடமை பெற்றோர்களைச் சேர்ந்ததேயாகும்.

ஏன் இந்தத் தொந்திரவு, நம் முன்னோர்கள் எல்லாம் இந்த அல்ப விஷயத்தை இவ்வளவு பிரமாதமாக்கி வந்தார்களா? நமது முப்பாட்டன், பாட்டன் வளர்ந்ததுபோல் நமது குழந்தைகளும் வளரலாகுமே. எதற்காக இந்த தனி முயற்சி என்று சிலர் ஆக்ஷேபிக்கக்கூடும். இதற்குச் சமாதானம் 'நாகரிகம்வாய்ந்த நாடுகளில் மனோசாஸ்திரம் நாளுக்கு நாள் அபிவிருத்தி அடைந்துவருகிறது. அதிலும் சிசுக்களின் மனோபாவத்தை தனியாக கவனித்து ஆராய்ச்சி செய்துவருகிறார்கள். அந்த சாஸ்திரங்கள் அபிவிருத்தி அடைய அடைய அதை ஒட்டியே போதனா முறைகளும் மாற்றமடைகின்றன. நாம் மாத்திரம் அந்த சாஸ்திரங்கள் எல்லாம் எங்களுக்குத் தேவையில்லை. நாங்கள் பண்டைய சம்பிரதாயத்தைக் கைவிடமாட்டோம் என்று சொல்வது பேதமையாகும். அதனால் எப்படி புகைவண்டி, தந்தி, தபால், மோட்டார்வண்டி, முதலிய நாகரிக சாதனங்களை கையாண்டு நாமும் சௌகரியங்களை பெற்று வருகின்றோமோ, அதுபோல மனோதத்துவ சாஸ்திரத்திலும் மேல்நாட்டு பண்டிதர்கள் செய்துவரும் ஆராய்ச்சிகளில் பலன்களை நாம் தள்ளிவிடாமல் அனுசரிப்பதுதான் முறை. இதை நிர்த்தாரணம் பண்ண ஒரு உதாரணம், எடுத்துக்கொள்வோம். வீட்டில் குழந்தைகள் தொந்திரவு செய்தால், அவர்களைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிவிடுவது நம் நாட்டுத் தாய்மார்களின் சகஜமான நடத்தை. அநேக பள்ளிக்கூடங்களில் 5 அல்லது 6 வயது பெண்கள் படிக்கும் வகுப்புக்களில் 2 அல்லது

3 வயது சிறுவர் சிறுமிகளையும் பார்க்கலாம். பழய சம்பிரதாயம் பள்ளிக்கூடத்தில் குழந்தைகள் கைகட்டி, வாய்பொத்தி கேட்ட கேள்விக்கு மாத்திரம் பதில் சொல்லிக்கொண்டு மற்ற வேளைகளில் சத்தம் போடாமல் இருக்கவேண்டும். இது குழந்தைகளின் இயற்கைக்கு விரோதம். பறவைகளைப்போல் ஓடி விளையாட வேண்டும்படியான பாப்பாவை அடைத்துப்போட்டால் பாப்பாவுக்கு கோபம்தான்வரும். வாத்தியாரை தன் முக்கிய சத்துரு என்னும் கருத்துவரும். பாப்பாவின் மனப்பான்மையிலேயே ஒரு கரடு உண்டாகிவிடும். இது சமயம் வந்தால் வெளிப்படையாகக் கிளம்பும். இல்லாவிட்டால் உள்ளேயே புகைந்துகொண்டு இருக்கும். ஒருநாள் வாத்தியார் வருவதற்கு முன் சட்டாம்பிள்ளை வந்து கடவுள் வணக்கம் செய்யுங்கள் என்று சொன்னவுடன் குழந்தைகள் எல்லாம் சேர்ந்து, 'நெடுமால் திருமுருகா, நித்தம் நித்தம் இந்தெழவா, வாத்தியார் சாகாரா, நம் வயத்தெரிச்சல் தீராதா' என்று கத்திப் பாடினார்கள். என்று வேடிக்கை கதை சொல்வதுமுண்டு. இந்தக் கதை மனோதத்துவ சாஸ்திரத்தில் முக்கியமாக சிசுக்களின் மனோதத்துவ சாஸ்திரத்தில் விளக்கிக்காட்டும் ஒரு முக்கிய தத்துவத்திற்கு இணையற்ற உதாரணமாகும். அதனால் மனோதத்துவ சாஸ்திரத்தில் புது ஆராய்ச்சிகளுக்கு ஒத்து நம் போதனமுறையை மாற்ற வேண்டியது அவசியம்.

போதனமுறையில் முக்கியமாக இரண்டு பிரிவுகள் உண்டு. ஒன்று குழந்தைக்கு பலிதமான அபிவிருத்தியாக வேண்டிய சௌகரியங்களை கொடுத்து வாத்தியார் பின்னிருந்து மேல்பார்வை மாத்திரம் பார்த்துக்கொண்டு படிக்கும் நாள்வரையில் குழந்தையின் சுய முயற்சியினால் வளரும்படிசெய்தல்; இரண்டாவது, வாத்தியாரே எல்லா விஷயத்திலும் அதை செய், இதை செய்யாதே, என்று உபதேசித்து அந்த உபதேசத்தைப் பின்பற்றி குழந்தையின் அறிவை வளர்த்தால். முதல் வகுப்பை அபிவிருத்தி முறை என்றும், இரண்டாவது உபதேசமுறை என்றும் பண்டிதர்கள் கூறுவார்கள். இந்த இரண்டாவது முறைதான் உலகமெங்கும் பண்டையகாலம் முதல் அமுலிலிருந்து வருவது. அபிவிருத்தி முறை 18-ம் நூற்றாண்டில் ரூஸோ என்ற பெரியார் துவக்கி, பெஸ்டலோஜி, புரோபல் முதலிய பல பெரிய ஆசிரியர்கள் கையாண்டு வரும் முறை. மனோதத்துவ சாஸ்திர பண்டிதர்கள் சிபார்சு செய்து வரும் முறையும் இதுதான்.

ஆனால் உபதேசமுறையை அடியோடு விட்டு விடுவதா? அதில் கொஞ்சம்கூட பிரயோஜனம் இல்லையா? என்றால் அதைவிட்டுவிடக் கூடாது. அதுவும் மிக பிரயோஜனத்தைத் தரும் வழி என்றுதான் அனுபவம் வாய்ந்த பெற்றோர்களும், உபாத்திமார்களும் சொல்வார்கள். அந்த முறையில் விதி நிஷேதம் என்று இரு பிரிவுகள். சிலவற்றை செய் என்றும் வேறு சிலவற்றை செய்யாதே என்றும் இம்முறையை கையாளு

பவர்கள் சொல்லுவார்கள். அறம் செய்ய விரும்பு என்பது விதி. ஈவது விலக்கேல் என்பது நிஷேதம். அதாவது கெட்டவழியில் போகாதே என்று தடுப்பதாகும். ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம் முதலிய புஸ்தகங்கள் எல்லாம் இம்மாதிரி நீதிகளை குழந்தைகளுக்கு புகட்டவேண்டும் என்கிற முக்கிய எண்ணத்துடன் எழுதப் பட்டன.

இவ்விரு முறைகளிலும், எது பெரிது, எது நல்லது, எதை நாம் கைக் கொள்ளவேண்டும் என்ற கேள்விக்கு நாம் முன்னமே விடையளித்துவிட்டோம் இரண்டும் இரண்டு விதம். ஏற்றத்தாழ்வு பார்த்துச் சொல்வது அசாத்தியம். இரண்டையும்தான் கையாளவேண்டும். முக்கியமாக சிறு குழந்தைகள் வேறு குழந்தைகளுடன் சேர்ந்து பழகுவதில் உபதேச முறையை உபாத்தியாயரும் பெற்றோர்களும் கையாளத் தான் வேண்டும். திருவாழத்தான் பூனை வளர்த்த கதை எல்லோருக்கும் தெரியும். அதுபோல சிறு குழந்தைகளும் அநுபவத்தின் பேரில் பல விஷயங்களை தெரிந்து கொள்ளுவார்கள். ஆனால் இது நீடித்த காலத்தில்தான் ஸாத்தியமாகும். ‘பதக்கு குடிச்சால் உழக்கு தங்கு’ மென்கிற பழமொழி தன்னுடைய ஸ்வய அனுபவத்தின்பேரில் நீடித்த காலத்தில் சம்பாதிக்ககூடிய அறிவை உதாகரிக்கும். உபதேசமுறையில் சம்பாதிக்கும் அறிவோ அரைப்படி குடித்தால் அதில் உழக்கு தங்கும் என்பது போலாகும்.

மேலும் சில விஷயங்களை குழந்தைகள் சுவாநுபவத்தினாலேயே தெரிந்துகொள்வது அசாத்தியமாகும். உதாரணமாக நாலு பெரியோர்கள் வந்தால் அவர்களிடம் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதை ஒரு குழந்தை சுவானுபவத்தின்பேரில் கற்றுக்கொள்ளலாம். முடியவே முடியாது என்றில்லை. ஆனால் அப்படி தெரிந்துகொள்ள வெகு நாளாகும். பெற்றோராவது உபாத்தியாயராவது இந்த விஷயத்தை வெகு லகுவாகச் சொல்லிக் கொடுத்துவிடலாம். அப்படிச் சொல்லிக் கொடுத்து ஐந்தாறு முறைகள் அனுஷ்டானத்தில் வந்துவிட்டால் பின்னால் அப்படி நடப்பது குழந்தைகளுக்கு சுவபாவமாகிவிடும்.

ஆனால் சிலர் சந்தேகப்படலாம். இப்படி குழந்தைகளை சுயேச்சையாய் விடாமல் ஒரு நிர்ப்பந்தத்திற்குள்படுத்தி அதிகார முறையில் சொல்லிக்கொடுப்பது நல்லதா? அதனால் குழந்தைகளின் வளர்ச்சி குன்றிபோய் அவர்களுக்கு தீங்கு நேரிடாதா என்ற பிரச்னைக்கு எனக்கு தோன்றியது இரண்டு சமாதானம்.

ஒன்று நமது முன்னோர்களின் அனுபவம். ராஜவத் பஞ்சவர்ஷாணி, தசவர்ஷாணி தாஸவத்—என்ற நீதி சாஸ்திரமுறைப்படி குழந்தைகளை இளம்பருவத்தில் வாஸனைசெய்து வெகு செல்வமாக வளர்த்தாலும், ஐந்தாவது வயதுக்குமேல் கட்டுப்பாட்டுள்படுத்தி வளர்க்க

வேண்டுமென்ற அனுபவம். இதை பூராவும் தள்ளிவிடக்கூடாது. குழந்தைகளுக்கு மனோசரீராரோக்யத்திற்கு கேடு வரும்படியாக சிக்ஷா முறையை அதிகமாக போகவிடாமல் மிதமாய் கையாளுவதுதான் சரி. இரண்டாவது, பெர்ட்ராண்டு ரஸல் என்கிற ஆங்கில தத்துவ சாஸ்திரி படிப்பைப்பற்றி அவர் எழுதி இருக்கும் புஸ்தகத்தில் ஒரு சிறுவன் த்ருட நிச்சயமுள்ளவனாக வளரவேண்டுமானால் அவனிடத்தில் சுதந்திரமும் அடக்கமும் கலந்தே கையாளப்படவேண்டும் என்று கூறியுள்ளார். தவிரவும், குழந்தை பெரியவனானால் பள்ளிக்கூடம் போனால் இந்த உபதேச முறையைக் கையாண்டுதான் அனேக விஷயங்களை கற்றுக்கொள்ள வேண்டும். பூகோள சாஸ்திரத்தை எடுத்துக் கொள்வோம். நமது ராஜ்யத்தின் வட எல்லையில் இமயமலை இருக்கிறதென்றும், அதில் கௌரீ சங்கரம், காஞ்சன சிருங்கம், தவளகிரி, முதலிய நூற்றுக்கணக்கான சிகரங்கள் 25,000 அடிக்குமேல் உயர்ந்தவைகளென்றும், அந்த இமய மலையிலிருந்துதான் சிந்து, யமுனை, கங்கா, பிரும்மபுத்திரா, முதலிய வடதேசத்து முக்கிய நதிகள் உற்பத்தியாகின்றன என்றும் வாத்தியார் சொல்லி, புஸ்தகங்களிலிருந்து படித்து பையன்கள் தெரிந்துகொள்ள வேண்டுமே தவிர, அவன் சுவானுபவத்தினால் தெரிந்துகொள்வது என்றால் லக்ஷத்தில் ஒரு பையனுக்குத்தான் முடியும். அதுபோலவே சரித்திர சம்பந்தமான அறிவும்; புத்தர், அசோகர், அக்பர், சிவசத்திரபதி இவர்கள் இருந்தார்களென்பதை வாத்தியார் சொல்லிக் கேட்டுத் தெரிந்துகொள்வது லகு. சுவானுபவத்தின் பேரில் இதை தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் முடியாத காரியம் என்றே சொல்லலாம். இதுபோல இலக்கியங்களும். அதனால் பின் பள்ளியில் கையாள வேண்டிய இம்முறையை தழுவும் பிள்ளைகளுக்கு சொல்லி வைப்பது நலம்.

அபிவிருத்தி முறை, உபதேச முறை இவ்விரண்டும் அவசியம். பெற்றோர்களும் உபாத்தியாயர்களும், பிள்ளைகளின் மனப்போக்கை சாஸ்திரமுறைப்படி தெரிந்துகொண்டால் எப்பொழுது எந்த முறையைக் கையாள வேண்டுமென்பது அவருக்குச் சொல்லாமலே விளங்கும். இவை இரண்டில் எது மேன்மை என்கிற கேள்வி தப்பு. இரண்டு முறைகளும் அவசியம்தான். வண்டிக்குச் சக்கரங்கள் இரண்டு வேண்டுமென்பது போலவும், குழந்தைகளை செவ்வையாக பாதுகாக்க தாயார் தகப்பனார் இருவரும் வேண்டுமென்பது போலவும் குழந்தைகளை நல்வழிக்கு கொண்டுவர இவ்விரு முறைகளும் அவசியம்தான்.

செய்தித் திரட்டு

தஞ்சாவூர்

கிழக்குக்கோட்டை ஆரம்பப் பாடசாலை

சென்ற ஞாயிறு (6-10-40) எம் கல்லூரியின் "பெற்றோர் சங்க தினவிழா" சீனியர் டிபுயூடி இன்ஸ்பெக்டர் உயர்திருவாளர் T. S கலியாண சுந்தரம் பிள்ளை, B A., L T, அவர்கள் தலைமையின்கீழ் நடந்தேறியது. அதுபோது, காலை 7-30 மணிக்கு மாணவ மாணவிகள் கல்வி சம்பந்தமான அட்டைத் துணுக்குகளை கையிற்பிடித்து ஆசிரியர் சூழ கல்லூரி வட்டம் சுற்றி வந்தனர். எழுத்தறிவு இயக்கமும், கல்வியும் நன்கு பரவவும், பெண்கல்வி வளரவும், வேண்டி பாடல் பாடிக்கொண்டு வலம்வந்தனர். ஆங்காங்கே, பெற்றோர் பலர் பாலர்களை வரவேற்று, ஆசிகூறி, புகைப்படமும் பிடித்தனர்.

மாலையில் தலைவர் மக்கள்பேற்றின் மாண்பையும், கல்வியின் தம் பெற்றோர் சங்கத்தினத்தின் அவசியத்தையும், பெண் கல்வியின் பெருமையையும், பற்றி நன்கு விரிவாக எடுத்துரைத்தனர். வந்தனோபசாரம் கூறவும், கூட்டம் இனிது முடிந்தது.

சேலம் ஜில்லா

ஒசூர் தாலுக்கா போர்டு ஆரம்ப ஆசிரியர்களின் யூனியன்

ஷை யூனியனை ஸ்தாபிக்க 24-2-38 தேதிய GO. 416 ஐ முன்னிட்டு ஷை தாலுக்கா ஜில்லா போர்டு பஞ்சாயத்து போர்டு ஆரம்ப ஆசிரியர்களின் மஹா சபையொன்று 22-9-40 ம் தேதி ஞாயிற்றுக் கிழமை காலை 10-மணிக்கு ஒசூர் போர்டு உயர்தர பாடசாலையில் ஸ்ரீ A. முனுசாமி நாயுடு அவர்களது தலைமையின் கீழ்கூடியது.

யூனியனின் விதிகள் மஹாசபையாரால் நிறைவேற்றப்பட்டன.

அன்றுமாலை 2-மணிக்கு சேலம் ஜில்லா போர்டு பிரசிடெண்டு. கனம் ஸ்ரீ கே. ஏ நாச்சியப்ப கவுண்டர் அவர்களுடைய தலைமையின் கீழ் சபை திறந்து வைக்கப்பட்டது. வந்தனோபசார மளித்தபின் மங்கள வாழ்த்துடன் சங்கம் முடிவுபெற்றது.

திருமங்கலம் தாலுக்கா

போர்டு ஆரம்ப ஆசிரியர்கள் யூனியன் முதல் ஆண்டு விழா

29-9-40-ல் திருமங்கலம் லோக்கல் பண்டு சத்திரத்தில், திருமங்கலம் தாலூகா போர்டு ஆரம்ப ஆசிரியர்கள் யூனியனின் மகா சபைக் கூட்டம் ஸ்ரீ S. சங்கர ரெட்டியார் அவர்கள் தலைமையின் கீழ் அதி விமரிசையாய் நடை பெற்றது. பின் மாலை 3-மணிக்கு மேற்படி யூனியன் முதல் ஆண்டு விழா மதுரை ஜில்லாபோர்டு உபதலைவர் ஸ்ரீ கோ. வேங்கடாசலபதி அவர்களின் தலைமையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது. அவ்வமயம் வேகவதி ஆஸ்ரமம் ஸ்ரீமதி M. B. வேங்கலக்ஷிமி அம்

மாளும், 'பாரதி ஆசிரியர்' ஸ்ரீ R. நாராயணசாமி அவர்களும் 'மாண வர்களும் சமூக சீர்திருத்தமும்' என்பதைப்பற்றியும், ஆரம்பக்கல்வியும் ஆசிரியர் நிலைமையும் என்பதைப்பற்றியும் பேசியபின் தலைவர் முடிவுரைக்குப் பின், கூட்டம் தேசிய வாழ்த்துடன் இனிது கலைந்தது.

முசிரி தாலூகா

தொட்டியம் ஆரம்ப ஆசிரியர் சங்கம்.

மேற்படி சங்கத்தின் மாதாந்திரக்கூட்டம் 14-9-40 தேதி போர்டு உயர்தர ஆரம்பப் பாடசாலையில் உயர் திருவாளர் V. சிங்காரவேலு முதலியார், B. A., L. T., அவர்கள் தலைமையின்கீழ் கூடிற்று. 50 ஆசிரிய ஆசிரியைகளுக்குமேல் ஆஜராகி இருந்தனர்.

மேற்படி சங்கத்தின் ஆதரவின்கீழ் திருசிபுரம் E. R. ஹைஸ்கூல் உதவி ஆசிரியர் உயர்திருவாளர் N. S. நரசிம்ம ஐயங்கார் B. A. L. T. அவர்களால் பூகோளத்தில் முதல் மூன்று வகுப்புக்களுக்கு துரைத்தனத்தரால் ஏற்படுத்தப்பட்ட புதியபாட திட்டத்தைப்பற்றி புனர் போதனுமுறைப் பயிற்சி (Refresher Course) உபந்நியாசம் அநேக படங்களுடன் நடத்தப்பட்டது.

மதுரை தாலுக்கா

ஜில்லாபோர்ட் ஆரம்பப்பாடசாலை ஆசிரியர்கள் ஐக்கியம், மதுரை.

மேற்படி ஐக்கியத்தின் மூன்றும் மகாசபைக்கூட்டம் 7-9-40 சனிக்கிழமை பிற்பகல் 1-45 மணிக்கு மதுரை A. R. ஹைஸ்கூல் ஹாலில் ஸ்ரீ. K. சுந்தரமய்யர் அக்கிராசனத்தின்கீழ் நடந்தேறியது. 140 அங்கத்தினர்கட்கு 119 பேர் ஆஜராகியிருந்தனர். ஆரம்ப ஆசிரியர்களின் நலங்கருதி பல அப்பீல் போர்டுகள் அமைத்துக்கொடுக்குமாறு அரசாங்கத்தினரைக் கேட்டுக்கொள்வதாகவும், மதுரை ஜில்லாபோர்டு ஆசிரியர்களுக்கென ஐக்கிய பாதுகாப்பு நிதியொன்றை ஏற்படுத்திக் கொடுக்கும்படி மதுரை ஜில்லா போர்டு தலைவரைக் கேட்டுக்கொள்வதாகவும் இரு தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின. காரியதரிசி யூனியன் முன்னேற்ற சம்பந்தமான பல விஷயங்கள் கூறவும் 39—40 வருட சந்தா பாக்கி ஜாபிதா வாசிக்கப்பட்டது. சந்தா வசூலிக்கப்படவும், தலைவர் முடிவுரைகூற அடுத்த கூட்டம் 12-10-40ல் கூடுமென அறிவித்ததின் பின் தேசீய கீதத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

சீர்காழி தாலுக்கா

திரவிய சகாய ஆரம்ப ஆசிரியர்களின் யூனியன்

மேற்படி யூனியன் 30-8-40ல் சீர்காழி தாலுக்கா ஆரம்ப ஆசிரியர்களின் மகாநாட்டுக்காக போடப்பட்ட பந்தலில் ஸ்ரீமான் கிருஷ்ண

ர்த்தி முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் ஸ்தாபிக்கப்பட்டது. யூனியன் ஏற்படுத்துவதின் நோக்கத்தையும் அது செவ்வனே நடைபெறுமென பிரார்த்திப்பதாயும் கூறினர். யூனியனின் நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் :

மேற்படி யூனியன் முதல்கூட்டம் 7-9-40 ந்தேதி மாலை 2-30க்கு சீர்காழி **New Hall** லில் ஸ்ரீமான் குப்புசாமி அய்யர் அவர்களின் தலைமையில் கூடியது. யூனியன் நடைபெறவேண்டிய ஒழுங்கு முறைகளைப்பற்றி 10 சட்டங்கள் காரியதரிசியால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. ஒவ்வொரு மெம்பருக்கும் வருட சந்தா அணு இரண்டென்றும் நிர்வாகக் கமிட்டி 3 மாதத்திற்கு ஒருமுறை கூடவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

திருச்செந்தூர் தாலூகா

ஆரம்ப பாடசாலை மானேஜர்கள் சங்கம்.

நாளது ௵ 3-வது கூட்டம் தலைவர் திருவாளர் ப. செந்திலாறுமுகம் பிள்ளையவர்கள் தலைமையில் கூடியது. அவ்வமயம் நிர்வாக மெம்பரும் சங்கத்தின ஆரம்பத்திலிருந்து சங்கத்திற்கு மிகுந்த உழைத்துவந்த திரு. ரா. புதுநயினர் ஆதித்த நாடார் அவர்களுடைய அகால மரணத்திற்காக அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புதிய காரியதரிசியாக பிச்சிவிளை ஸ்ரீ பார்வதி பாடசாலை மானேஜர் திரு. வெ. ஸ்ரீ ரங்கநாதன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

காவல் நகர்

ஆர். சி. ஆண்பாடசாலை மானேஜர் அன்ட் பெற்ருேர் தினக் கொண்டாட்டம்.

செப்டெம்பர் ௴ 12-ந் தேதி காவல்நகர் கத்தோலிக் ஆண் பாடசாலையில் மேனேஜர் தினமும், பெற்ருேர்கள் தினமும் வெகு விமரிசையுடன் வள்ளியூர் ரெவினியூ இன்ஸ்பெக்டர் தலைமையில் கொண்டாடப்பட்டன. 12-ந் தேதி காலை 6 மணிக்கு பாடசாலை மாணவர்கள் ஊர்வலம் சென்ருர்கள். 3 மணிக்கு மேல் பெற்ருேர்கள் தினம் துவக்கி 7 மணிக்குப் பகிரங்கப் பொதுக்கூட்டம். அக்கிராசனர் தம் முடிவுரைப் பிரசங்கத்தில் பெற்ருேர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வி விஷயத்தில் மிகவும் கவனம் செலுத்த வேண்டுமென்று வற்புறுத்தினர்.

பாடசாலை மாணவர்களால் கிறிஸ்தோபரும் சிலுவையும் என்ற சரித்திரம் நாடகமாய் கூடியிருந்த ஜனங்கள் மனம் குதூகலிக்கும் வண்ணம் நடித்துக் காட்டப்பட்டு இரவு $11\frac{1}{2}$ மணிக்குக் கூட்டம் இனிது முடிந்தது.

ஆரம்ப பாடசாலைக்குரிய எமது புதிய தமிழ்ப் பிரசுரங்கள்

சென்னை துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டவை

1939ஆம் வெளியிட்ட பாடதிட்டத்திற்கேற்ப எழுதியவை

நமது தாய்மொழி வாசகம்

ஆசிரியர்

N. பரமசிவ அய்யர், பி.ஏ., எல்.டி.,

முதற் புத்தகம்	....	....	0	2	6
இரண்டாம் புத்தகம்	....	....	0	3	6
மூன்றும் புத்தகம்	....	....	0	4	6
நான்காம் புத்தகம்	....	....	0	5	0
ஐந்தாம் புத்தகம்	....	....	0	6	0

இந்து தேச சரித்திரக் கதைகள்

ஆசிரியர்

C. N. ஏகாம்பர முதலியார், M.A., L.T.

சரித்திர பேராசிரியர், ஆசிரியர் கல்லூரி, சைதாப்பேட்டை.

மாம்பலம் இராமகிருஷ்ண உயர் கலாசாலைச் சரித்திராசிரியர்

S. திருவேங்கடாச்சாரியார், M.A., L.T.

புதிய பாடத் திட்டத்துக்கேற்பப் புதுப்பித்து அமைத்தது

இரண்டாம் புத்தகம் (4-ம் வகுப்பு)	0	4	6
மூன்றும் புத்தகம் (5-ம் வகுப்பு)	0	6	0

நூதன முறை கிண்டர் கார்டன்

தினசரிக் கணக்கு

ஆசிரியர்

டீச்சர்ஸ் காலேஜ் கிண்டர்கார்டன் உதவி ஆசிரியர்

S. ஜகந்நாதன்

இரண்டாம் வகுப்பு	....	....	0	3	6
மூன்றும் வகுப்பு	....	....	0	6	0
நான்காம் வகுப்பு	....	....	0	8	0
ஐந்தாம் வகுப்பு	....	....	0	10	0

பி. ஜி. பால் அண்டு கம்பெனி

4, பிரான்ஸிஸ் ஜோசப்புத் தெரு : : சென்னை

பத்திராதிபர் குறிப்பு

பரீக்ஷை

எட்டாவது வகுப்பு முடிந்ததும் ஒரு மாகாணப் பரீக்ஷை வைக்கப்போவதாக சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்கள். இது சம்பந்தமாகத் தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தலைவரும் பிறரும் தம் அபிப்பிராயங்களைத் தெரிவித்திருப்பதை நேயர்கள் அறிந்திருக்கலாம். பரீக்ஷையொன்று வைக்கவேண்டுமென்று சில வருஷங்களுக்கு முன்பு சர்க்கார் வெளியிட்டுள்ள அறிக்கையில் நாம் கண்டுள்ளோம். அந்த அறிக்கையிலாவது அல்லது இப்போது வெளிவந்துள்ள குறிப்பிலாவது பரீக்ஷையின் நோக்கம் விளக்கப்படவில்லை. மாகாணம் முழுவதும் ஒரே பரீக்ஷை எட்டாவது வகுப்புப்பிள்ளைகளுக்கு வைப்பது உசிதமில்லையென்பது பொதுவாக ஆசிரியர்களின் கொள்கை. மேலும் இவ்வித பரீக்ஷை நடத்துவதால் வீண் சிரமும் பணச்செலவும் ஏற்படுமென்பதில் ஐயமில்லை. இதனுடைய அவசியத்தை விளக்குவது கடினம். செகண்டரி பள்ளிக்கூடங்களில் சேர்வதற்கு இந்தப் பரீக்ஷையைக் கவனிக்கப்போவதில்லையாம். இதுகாறும் பரீக்ஷையொன்று அதிகாரிகளால் நடத்தப்படுவதாகவும் அது திருப்தியானதென்று நினைப்பதற் கில்லையென்றும் பாப்லி துரை அவர்கள் பத்திரிகையில் எழுதியிருக்கிறார்கள். ஹைஸ்கூல் முடிவில் வைக்கும் பரிக்ஷையே ஆங்காங்கு ஜில்லாக்களில் நடத்தவேண்டுமென்று பலர் அபிப்பிராயப்படும்போது, மாகாணப் பரீக்ஷை எட்டாவது வகுப்பிற்கு சரியாவென்று கேட்பது நியாயமே. பரீக்ஷையால் கிடைக்கும் ஸர்டிபிகேட்டை காட்டிலும் பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியர் கொடுக்கும் ஸர்டிபிகேட் மட்டமானதென்ற அபிப்பிராயம் சரியல்ல. டிரெயினிங்குக்குச் சேர்கிறவர்கள் சிலரே. இவர்கள் குறைந்தபக்ஷம் எட்டாவது வகுப்பு முடித்திருக்க வேண்டும். இதற்கு அத்தாக்ஷியாகத் தலைமை உபாத்தியாயரின் மதிப்பு போதாதென்று எவரும் நினைக்கமாட்டார்கள். மேலும் ஹைஸ்கூல் மேல்வகுப்புக்களில் படித்தவர்களைப் பொறுக்கினபின்பே எட்டாவது வகுப்பு முடித்துள்ள மாணவர்களைக் கவனிக்க வேண்டுமென்று சர்க்

கார் விரும்புகின்றனர். ஹைஸ்கூல் மேல்வகுப்புக்களில் படித்தவர் பலர் டிரெயினிங்குக்காகக் காத்திருக்கின்றனர். அதிகப் படிப்புடையவர்கள் ஆரம்பப்பாடசாலை ஆசிரியராக வருதல் அவசியம். எட்டாவது வகுப்பிற்குமேல் படித்தவர்களைத்தான் டிரெயினிங்குக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று சர்க்கார் உத்திரவு போடுவது சரியான முறையாகும். ஆகவே சர்க்கார் தீர்மானித்திருக்கிறபடி பரீக்ஷை நடத்துவதால் பலனொன்றுமில்லை. பரீக்ஷைக்கு பணம் கட்டுதல், பரீக்ஷையெழுத வேறிடம் சென்று பணச்செலவுசெய்தல் முதலியன பிள்ளைகளுக்கு அநாவசியச் செலவு.

மாகாணப் பரிக்ஷையை நடத்துவது சாதாரண காரியமல்ல. கல்வி இலாகா அதிகாரிகள் கவனிக்கவேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன. பல பாஷைகளில் வினாக்கள் கேட்பதும், பையன்களின் விடைகளை மதிப்புப் போடுவதும் ஊரூராய் பரீக்ஷை சரியாக நடக்கிறதாவென மேற்பார்வை பண்ணுவதும் அதிகப் பணச்செலவிற்குக் காரணமாகும். பையன்களிடமிருந்து பணம் எதிர்பாராது சர்க்கார் தமது செலவிலேயே பரீக்ஷை நடத்துவார்களென நாம் நினைப்பதற்கில்லை. பரீக்ஷை ஏன் என்று ஜனங்கள் கேட்பது நியாயமே.

கல்வி வாரம்

இம்மாதம் 21௳ கல்வி வாரம் ஆரம்பமாகின்றது. தமிழ் நாட்டில் ஒவ்வொரு ஆரம்பப் பள்ளிக்கூடத்திலும் ஆசிரியர்கள் கல்வி வாரத்தைக் கொண்டாட வேண்டுமென்பது நமது நோக்கம். இப் பகுதியில் கல்வி வாரத்தைக் கொண்டாடவேண்டிய வகையைப்பற்றிய விவரம் காணப்படும். ஏழு நாட்களும் கொண்டாட முடியாவிட்டாலும், அவ்வாரத்தில் ஒரு நாளிலாகிலும் கல்வியைப்பற்றி ஆரம்ப ஆசிரியர்கள் தம் ஊர்களில் பிரசாரம் செய்வார்களென்று நம்புகிறோம். கல்வி வாரம் இனிது நடக்கவேண்டுமென்று ஆசிகூறி வாழ்த்துச் செய்திகள் அனுப்பி இருக்கும் H. E. கவர்னர் பிரபுவுக்கும், டைரக்டர் அவர்களுக்கும், மற்ற பெரியோருக்கும் நமது வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.